www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# பனிமலர்

இதழ் 8
மார்ச்-ஏப்ரல் 1993



# அரசியற் தீர்வின் ஆதரவாளர்கள் தோல்வியைத் தழுவுவது ஏன்?

£1

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பனிமலர் வாசகர் மன்றம்

## எழுத்துச் சீர்திருத்தம்:

6வது இதழைப் படித்து முடித்ததும் மனஞ் சோர்ந்து போயிற்று. படிக்கவே சலிப்பும் சோர்வுமாக இருந்த தால் பல்லைக் கடித்துக் கொண்டு படிக்கவேண்டியிருந்தது. இதழில் உள்ளடக்கத்துடன் கூடவே உங்களது 'நவீனத்துவ' கிறுக்குத் தனமும் சேர்ந்து மிகவும் துன்புறுத்திவிட்டது. (ஆக்க இலக்கியத்தை இத்தகைய நெருடல்கள் உறுத்தல் களுடன் படிக்க முடியாததால் சிறுகதையை படிக்க வில்லை.) உங்களது தமிழின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி ஒரு இலக்கிய நண்பருடன் பேசியபோது உச்சரிப்புச் சுத்தத்திற்காக 'எழுத்து'வில் (1959-1971) அதன் ஆசிரியர் சி.சு.செல்லப்பா தந்த சீர்திருத்தத்தை அடிப்டையாகக் கொண்டு Kயின் உச்சரிப்புக்கு 'க்'ம், Gயின் உச்சரிப்புக்கு ':க்' எனவும் உபயோகிப்பது சரியானது எனக் குறிப்பிட்டார்.

இவ்வழியில்

*K* - க்
*G* - :க்
*CH* - ச்
*S* - ஸ்
*SH* - ஷ்
*J* - ஜ்
*TH* - த்
*DH* - :த்
*P* - ப்
*B* - :ப்
*F* - ஃப்
*SA* - ஸ
*SHA* - ஷ
*KSHA* - ஃக்ஷ

என்றெல்லாம் தமிழ் எழுத்து வடிவங்களையே உபயோ கிப்பது மூலம் செம்மையாக அயற்சொற்களை உச்சரிக்க/ எழுதலாம் என்று கூறினார். தமிழில் 'கிரந்த எழுத்துக்கள்' எனச் சில எழுத்துக்கள் உள்ளன. இது சமஸ்கிருத மந் திரங்களை சமஸ்கிருத மறியாத பூசாரிகள் செம்மையாக தமிழில் உச்சரிப்புச் சுத்தமாக எழுதி பாடம் பண்ணி மந்திரமோத உபயோகிக்கப்படுவது. இன்னும் கிரந்த எழுத்துக்களில் உள்ள எல்லா 'உச்சரிப்புக்களும்' ஆங்கிலத் திலேயே கிடையாது என்பதனை நீங்கள் அறிந்து கொள்ளவேண்டும். மேலும் ஒரு மொழியின் வளர்ச்சி, சீர்திருத்தம் என்பது இயல்பானதாக அமையவேண்டும். அப்போதுதான் அது இயல்பானதாக ஏற்று கொள்ளப்படும். வலிந்து திணிக்கப்படும் எந்தத் திருத்தமும் மக்களால் புறக்கணிக்கப்படும். (உ-ம்: பஸ்-பேருந்து). நீங்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்காக தமிழ்மொழிப் பரப்பிலேயே முயற்சிகளைச் செய்வதைவிடுத்து, பிறமொழி எழுத்துக்களை எடுத்துப் புகுத்துவதை ஏற்கமுடியாது. இது அபத்தமானதும் அசட்டுத்தனமானதும் ஆகும்.

மேலும், இதனை Typewrittingஇல் செயலாக்குவது சாத்தியமற்ற ஒரு விடயம் என்பதை அனுபவபூர்வமாக நீங்களே உணரு வீர்கள். இது மிக முக்கியமாக கணக்கி லெடுக்க வேண்டிய விடயம்.

இக்கருத்துக்கள் உங்களது சீர்திருத்தம் கண்டஞ்சி அந் நண்பரிடம் பேசியபோது அவர் சுட்டிக் காட்டியவை.

இதனோடு கூட எனது பின்னினைப்பான கருத்துக்களைக் கூறுகிறேன் இந்திரா காந்தியைஇந்Dரா Gாந்Dி என எழுதுகிறீர்கள். இதை இந்டிரா காந்டி எனவாகாதா (Dஎன்பதை Dust, Bual, Pudding ட் என உச்சரிப்பதும் இயல்பானது தானே.) இங்கு Dயை: தி என உச்சரிப்பது எமது முன்னறிவு, உணர்வு காரணமாகவே அல்லவா? இதே உணர்வு தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கும்போது மட்டும்சரியாக உச்சரிக்க உதவாதா?

## மதராஸில் மழைபெய்தால்....

முற்காலத்தில் 'குடை பிடிப்பவர்கள்' என்ற கூற்றினால் பட்டகாயம் திரு சிவசேகரத்துக்கு இன்னமும் வலிக்கிறது போலும். திருப்பி குற்றஞ்சாட்டித் திருப்தியடைவதற்காக ஒரு கண்றாவிக்கு கட்டுரையை (?) எழுதியுள்ளார். (தாங்களே தவறு செய்யின் தாங்குமோ-இத்தாழ்ந்து கெட்ட பூமியே) சிவசேகரம் நல்ல கவிஞர், ரசனை மிகுந்த எழுத்தாளர் என்ற என் மதிப்பீடுகள் மீது சாணி யடித்திருக்கிறார் அவர். ஒரு கட்டுரையைக் கூட நேர்த்தியாக, அழகாக எழுத முடியவில்லையா? எப்பிடி முடியும் பொருட் குற்றம் மையமாகவுள்ளபோது. கம்முனிசர் களை குடைபிடிப்பவர்களாக சமூகம் ஏற்றுக் கொண்டது. அவர்கள் நம் நாட்டின் உயிரோட்டமான சமூக அரசியற் பிரச்சனைகளுக்கு சம்பந்தமற்று வாழ்ந்ததுதான். சி.சி.யால் குற்றஞ் சாட்டப்படுபவர் எவரையும் தம் சமூகத்தின் உயி ரோட்டமான அரசியலிலிருந்து விலகி நின்றதாக குற்றஞ் சாட்டமுடியாது. இது தான் அவர்கள் மீதான குற்றச் சாட்டு முனை மழுங்கக் காரணம். த.வி.கூ முதல் நாற்காலிகள் வரை தத்தம் வர்க்க நலனிலிருந்து தம் செயற்பாடுகளை/பாதையை வகுத்துக் கொண்டனர். அவர்களது உறவுகள் அதன்மீதே அமைந்தன.

இந்நிலையில் வலிந்து கூறப்படும் வாதங்கள் யாவும் உளறல்களாகவே தோன்றுவது தவிர்க்க முடியாதது.

## வரலாறும் தகராறும்

அடுத்தது 'வரலாறும் தகராறும்' கட்டுரையின் அபத்தம். ஒரு வக்கரித்த பார்வையில் வரலாறு என்றிருந்தால் சரி யாக இருந்திருக்கும். ஈழத் தமிழரை மலையாளிகளா என ஆராய்வதை விடவும் மலையாளிகள் யார் என ஆராய்வது அவசியமானது. அதேபோலவே திருநெல்வேலி, கன்னியாகுமரி, நாகர் கோவில் பகுதி தமிழர்களுடன் எம்மையும் ஒப்பு நோக்கி ஆராய்வது அவசியமானது. இப்படி உண்மையை தேட ஒரு சமூகவியல், மொழியியல் ஆய்வைச் செய்வதை விட மாதொருபாகன் போல தமாஷ் பண்ணுவதுதான் இவருக்கு நோக்கமாக உள்ளது.

மாமனை முறை மாப்பிளளையாகக் கொள்வது என்பது சமூக வளர்ச்சியின் ஒரு கட்டத்தைச் சேர்ந்த வழக்கம். இது நம்மிடம் அற்றுப்போன விடயம் என்றால் தமிழ கத்தில் அற்றுப்போகும் - போய்க் கொண்டிருக்கும் விடயம். எழுத்தாளர் குறைந்தது ராகுல்ஜியின் "வால்கா விலிருந்து கங்கை வரை" யாவது படிப்பது நல்லது. அதேபோலவே உணவு முறைகள், அவற்றில் ஏற்படும் மாறுதல்கள் உற்பத்தி முறைகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களாகும். நமது சாம்பாரும் அவர்களது சாம்பா ரும் வேறுபடுவது அவர்களது விவசாய உற்பத்திச் சக்தி கள் தாழ்வானதொரு மட்டத்தில் நிலவுவதன் காரண மாகவேயாகும். நண்பருக்கு தமிழகத்தின் சிலபகுதி களில் பிரதான உணவாக கம்பங்களி (கம்பு என்ற தானியத்தி லிருந்து செய்யப்படும் உணவு) தான் உள்ளது என்பதும், சோறு ஒரு ஆடம்பர உணவாக உள்ளதும் தெரியுமா? அப்படியே குழல்புட்டு பற்றிப் பேசமுன்பு 'பிட்டுக்கு மண் சுமந்த கதை'யை ஒரு தடவை நினைத்துப் பார்க்கவும்.

மொழியும் இனமும் இடையறாது வளர்ந்து செல்வன. ஒரு இனமாக, ஒரு வளர்ச்சி நிலையிலிருந்து புராதன தமிழர்கள் கால ஓட்டத்தில் வேறுபாடு தோன்றுவதும் - அவை அவர்களை அடையாளப்படுத்துவது இயல்பான தாகும். இது பொதுத் தன்மையையும் பொதுமூலத்தையும் மறுப்பதாகாது. (தொடர்ச்சி 29ஆம் பக்கம்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## ஊரிலும்
## உலகிலும்

### நா.சண்முகதாசன்

'சண்' என்று பரவலாக அறியப்பட்ட நா.சண்முகதாசனின் வாழ்வு முடிந்துவிட்டது. பல்கலைக்கழக மாணவப் பருவத்தில் இலங்கையில் தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பங்கேற்று, ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக அவ்வியக்கத்துடன் பிணைந்து நின்ற 'சண்' தனது 74வது வயதில் மரணமடைந்தார். இலங்கையின் இடதுசாரி இயக்கம் பற்றியும் தமிழர் பிரச்சனை பற்றியும் அவருடன் சம்பாசித்து, அதனை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பிய எமது நோக்கம் சாத்தியமற்றுப் போயிற்று. அவரது ஐம்பதாண்டு கால அரசியல் வாழ்வு, எதிர்காலத்தில் இலங்கையின் ஜனநாயகப் புரட்சியை முன்னெடுக்க விரும்புபவர்களுக்கும், தொழிலாளி இயக்கத்தின் வெற்றியை அவாவுபவர்களுக்கும் முக்கியமானதொரு படிப்பினையாகும்.

ஸ்ராலினின் மரணத்தின் பின்னர் சர்வதேசக் கம்யூனிஸ இயக்கத்தில் ஏற்பட்ட பிளவில் சரியான பாதையைக் கடைப்பிடித்தவர் சண்முகதாசன். 60களில் சாதியமைப்புக்கு எதிராக 'சண்' தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் கட்சி தொடுத்த போராட்டம், கட்சியை வடக்கில் பலமானதொரு சக்தியாக வளர்த்தெடுத்தது. தமிழ் மக்களின் தேசிய இன உருவாக்கத்திற்கு அகநிலைத் தடையாகவிருந்த சாதியமைப்பைத் தகர்த்ததன் மூலம் தமிழ்த் தேசிய இனத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை இக்கட்சி வழங்கியது.

இப்போராட்ட வெற்றியின் உச்சம் கட்சியின் சிதைவின் ஆரம்பமாயிற்று. போராட்டத்தின் அடுத்த கட்டம் என்ன என்ற தெளிவு எவருக்குமிருக்கவில்லை என்பதை விடவும் இலங்கையின் ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கம் என்ன என்ற அறிவே இருக்கவில்லை என்பதே உண்மையாகும். சீனதேசத்தின் ஜனநாயகப் புரட்சி நிலப்பிரபுக்கள், யுத்தப் பிரபுக்களின் அதிகாரத்திற்கு எதிரான விவசாயிகளின் இயக்கமாகவிருந்தது. இலங்கையின் ஜனநாயகப் புரட்சியின் உள்ளடக்கமோ, இன ஒடுக்கு முறையின் மீது கட்டப்பட்ட அரசமைப்பினைத் தகர்த்து, ஒடுக்கப்பட்ட இனத்தின் விடுதலையை - இன சமத்துவத்தை நிலைநாட்டுவதாக இருக்கிறது.

இந்த உள்ளடக்கத்தை 'சண்'ணும் அவர் தலைமை தாங்கிய இயக்கமும் புரிந்து கொள்ளத் தவறியதே இலங்கையில் சிங்களத் தொழிலாளி வர்க்கம் பேரினவாதத்தின் பின்னாலும் தமிழ்த் தொழிலாளிகள் குறுமினவாதத்தின் பின்னாலும் அணிதிரண்டதற்கான பிரதான காரணமாகும். துரதிஸ்டவசமாக தனது இறுதிக்காலம் வரையும் 'சண்' இதனைப் புரிந்து கொள்ளவேயில்லை. எனினும் அவர் சாதிக்கத் தவறியவை, சாதிக்க வேண்டியவற்றிற்கு முன்னுரையாக இருக்கும்.

### விடுதலைப்புலிகள்
### முஸ்லிம்களுக்கு வழங்கிய 'பாதுகாப்பு'!

அண்மையில் 'BBC தமிழோசைக்கு அளித்த பேட்டியில், விடுதலைப்புலிகள் அமைப்பின் முஸ்லிம்கள் தொடர்பான நிலைப்பாட்டையும், அவர்களை வடமாகாணத்திலிருந்து வெளியேற்றியதற்கான காரணத்தையும் அதன் தலைவர் பிரபாகரன் விளக்கியிருக்கிறார். முஸ்லிம் மக்கள் பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன என்ற கேள்விக்கு அவர் அளித்த பதில் வருமாறு, "முஸ்லிம் மக்கள் தனித்துவப் பண்பாடுடைய ஓர் இனக்குழு என்ற வகையில் அவர்களது பிரச்சனை அணுகப்பட வேண்டும். முஸ்லிம் மக்களின் தனித்துவம், நில உரிமைப்பாடு பேணப்படும் அதேவேளை அவர்கள் தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து வாழ்வதே அவர்களது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வைச் சிறப்பிக்கும் என நாம் கருதுகின்றோம். சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல் வாதிகளும் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும், விரோதத்தையும் வளர்த்துவிட முயற்சிக்கிறார்கள். இந்த சூழ்ச்சிகளுக்கு முஸ்லிம் மக்கள் பலிக்கடா ஆகக் கூடாது."

யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லிம் மக்களை ஏன் வெளியேற்றினீர்கள் என்று கேட்டதற்கு, "90ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் இனக்கலவரம் வெடித்துப் பெரும் தொகையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட பொழுது யாழ்ப்பாணத்தில் கலவரம் பரவும் ஆபத்து எழுந்தது. அந்த வேளையில் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பைக் கருதி நாம்

பனிமலர் - 8
மார்ச்-ஏப்ரல், 1993

தொடர்புகளுக்கு:
BM PANIMALAR
LONDON.
WC1N 3XX
UK

எழுத்துப்பதிவு:
எஸ்.செல்வி

வடிவமைப்பு:
க.கிருஷ்ணராஜா

அச்சுப் பதிவு:
Set Line Data Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களை யாழ்ப்பாணத்திலிருந்து தற்காலிகமாக வெளியேறு மாறு கேட்டுக் கொண்டோம். ஆயினும் யுத்தம் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சத்தில் அவர்களை மீண்டும் யாழ்ப்பாணத்தில் குடியமர அனுமதிப்போம்" எனப்பதில் அளித்துள்ளார். (களத்தில் 5.3.93).

90ம் ஆண்டு ஜுன் மாதம் யுத்தம் ஆரம்பித்த போது, 'முஸ்லிம் ஊர்காவல்படை', 'ஜிகாத்' என்ற பெயர்களில் இலங்கை அரசால் ஊட்டி வளர்க்கப்படும் புல்லுருவிக்கும்பல் தமிழ் மக்களைத் தாக்கியது. ஆனால் யுத்தத் தேவைகளுக்கு என்று சொல்லி முஸ்லிம் வியாபாரிகளின் கடைகளைக் கொள்ளையடித்ததும், பணம் கேட்டு முஸ்லிம் முதலாளிகளைப் பணயம் வைத்ததும், ஜிகாத் உறுப்பினர்களைக் கைது செய்ய என்று சொல்லி முஸ்லிம் கிராமங்களைச் சுற்றி வளைத்து இராணுவம் போல தேடுதல் வேட்டை நடத்தியதுமான விடுதலைப்புலிகளின் செயல்கள் இத்தாக்குதலுக்கு தூபமிட்டன என்பது உண்மை. மேலும் இச்சம்பவங் களை "இனக்கலவரம் வெடித்து பெருந்தொகையில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர்" என வர்ணிப்பது மிகவும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று. இதன் விளைவாக "யாழ்ப்பாணத்திலும் கலவரம் பரவும் ஆபத்து எழுந்தது" என்பது பச்சைப்பொய். வடமாகாணத்தில் தமிழ்-முஸ்லிம் மக்களிடையே நிலவி வருகிற வேற்றுமைகள் இனக் கலவரத்தைத் தோற்றுவிக்கிற அளவுக்கு பகையானவையாக ஒருபோதும் இருந்ததில்லை. அதுவும் யாழ்ப்பாணத்தில் அறவே இல்லை.

இவையனைத்தையும் விடுதலைப்புலிகள் மறுக்கட்டும். அவர்கள் சொல்வதையே உண்மையென்று எடுத்துக் கொள்வோம். அப்படியொரு "கலவரம் பரவும் ஆபத்து எழுந்த" வேளையில் அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? தமிழ் மக்களுக்கு, ஜிகாத் போன்ற புல்லுருவிக் கும்பல்களையும் முஸ்லிம் மக்களையும் வேறு பிரித்துக்காட்டியிருக்க வேண்டும். இத்தகைய கலவரங்கள் "தமிழ் - முஸ்லிம் மக்களிடையே வேற்றுமை யையும் விரோதத்தையும் வளர்த்து விடும்" என்று சொல்லியிருக்க வேண்டும். இதனால் "சிங்களப் பேரினவாதிகளும், சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல்வாதிகளுமே" பயனடைவார்கள் என்பதை உணர்த்தியிருக்க வேண்டும். "முஸ்லிம் மக்கள் தனித்துவப் பண்பாடுடைய ஓர் இனக்குழு" என்ற தமது நிலைப்பாட்டை தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு விளக்கி தமிழீழ விடுதலையின் வெற்றிக்கு இவ்விரு சமுகங்களதும் ஒற்றுமை அவசியம் என்பதைப் புரிய வைத்திருக்க வேண்டும். ஒருவேளை இதையும் மிஞ்சி மூர்க்க குணம் கொண்டு முஸ்லிம் மக்களைத் தாக்கியே தீருவது என தமிழ் மக்கள் உருக்கொண்டு நின்றிருந்தால், இத்தகைய சூழ்நிலையில் என்ன செய்வது என்பது பற்றி முஸ்லிம் மக்களின் கருத்தை அறிந்திருக்க வேண்டும். அதைத் தமிழ் மக்கள் தெரிந்து கொள்ள வாய்ப்பளித்திருக்க வேண்டும். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண மக்களுக்கு அதிகாரம் இருந்திருக்க வேண்டும். அத்தகைய அதிகாரம் கொண்ட மக்கள் கமிட்டியில் இப்பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டிருக்க வேண்டும்.

இவற்றில் எதுவுமே நடக்கவில்லை. நடந்தது என்ன? அதிகாரமற்ற மக்களின் மீது விடுதலைப்புலிகளின் இராணுவ சர்வாதிகாரம் பிரயோகிக்கப்பட்டது. 24 மணி நேர அவகாசமும் வெளியேற்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது. இதற்கும் கட்டுப்பட முஸ்லிம் மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டனர். விரும்பியோ விரும்பாமலோ இதைச் சகித்துக்கொள்ள வேண்டியநிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டது. இன்று விடுதலைப் புலிகள் தமது சொந்த முடிவுக்கான பழியை தமிழ் மக்கள் மீது சுமத்தியுள்ளனர். "முஸ்லிம் மக்களை அவர்களின் பாதுகாப்புக்காகவே வெளியேற்றினோம்" என்பது, முஸ்லிகளுக்கு எதிராக தமிழர்கள் ஒரு கலவரத்துக்கு தயாரானார்கள் என்றும், தமிழர்களின் சார்பில் அப்பொறுப்பை விடுதலைப்புலிகள் நிறைவேற்றி வைத்தார்கள் என்றும்தான் அர்த்தப்படும். வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு பொறுப்பானவர்கள் யார் என்று விடுதலைப்புலிகள் நினைக்கிறார்கள்? இலங்கை அரசாங்கமா? அவ்வாறெனில் "தமிழ் மக்களோடு சேர்ந்து வாழ்வதே முஸ்லிம் மக்களின் சமூக பொருளாதார அரசியல் வாழ்வைச் சிறப்பிக்கும்" என்பதற்கு அர்த்தம் என்ன?

"கலவரம் பரவும் ஆபத்துத்தான்" முஸ்லிம்களை வெளியேற்றியதற்கு காரணம் என்றால், அவர்களை மீண்டும் குடியமர அனுமதிப்பதற்கு "யுத்தம் முடிவடைந்து சமாதான சூழ்நிலை ஏற்படும் பட்சம்" வரை காத்திருப்பது ஏன்? ஒருவேளை, யுத்தம் தொடர்கிற வரையில் 'கலவரம் பரவுவதற்கான ஆபத்தும்' தொடரும் என்று விடுதலைப்புலிகள் முடிவுகட்டி விட்டார்களா? இந்த ஜனநாயகமற்ற பாதையில் விடுதலை யுத்தத்தை வெற்றிக்கு இட்டுச் செல்லலாம் என நம்புகிறார்களா? அவ்வாறெனில் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

முதலாவதாக: முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளை அங்கீகரித்து அவர் களை தம்முடன் ஐக்கியப்படுத்திக் கொள்ள தமிழ் மக்கள் தயாராக இல்லையென்றால், வடக்குக் கிழக்கைத் துண்டாடி தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் இலங்கை அரசின் இராணுவத்திட்டங்களை வெற்றி கொள்வது சாத்தியமானதல்ல.

இரண்டாவதாக: "சிங்களப் பேரினவாதிகளும் சுயநலம் கொண்ட முஸ்லிம் அரசியல் வாதிகளும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே வேற்றுமையையும் விரோதத்தையும் வளர்த்து" தமிழீழ விடுதலையை நசுக்க முயல்கிறார்கள். இந்தச் சூழ்ச்சிகள் பலிக்க விடுதலைப்புலிகள் இடம் வைக்கக்கூடாது.

மூன்றாவதாக: விடுதலைப்புலிகளின் ஜனநாயக விரோதப்பாதைக்கு மாற்றாக

PANIMALAR 8
March-April. 1993

A Tamil Magazine

BM PANIMALAR
LONDON
WC1N 3XX
UK.

Type - Set by:
S.Selvi

Layout by:
K.Krishnarajah

Printed by:
Set Line Data Ltd.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜனநாயகப் பாதையில் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க அணிதிரள்வதற்குப் பதிலாக, விடுதலைப்புலிகளைக் காரணம் காட்டி இலங்கை அரசின் நோக்கங்கள் நிறைவேற முஸ்லிம் மக்கள் வாய்ப்பளிக்கக்கூடாது. இதன்மூலம் அவர்கள் தமது ஜனநாயக உரிமைகளைத் தானும் வென்றெடுக்க இயலாது.

இவை காரணமாக, 'முஸ்லிம் மக்களின் ஜனநாயக உரிமைகளும், பாதுகாப்பும் விடுதலைப் புலிகளால் மீறப்படமாட்டாது' என்ற உத்தரவாதத்தை வழங்கி அவர்கள் மீண்டும் தமது பகுதிகளில் குடியமரலாம் என பகிரங்கமாக அறிவிக்க விடுதலைப் புலிகள் அமைப்பு இப்போதே முன்வர வேண்டும் எனக் கோருகின்றோம்.

இத்தகைய அறிவிப்பால் விடுதலைப்புலிகளுக்கு எச்சிறு தீமையும் ஏற்பட்டு விடப்போவதில்லை. மாறாக பிரேமதாஸாவின் தற்போதைய இராணுவத்திட்டத்தை முறியடிக்க இது ஆதார சக்தியாக விளங்கும். தமிழீழ விடுதலையை வென்றெடுக்க தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒன்றுபட்ட இயக்கத்தைக் கட்டியமைக்க உறுதுணை புரியும். செய்வார்களா விடுதலைப்புலிகள்? இல்லையேல் அவர்களை நிர்ப்பந்திப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

### சர்வதேசப் பெண்கள் தினம்

மார்ச் 8ம் திகதி சர்வதேசப் பெண்கள் தினமாகும். இதனை மனங்கொண்டு இவ்விதழை பெண்களின் ஆக்கங்களை உள்ளடக்கியதாக வெளியிட நாம் விரும்பியபோதிலும் முன் தயாரிப்பின்மை அதனைச் சாத்தியமற்றதாக்கிவிட்டது.

# அரசியற் தீர்வின் ஆதரவாளர்கள் தோல்வியைத் தழுவுவது ஏன்?

கூபா

பிரேமதாஸா அரசு ஈழத்தமிழ் மக்கள் மீது தொடுத்த இன ஒடுக்குமுறை யுத்தம் முப்பத்திமூன்று மாதங்களாகத் தொடர்கிறது. எனினும் சர்வவல்லமை மிக்க ஜனாதிபதியும், பாதுகாப்பு அமைச்சருமான பிரேமதாஸா தனக்கு இராணுவத் தீர்வில் நம்பிக்கையில்லையென்றும், அரசியற் தீர்வு காணவே விரும்புவதாகவும் ஓயாது கூறி வருகிறார். கண்டி எண் கோண மண்டபத்தில் இருந்து புத்தபெருமானின் கொள்கைகளை மேற்கோள்காட்டி, நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் தனது ஆர்வத்தை அவர் வெளியிடும் போது புத்த பெருமானையே நேரில் பார்த்தது போல் புல்லரிக்கிறது. புனித தந்ததாதுவின் அருள் முகத்தில் பிரகாசிக்க "வடக்குகிழக்கு பிரச்சனைக்குத் தீர்வு காண பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பதாக" கூறுகிறார்.

1990ம் ஆண்டு ஜூன் மாதம் யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து 'யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்', 'அரசியற் தீர்வு காணப்பட வேண்டும்' என பேசாத கட்சிகள் இல்லை. எழுதாத பத்திரிகைகள் இல்லை.

"நிராயுத பாணிகளான மக்களைக் கொல்வதை நிறுத்தி, மீண்டும் இருசாராரும் அறிவுபூர்வமான - பகிரங்கமான பேச்சுவார்த்தைக்குத் திரும்ப வேண்டுமென்று இன்று பரவலாக அதிகரித்து வரும் குரல்களுடன் 'பனிமலரும்' இணைந்து கொள்கிறது". (பனிமலர் ஆடி - ஆவணி 1990). லண்டன் வாழ் மேட்டுக்குடித் தமிழர்களின் பத்திரிகையான *Tamil Times* இக்கருத்தை தீவிரமாகப் பிரச்சாரம் செய்து வருகிறது. விடுதலைப் புலிகளையும் பிரேமதாஸாவையும் 'யுத்தப்பிசாசுகள்' என வர்ணிக்கிறது. இரு தரப்பினருக்குமான யுத்தச் செலவுகளையும் இழப்புகளையும் பற்றிய புள்ளி விபரங்களை வெளியிட்டு இவர்கள் கண்டது என்ன என்று கேள்விக்கணை தொடுக்கிறது. இந்த யுத்தப் பிசாசுகளுக்கிடையில் மாட்டிக்கொண்டு மக்கள் அநுபவிக்கும் துன்ப துயரங்கள்பால் தனது அநுதாபத்தை வெளியிடுகிறது. பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் 'நம்பிக்கையின் ஒளிக்கீற்றைக்' காண்கிறது. கட்சி அரசியலைத் தாண்டி இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கான வாய்ப்பை பா.ம.தெ.குழுவின் மூலம் பிரேமதாசா வழங்கியிருப்பதாகவும், இந்தச் சவாலைச் சந்திக்குமாறும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்கு அழைப்பு விடுகிறது.

இவற்றுக்கெல்லாம் ஒருபடி மேலே போய் 'இலங்கை மக்களின் ஜனநாயக உரிமைகளையும், மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்கான உத்தரவாதங்களுடன் இனப் பிரச்சனைக்கு தீர்வு கண்டு அமைதியை நிலைநாட்ட ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தலையிட வேண்டுமென' அந்நியத்தலையீட்டிற்கு அழைப்பு விடுகிறது.

தொண்டமானின் சமரசத்திட்டத்தை சிங்களப் பேரினவாதிகள் எதிர்த்தது பற்றி பனிமலர் (ஜூன்-1992) பின்வருமாறு எழுதியது: "நாட்டில் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைக்கும் போராட வேண்டிய முக்கிய எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு நெருக்கடியை நீடிக்கும் தேவைக்காக தேசிய இனப்பிரச்சனையுடன் விளையாடுவது எவருக்கும் நல்லதல்ல. தொண்டமானுடைய முயற்சியின் தோல்வியை விரைவில் பாராளுமன்றத் தெரிவுக்குழு ஈடுசெய்யத் தவறுமாயின் அது **வடக்கில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை மேலும் நியாயப்படுத்த** ஏதுவாகும். விடுதலைப் புலிகளுக்கு பாடம் படிப்பிக்க விரும்பி யுத்தத்தை நீடிக்க முனைவோர் தமிழ் மக்களைப் பகைத்துக் கொள்கிறார்கள். அதன்மூலம் அவர்களே **இலங்கையின் பிரிவினையைத் தூண்டிவிடுகிறார்கள்.**" (அழுத்தம் எனது)

யுத்தத்துக்கு தலைமை தாங்கும் பிரேமதாஸா முதல், அரசியல் கட்சிகள் சர்வதேச ஸ்தாபனங்கள் ஈறாக, எல்லாக் கொலைகளையும், எல்லா யுத்தங்களையும் வெறுக்கும் நவீன புத்தபிரான்களான மனித உரிமை வாதிகள் வரையில் 'யுத்த நிறுத்தம் - அரசியற் தீர்வு' என்ற கூக்குரல்தான்!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எனினும் அரசியற் தீர்வு காணப்பட வில்லை, யுத்தம் தொடர்கிறது ஏன்? கடந்த 33 மாதங்களில் அரசியற் தீர்வு காண்பதற்காக என்று சொல்லி எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளை ஆராய்ந் தால் இதன் காரணத்தை அறிந்து கொள்ளலாம்.

**அரசியல் தீர்வுக்கான முயற்சிகள்:**

யுத்தத்தை ஆரம்பித்த போது இந்திய அக்கிரமிப்பை எதிர்க்க *J.V.P*இன்



எழுச்சியை ஒடுக்கியது போல தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஒடுக்கி விடலாம் என பிரேமதாஸா கனவு கண்டார். அது பலிக்காது என்பதை உணர்ந்து கொள்ள சிறிது காலம் பிடித்தது. 1991 ஓகஸ்டில் 'அனைத்துக் கட்சிகளினதும் அபிப்பிராயங்களைக் கேட்டறிந்து வடக்கு-கிழக்குப் பிரச் சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக' பா.ம.தெரிவுக்குழு அமைக்கப்பட்டது. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் தொண்டமான் வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பை அடிப்படையாகக் கொண்ட அதிகாரப் பரவலாக்கத்துக்கான ஆலோசனைகள் சிலவற்றை முன்வைத்தார். இவை உடன் பாடானதாக இருந்ததனால் தமிழர் கூட்டணி, அ.இ.த.காங்கிரஸ், *EPRLF, ENDLF, PLOT* ஆகியவை தொண் டமானுடன் இணைந்து 4 அம்ச திட் டத்தை முன்வைத்தன. "ஆனால் தெரி வுக்குழுவின் தலைவர் இதுபற்றி எது வுமே குறிப்பிடாத இணக்க அறிக்கை யொன்றை வழங்கினார்". இதன் பின்னர் ஸ்ரீனிவாசன் மூலம் ஒன்பது அம்சத்திட்டம் முன்வைக்கப்பட்டது. இத்திட்டத்தில் கூறப்பட்ட சமஸ்டி முறையை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள் எனக்கூறி இந்திய மாதிரியில் - *Indian Model* - அமைந்த தீர்வு பற்றி பேசப்பட்டது. இறுதியாக பிரேமதாஸாவுக்கு நெருக்கமானவர் எனக் கருதப்படும் தயான் ஜயதிலக்கா கொழும்பில் கூட்டிய புத்திஜீவிகளின் மாநாட்டில் ஜே.ஆர்-ரஜீவ் ஒப்பந்தத் தின் கீழ் செய்யப்பட்ட 13வது சட்டத் திருத்தத்துக்கு அமைய இனப்பிரச் சனைக்குத் தீர்வு காண்பதில் அரசாங் கத்துக்குள்ள நாட்டத்தை வெளியிடு கின்றார். இவற்றுக்கு மத்தியில் பௌத்த பிக்குகளும், கிறிஸ்தவ குருக்களும் யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளை அவதானித்தனர். யுத்தம் நிறுத்தப்பட வேண்டும் என்றும் யுத்தத்தால் பாதிக் கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என் றும் கோரினர். மேலும் பௌத்த பிக்குகள் தீவுப்பகுதியிலும், பலாலி முகாமிலும் படைத்தளபதிகளுக்கு நல்லாசிகளும் வழங்கினர்.

இப்படியாகத்தானே 33 மாதகாலம் இழுத்தடித்து, அரசியற் தீர்வு காண முன்வைக்கப்பட்ட திட்டங்கள் வருமாறு:

**நான்கு அம்சத்திட்டம்:**

1) வடக்கு கிழக்கு மாகாணங்களை நிரந்தரமாக இணைத்தல்;

2) சுயாட்சியை (*Autonomy*) குறிக்கும் வகையிலான அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு;

3) வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமை களைப் பாதுகாப்பதற்குரிய அதிகார அமைப்பை ஏற்படுத்தல்;

4) சிங்கள மக்கள் பெரும்பான்மை யாக உள்ள மாகாணங்களில் வாழும் சிறுபான்மையினர் அனுபவிக்கும் அதே உரிமைகளை வடக்கு கிழக்கில் வாழும் சிறுபான்மைச் சிங்கள மக்களும் அனுப விப்பதை உறுதிப்படுத்துவதற்கான அவசிய ஏற்பாடுகள்.

**தெரிவுக்குழுத் தலைவரின் உத்தேசத் திட்டம்:**

1. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு இரு தனியான தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண சபைகள்; இம்மாகாணங்களின் நிர்வாகம் தொடர்பான அனைத்து விடயங்களும் இச்சபைகளின் கீழ் இருக்கும்;

2. இச்சபைகளின் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகளின் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களைக் கொண்ட உயர் சபை ஒன்று அமைக் கப்படும்; இச்சபை இரு மாகாணசபை களுக்கும் ஏற்புடையதான பொதுக் கொள்கைகளையும், திட்டங்களையும் தீட்டும்;

3. மாகாண சபைகளுக்கும் உயர் சபைக்கும் மிகவும் அர்த்தமுள்ள அதிகா ரங்கள் பகிர்ந்தளிக்கப்படும்;

4. இச்சபைகளுக்கும் மத்திய அரசுக் கும் நல்லிணக்கத்தையும், கூட்டுறவையும் ஏற்படுத்த தேசிய சபை ஒன்று அமைக்கப்படும். இச்சபையில் முதல மைச்சர்கள் ஜனாதிபதியுடனும், அமைச் சர்களுடனும், எதிர்க்கட்சிப் பிரதிநிதி களுடனும் மாதாந்தம் சந்தித்து மேற்படி நோக்கத்தை அடையப் பாடுபடமுடியும்.

5. மேற்படி தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளை உருவாக்கிக் கொள்கிற வரைக்கும், பாராளுமன்றத்துக்கு உள் ளேயும் வெளியேயும் இருக்கும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால நிர்வாகம் ஒன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கும் ஏற்படுத் தப்படும்.

**ஒன்பது அம்சத்திட்டம்:**

1) இலங்கை அரசமைப்பின் ஒற்றை யாட்சி முறையை சமஸ்டியாக மாற்றி யமைக்க வேண்டும்;

2) வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் தனித்தனியாக அதி

## ரெலோ 'நொடி' - அவிழுங்கள் பார்க்கலாம்!

தமிழ்க்கட்சிகள் சில, இனப்பிரச்சனை தொடர்பாக பாராளுமன்றத் தெரிவுக்குழு நடத்திய ஆய்வுகள், கருத்துக்கள் குறித்து நேற்று வெளியிட்ட கூட்டறிக்கையில் ரெலோ இயக்கம் கைச்சாத்திடவில்லை.

இதற்கான காரணத்தை தலைவர் செல்வத்திடம் கேட்டபொழுது 'வட-கிழக்கு நிலப்பரப்பால் இணைவதை எந்த ஒரு பெரும்பான்மை இனக்கட்சிகளும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்பதை நாம் அறிவோம். அதற்காகவே வடக்கு-கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் இணைக்க நிறைவேற்று அதிகாரம் கொண்ட கவர்னர் ஒருவர் நியமிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தோம்' என்று பதிலளித்தார்.

'வடக்கையும் கிழக்கையும் இணைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலிருந்து நாம் விலகமாட்டோம்' என்றும் அவர் சொன்னார்.

(வீரகேசரி 20.12.1992)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காரப் பரவலாக்கல்முறையின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்;

3) அவ்வாறான ஒவ்வொரு அலகுக்கும் ஒப்புக்கொள்ளப்பட்டபடி அதிகபட்ச அதிகாரங்களை அளிக்க வேண்டும்;

4) இனரீதியான அடித்தள அதிகார அமைப்புக்களின் எல்லைகளை வரையறுக்க எல்லைக்கமிஷன் ஒன்றை நியமிக்க வேண்டும்:

5) அவ்வாறான அடித்தள அமைப்பின் நியாயாதிக்கப் பரப்பிற்குள் கூடுமானவரையில் ஒரே இன சமூகத்தை அவர்களின் வதிவிட விவசாய மற்றும் மேய்ச்சல் தரைச் சொத்துக்களைக் கொண்டு வர வேண்டும்.

6) ஒவ்வொரு அலகிலும் முஸ்லிம்களின் பாதுகாப்பிற்காக விசேட அமைப்பு ரீதியான ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

7) பராதீனப்படுத்தாத அரசாங்க காணிகளை மாறுபட்ட சமூகங்களுக்கு மத்தியில் பங்கீடு செய்வதற்கு காணிக் கமிஷன் ஒன்றை உருவாக்க வேண்டும்;

8) ஒவ்வொரு அலகிலும் இன சமநிலையை 1971ம் ஆண்டில் இருந்ததைப் போல பேண வேண்டும். இதனை ஏற்கெனவே நடைபெற்ற எந்தவொரு சிங்களக் குடியேற்றத்தையும் எந்தவகையிலும் வெளியேற்றாமல் செய்ய வேண்டும்;

9) கடந்த காலத்தில் இனங்கள் புலம் பெயர்ந்த இடங்களில் அவற்றின் நில உடமையை மீண்டும் உறுதி செய்யும் வகையில் காணிப்பங்கீட்டுத் திட்டம் அமைய வேண்டும்.

**13வது திருத்தச் சட்டம்:**

இது 1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் இந்திய இலங்கை அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு அமைய இலங்கையின் அரசியல் அமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13வது திருத்தமாகும். இதன்படி;

1) வடக்கு கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாக இணைக்கப்படும். **நிரந்தர இணைப்புக்கு கிழக்கு மாகாண மக்களிடையே** தேர்தல் நடத்தப்பட வேண்டும். 2) மாகாண சபைக்கு சில அதிகாரங்கள்.

3) தமிழ்மொழியை அரசகரும மொழியாக அங்கீகரித்தல்.

இந்த நான்கு திட்டங்களதும் அடிப்படை அம்சங்கள் பின்வருமாறு:

முதலாவதாக; இத்திட்டங்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழ் மக்களை அப்பகுதியில் வாழ்கின்ற முஸ்லிம், சிங்கள மக்களைப் போலவே ஒரு சிறுபான்மை **'இனக்குழு'** எனக் கொள்கின்றன.

இரண்டாவதாக; தமிழ் மக்கள் இன ஒடுக்குமுறையில் இருந்து தம்மைப் பாதுகாத்து, ஆளுகின்ற இனத்துடன் சமநிலை பெற **'அதிகாரங்களை பகிர்வது'** என்ற முறையை முன்வைக்கின்றன.

மூன்றாவதாக; ஒன்றிணைத்தோ அல்லது தனித்தனியாகவோ வடக்கு கிழக்கு மாகாணங்களை **அதிகாரப் பரவலாக்கல் பிராந்தியமாகவே** கருதுகின்றன.

தொகுத்துச் சொன்னால், **மைய அரசுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வது என்ற முறையில், வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு ஒன்றான அல்லது தனித்தனியான மாகாணசபைகளை அமைப்பதன் மூலம் அங்குவாழும் சிறுபான்மை இனக்குழுக்களான தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது.** இதுவே இத்திட்டங்களின் அடிப்படைச் சிந்தனையாக உள்ளது. இச்சிந்தனைப் போக்கே ஈழத் தமிழர்களின் பிரச்சனைக்கு அரசியற் தீர்வு காண்பதை சாத்தியமற்றதாக்கி வருகிறது.

ஏனெனில் இச்சிந்தனைப்போக்கு

1) ஈழத்தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதையும்.

2) வடக்கு கிழக்கு மாகாணங்கள் அவர்களுடைய தேசம் என்பதையும்.

3) அத்தேசத்தில் தமது சொந்த அரசை நிறுவிக்கொள்ள அவர்கள் சுயநிர்ணய உரிமை உடையவர்கள் என்பதையும் மறுக்கின்றன.

இந்த மறுப்புக்கு அவர்கள் சொல்கிற நியாயம் இலங்கை இலங்கையருடைய தாம்; இலங்கையின் குடிமக்கள் எவரும் இலங்கையின் எப்பாகத்திலும் வாழலாமாம்; வடக்கு கிழக்கு மாகாணங்களை தமிழர்கள் தங்களுடைய தாயகம் என்பது இலங்கையைத் துண்டாடுவதாம்!

இலங்கை இலங்கையருடையதா?

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கான திட்டங்கள், சொந்த நாட்டின் நலனில் இருந்து தீட்டப்படுகிறதா? *IMF*, உலகவங்கி போன்ற அந்நிய நிதி நிறுவனங்களின் திட்டங்கள் அமுலாக்கப்படுகிறதா? இலங்கையின் மொத்த முதலீடுகளில் 44% அந்நிய மூலதனமாகும். வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறையின் 54%உம், அரசாங்கத்தின் மூலதனச்செலவின் 63%உம், அரசாங்கத்தின் மொத்தச் செலவினத்தின் 24%உம் அந்நியக் கடன்களால் ஈடுசெய்யப்படுகின்றன. 1989இல் 820 கோடி ரூபாவாக இருந்த அந்நியக்கடன், 1991இல் 2090 கோடி ரூபாவாக அதிகரித்துள்ளது. சிங்கள விவசாயிகளின் நிலங்கள் அவர்களுக்குச் சொந்தமாக இருக்கிறதா?, இல்லை அவை அந்நியக் கம்பனிகளுக்கும் பௌத்த மடாலயங்களுக்கும் சொந்தமாக உள்ளன. மலையகப் பெருந்தோட்டம் யாருடைய கையில் இருக்கிறது?, "மக்கள் மயமாக்கப்பட்ட" அரசுக்கம்பனிகள் இலங்கை மக்களுக்கு கையளிக்கப்பட்டனவா அல்லது அந்நியக் கம்பெனிகளுக்கு தாரை வார்க்கப்பட்டனவா?, சுதந்திர வர்த்தக வலயங்களிலும், இன்று நாடெங்கும் திறக்கப்படும் ஆடைத் தொழிற்சாலைகளிலும் தமது உழைப்பை விற்கிற சிங்கள நடுத்தர வர்க்கத்தினரிடமிருந்து திரட்டப்படுகிற உபரி, இலங்கையில் இருக்கிறதா? அல்லது ஜப்பானிலும், அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இருக்கிறதா?

உண்மையில் இவையெவையும் இலங்கை மக்களுக்கு சொந்தமாக இல்லை. அந்நியக் கம்பனிகளுக்கும், அவர்களுக்கு சேவகம் செய்யும், உள்நாட்டு முதலாளிகளுக்கும் நில உடமையாளர்களுக்குமே சொந்தமாக இருக்கிறது.

இவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் அந்நிய மூலதனத்துடன் கட்டுண்டு கிடப்பது தான், சிங்கள தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடியின் ஊற்றுமூலம் ஆகும். இதனை மூடி மறைக்கவே சிங்கள மக்களின் பிரச்சனைகளுக்கு தமிழ்மக்களைக் காரணமாகக் காட்டி வருகின்றனர் சிங்கள ஆளும் கும்பல்கள்.

## நல்லதொரு குடும்பம்!

"எமது நாட்டிலும் பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் உள்ளனர். இந்த வார்த்தைகளுக்கு வேறு வார்த்தைகளைத் தருமாறு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் என்னிடம் கேட்டார். நான் புதுவார்த்தைகள் தரலாம். அவை நடைமுறைக்கு வரவேண்டுமே.

அண்ணன், தம்பி, அக்கா, தங்கை உறவுமுறையே இதற்குத் தீர்வாகும். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த என்னை எம்.எச்.எம்.அஷ்ரப், பிரேமதாஸா அண்ணன் என அழைக்கலாம். இந்த மேடையில் உள்ள டக்ளஸ் தேவானந்தாவும் என்னை பிரேமதாஸா அண்ணன் என்று கூப்பிடலாம். நானும் அவரைத் தம்பி என்று கூப்பிடலாம்".

(முஸ்லிம் காங்கிரசின் 11வது தேசிய மாநாட்டில் ஜனாதிபதி ஆற்றிய உரை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாம் ஏகாதிபத்தியச் சுரண்டலின் காவல் நாய்களாக இருப்பதால், தமக்கும் ஒடுக்கப்படும் வர்க்கங்களுக்கும் இடையே உள்ள வர்க்கப்பகைமையை மூடி மறைக்க இன மோதல்களைத் தூண்டி விட்டனர். இதன் விளைவாக இலங்கை மக்கள் ஒடுக்கும் தேசிய இனமாகவும், ஒடுக்கப்படுந்தேசிய இனமாகவும் பிளவுண்டுவிட்டனர். சிங்கள ஆளும் கும்பல்களோ இனஒடுக்குமுறையின் மீது ஒரு பாசிஸ அரசைக் கட்டியமைத்துள்ளனர். இந்த அரசுமுறையின் கீழ் இனசமத்துவத்தை நிலைநாட்ட முடியாது.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இன ஒடுக்குமுறையில் இருந்தும், பாசிஸ ஆட்சிமுறையில் இருந்தும் விடுதலையடைய வேண்டியுள்ளது. சுய நிர்ணய உரிமையைப் பெற்றால் ஒழிய இந்நிலையில் இருந்து தமிழினம் மீட்சியடைய முடியாது. ஈழத்தமிழர்களைப் பொறுத்தமட்டில் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்பது பேரம் பேசக்கூடிய ஒன்றல்ல. ஏனெனில் சுயாட்சியோ அல்லது வேறு எந்த விதமான, அதிகாரத்தை கீழ்மட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கும் முறையோ அந்நாட்டை ஆளுகின்ற வர்க்கங்களின் அதிகாரத்தின் அஸ்திவாரங்களை சிதைக்காமல் அப்படி வைத்துக் கொள்வதும், அது பழுதுபடாமல் ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களுக்கு சில்லறைச் சலுகைகளை வழங்கும் முறையேயாகும். இச்சீர்திருத்த முறையானது எல்லா வடிவங்களிலும் நிலவும் தேசிய ஒடுக்குமுறையை ஒழித்துக்கட்டுவதல்ல. சுயாட்சியை (Autonomy) பெற்றிருக்கும் ஓர் இனம், ஆளுகின்ற இனத்துடன் சம உரிமை பெற்று விட முடியாது. ஒடுக்கும் இனமும், ஒடுக்கப்பட்ட இனமும் சமஉரிமையைப் பெற வேண்டுமானால், இரு இனங்களுக்குமிடையே அமைதி நிலவ வேண்டுமானால், அதை நிலைநாட்டுவதற்கான ஒரு புரட்சிகரமான முறை ஒடுக்கப்பட்ட தேசிய இனம் பிரிந்து செல்லும் உரிமை உள்ளிட்ட சுயநிர்ணய உரிமையைப் பெறுவதேயாகும். இம்முறையினால்தான், இனஒடுக்கலுக்கு முடிவு கட்ட முடியும். இன விடுதலையையும் வழங்க முடியும். ஆகையால் ஈழத்தமிழர்க்கு பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமை என்பது பேரம் பேசுவதற்குரிய ஒன்றல்ல.

எனவேதான் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத மேற்படித்தீர்வுத் திட்டங்களின் சிந்தனையில் அமைந்த அரசியற் தீர்வு காணும் முயற்சிகள் சாத்தியமற்றவையாக உள்ளன. ஒருவேளை இத்தகைய பேச்சுவார்த்தை மூலம் சுயாட்சி என்ற நிலையையோ அல்லது வேறு எந்த அதிகாரப் பகிர்வு முறையையோ ஏற்றுக்கொண்டு இலங்கை ஆளும்வர்க்கத்துடன் சமரசம் செய்து கொண்டாலும் அது பிரச்சனையைத் தீர்ப்பதாக இராது. மீண்டும் ஒரு முறை ஈழத்தமிழர்கள் தங்கள் விடுதலைப் போரை நடத்துவது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

## குடியேற்றப்பிரச்சனை:

சிங்கள மக்களின் விவசாய நிலங்களை அந்நிய ஏகாதிபத்தியக் கம்பெனிகளுக்கு நீண்ட காலக் குத்தகைக்கு விட்டுள்ளனர் சிங்கள ஆளும் வர்க்கங்கள். இதனால் நிலமற்ற சிங்கள விவசாயிகளின் எதிர்ப்பு தம்பக்கம் திரும்பாதிருக்க தமிழ்மக்களின் நிலங்களில் சிங்கள விவசாயிகளைக் குடியமர்த்தி வருகின்றனர். சிங்கள மக்கள் மத்தியில் உள்ள 'புரட்சிக்காரர்கள்' இந்த உண்மையை சிங்கள விவசாயிகளிடையே எடுத்துச்சென்று தமிழர் நிலங்களை அபகரிக்கும் திட்டத்தை எதிர்க்கவும், தமது நிலங்களை அந்நியக்



கம்பனிகளுக்கு தாரை வார்ப்பதை எதிர்க்கவும் ஆன போராட்டத்திக்கு சிங்கள விவசாயி மக்களை தட்டியெழுப்பவில்லை. இதனால் தமிழினத்தின் மீதான ஒடுக்குமுறைக்கு துணை போபவர்களாக அவர்கள் மாறியுள்ளனர்.

ஒன்பது அம்சத்திட்டத்தின் ஐந்து அம்சங்கள் (4,5,7,8,9) திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை சட்டபூர்வமாக்கும் ஏற்பாடுகளே ஆகும். இதன் மூலம் சிங்கள விவசாய மக்களின் நலன்கள் காக்கப்படுகின்றன என யாரேனும் ஒரு சுத்தமான 'இலங்கையர்' நினைத்தால், அவர் சிங்கள விவசாயிகளுக்கு அளப்பரிய கேடு செய்கிறார். ஏனெனில் சிங்கள விவசாயிகளின் நிலமற்ற பிரச்சனையை தீர்ப்பதற்கு அவர்களுக்கு ஜனநாயக அரசு தேவை. அத்தகைய அரசே அந்நியக் கம்பெனிகளுக்கும், பௌத்த மடாலயங்களுக்கும், கிறிஸ்தவ மிஸனரிகளுக்கும் இன்னும் நில உடமையாளர்களுக்கும் சொந்தமாக இருக்கும் நிலங்களை விவசாயிகளுக்கு வழங்கவல்லது. தமிழர் நிலங்களின் மீதான ஆக்கிரமிப்பை சட்ட பூர்வமாக்க துணை போவது இனமோதல்களுக்கு வழியமைப்பதும், அதன் மூலம் இன ஒடுக்குமுறை அரசைப் பாதுகாப்பதுமாகும்.

மறுபுறம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தமிழ், முஸ்லிம் மக்களின் விவசாய நிலங்களை அபகரிக்கின்றன. இது தமிழ்த் தேசிய இனப் பிரச்சனையையும், விவசாயப்பிரச்சனையையும் ஒன்றிணைக்கின்றது. இதனால் இலங்கையின் ஜனநாயகப்புரட்சி தேசிய இன ஒடுக்குமுறைக்கு முடிவு கட்டி இனசமத்துவத்தை நிலைநாட்டுவது என்ற தன்மையைப் பெறுகிறது. எனவே திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்ப்பது ஒரு ஜனநாயகக் கடமையாகிறது.

சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்தி தமிழர் பிரதேசம் பாதுகாக்கப் படவேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் நிலை சரியானது. ஆனால் இதில் தமிழ் சிங்கள விவசாயிகளின் நிலப்பிரச்சனை அடங்கியுள்ளதை பார்க்கத் தவறுவதன் காரணமாக அவர்களது பார்வை குறுகிய தேசியவாதத் தன்மையைப் பெறுகிறது. இதன் விளைவாக எல்லைப்புறங்களில் குடியமர்த்தப்பட்ட சிங்கள மக்கள் மீது இராணுவ ரீதியான தாக்குதல் தொடுப்பதன் மூலம் இப்பிரச்சனைக்குத் தீர்வு காண விழைகிறது. இவ்வழிமுறையானது சிங்கள விவசாயிகளை தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக இலங்கை அரசு பயன்படுத்திக்கொள்ள வாய்பளிக்கிறது. இலங்கையின் இனஒடுக்கல் இராணுவத்துக்கு மனிதவள ஆதாரமாக விளங்கும் சிங்கள விவசாய வெகுஜனங் களை இவ்வாறு கையாள்வது தமிழீழ விடுதலைக்கு தீங்கு பயப்பதாகும்.

ஆனால் விடுதலைப் புலிகள் சிங்கள விவசாயிகளை கொலை செய்வதாக கூக்குரல் இடுகிற சிங்களப் புரட்சியாளர்கள் முதலில் செய்ய வேண்டியது குடியேற்றத் திட்டத்துக்கு சிங்கள விவசாயிகள் துணை போவதைத் தடுப்பதாகும். ஒடுக்கும் தேசிய இனத்தின் மத்தியில் இந்த ஜனநாயகக் கடமையை செய்யத் திராணியற்றவர்களாக இருந்து கொண்டு விடுதலைப் புலிகளை எதிர்ப்பதால் மட்டும் இப்பிரச்சனையை தீர்த்து விட முடியாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள ஊசலாடும் ஜனநாயக சக்திகளும் இதனை உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில், ஒடுக்கப்படும் தமிழ் ஈழத் தேசிய இனத்தின் மீது ஒடுக்கும் சிங்களத் தேசிய இனமும், அத்தேசிய இன ஒடுக்குமுறையாளரின் அரசும் அடக்குமுறை தொடுப்பதை எதிர்த்து ஒடுக்கும் சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த உழைக்கும் மக்கள் போராடாதவரை இவ்விரு தேசிய இனங்களைச் சேர்ந்த உழைக்கும் மக்களை ஒன்றுபடுத்துவதோ அல்லது ஓர் அணிக்குள் கொண்டு வருவதோ சாத்தியமானதல்ல.

குடியேற்றப் பிரச்சனைக்கான தீர்வு பின்வருமாறு அமைய முடியும்:

* தமிழ்ப் பகுதிகளில் சிங்களவர்களை குடியேற்றுவதை அரசு கைவிட வேண்டும்.

* ஏற்கனவே குடியேற்றப்பட்ட பகுதிகளில் உள்ள குடியேற்றங்களில் (இயலுமானவற்றை) உடனடியாக கலைத்து சிங்கள மக்களின் பகுதியில் அவர்களைக்குடியமர்த்தும் பொறுப்பை அரசு மேற்கொள்ள வேண்டும்.

* நிலையான சமூகமாக வேரூன்றி விட்ட குடியேற்றங்களை அம்மக்கள் மத்தியிலான வாக்கெடுப்பின் மூலம் தீர்மானிக்க வேண்டும்.

* நிலையான சமுகமாகிவிட்டதன் காரணத்தால் சிங்கள மக்கள் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளும் நிலப்பரப்புக்குச் சமமான நிலப்பரப்பை வேறு பொருத்தமான இடத்தில் தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டும்.

**பாராளுமன்ற தெரிவுக்குழு "கண் துடைப்பு":**

பா.ம.தெரிவுக்குழுவின் செயற்பாடு பற்றிய *EPRLF, TULF, ACTC, ENDLF, PLOT, EROS* ஆகிய கட்சிகளின் ஒப்புதல் வாக்குமூலம் (வீரகேசரி - 20.12.92), பிரேமதாஸா தனது யுத்த நோக்கங்களை மூடி மறைக்கவே அரசியல் தீர்வு காண்பதாக நாடகமாடுகிறார் என்பதை காட்டுகிறது. இதோ அந்த "நம்பிக்கையின் ஒளிக்கீற்று"!

"1991 ஆகஸ்டில் தெரிவுக்குழு அமைக்கப்பட்டதிலிருந்தே அதனுடைய கூட்டங்கள் இடைக்கிடையேதான் நடைபெற்று வந்துள்ளது. கூட்டங்களிடையே உள்ள நீண்ட கால இடைவெளியும் கூட்டத்தை நடத்துவதற்கு வேண்டிய "கோரம்" இல்லாமல் இருப்பதும் தமிழர்களின் பிரச்சனையை தீர்க்கக்கூடிய அரசியல் உறுதிப்பாடு அதற்கு இருக்காது என்ற உணர்வை எமக்கு ஏற்படுத்தியது.

பிரதான சிங்களக்கட்சிகளான ஐ.தே. கட்சியும், ஸ்ரீ.ல.சு. கட்சியும் இப்பிரச்சினைக்கான தமது யோசனையை முன்வைக்கவில்லை. மறுத்தே வந்தன. இது எம்முடைய இந்தக் கருத்தை வலுவூட்டியது. இவற்றிற்கு மத்தியில் நாம் எமது யோசனைகளைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் முன்வைத்தோம். இது தொடர்பான ஏழு தமிழ் கட்சிகளினதும் இ.தொ.காங்கிரஸினதும் 4 அம்சத்திட்டத்தை 1991 ஜூனில் தெரிவுக்குழுமுன் சமர்ப்பித்தோம்.

ஆனால் தெரிவுக்குழுவின் தலைவர் இந்த நான்கு அம்சத்திட்டம் பற்றி எதுவுமே குறிப்பிடாத இணக்க அறிக்கையொன்றை வழங்கினார். இந்த அறிக்கைகைய நாம் முற்றாக நிராகரித்து எமது 4 அம்சத்திட்டத்தையே மீண்டும் வலியுறுத்துவதே இதற்கான எமது பதிலாக இருந்தது.

திட்டம் வாய்மூலமான வாக்குறுதிகளுக்கு முரணாக இருந்ததால் அதனை நிராகரித்தோம்.

இதன் பின்னர் பத்து அம்சங்களைக் கொண்ட ஸ்ரீநிவாசனின் திட்டம் நவம்பர் 14இல் சமர்ப்பிக்கப்பட்டது. அரசியல் அமைப்பை சமஷ்டி அரசியலமைப்பாக மாற்றுவதும் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனித்தனி மாகாணங்களாக இருக்கும் என்பதும் இவருடைய யோசனையின் முக்கிய இரு அம்சங்களாகும்.

தெரிவுக்குழுவில் இந்த யோசனைகள் ஆராயப்படுவதற்கு முன்னரே 1992 நவம்பர் 21ஆம் திகதி சகல முஸ்லிம் எம்.பி.களினதும் கூட்டம் ஒன்றைக் கூட்டினார். ஸ்ரீநிவாசனின் யோசனைக்கு அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றார்.

4 அம்ச சூத்திரத்தில் மூன்று அம்சங்கள் தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் நடத்தி வந்த சமரசப்பேச்சுக்களை நசுக்க முயன்ற அதேவேளையில் ஸ்ரீநிவாசனின் யோசனைகளுக்கு நியாயபூர்வ அந்தஸ்தத்தை வழங்க தெளிவான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருந்ததால் இந்தக் கூட்டம் முக்கியத்துவம் பெற்றது.

ஸ்ரீநிவாசனின் யோசனைகளை அப்படியே ஏற்றுக் கொள்வதாக திருமதி பண்டாரநாயக்கா தொலைபேசி மூலம் தன்னிடம் தெரிவித்தார் என்று 1992 நவம்பர் 26இல் நடைபெற்ற தெரிவுக் குழுவின் கூட்டத்தில் அதன் தலைவர் திடீரென கூறினார்.

தமிழர்களுக்குப் பாதகமான காரியங்கள் திரைமறைவில் முன்திட்டமிடப்பட்டு வருகின்றன என்பதை நிகழ்ச்சிகளின் இந்த திடீர் திருப்பம் துலக்கியது.

நிகழ்ச்சிகளின் இந்த திடீர் திருப்பத்தின் போது தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். பிரதிநிதிகள் இது ஐ.தே.க.வினதும், ஸ்ரீ.ல.சு.க. வினதும் உத்தியோகபூர்வ கருத்தா? என்று வினாவினார்கள்.

ஸ்ரீநிவாசனின் யோசனைகள் தொடர்பாக உத்தியோக பூர்வ நிலைப்பாட்டை அடுத்த தெரிவுக்குழுக் கூட்டத்தில் முன்வைக்குமாறு தெரிவுக்குழுத் தலைவர் அதன் பிற்பாடு சகல அரசியல் கட்சிகளிடம் கோரினார்.

அன்றைய பின்நோமே திருமதி பண்டாரநாயக்கா சமஷ்டி ஆட்சி முறையைத் தான் ஏற்கவில்லை என குறிப்பிட்ட சில இந்திய நிருபர்களிடம் கூறினார். அதைத் தொடர்ந்து ஐ.தே.க.யும் ஸ்ரீ.ல.சு.க.யும் உத்தியோகப் பத்திரிகை அறிக்கைகளை வெளியிட்டன. தெரிவுக்குழுவில் எடுக்கப்படும் எந்த ஒரு கருத்தொருமைப்பாட்டுக்கும் கட்டுப்படுவதாக அதில் தெரிவிக்கப்பட்டது.

ஐ.தே.க. மற்றும் ஸ்ரீ.ல.சு.க. ஆகியவற்றினால் வெளியிடப்பட்ட முரண்பாடான அறிக்கைகளினால் துலங்கிய குழப்பத்துக்கு மத்தியில் உள்நாட்டு மற்றும் சர்வதேச பத்திரிகைகள் சிங்கள மக்களினால் சமஷ்டி ஆட்சி முறை இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு விட்டது என புகழ்பாடும் வியாக்கியானங்களை வெளியிட்டன. தெரிவுக்குழு 1992 நவம்பர் 3ஆம் திகதி கூடியது.

இந்தக் கூட்டத்திலேயே சகல கட்சிகளும் சமஷ்டி ஆட்சி முறை தொடர்பான தமது உத்தியோக பூர்வ நிலைபாட்டை முன்வைக்க இருந்தன என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஸ்ரீநிவாசனின் யோசனை தொடர்பாக தமிழ்க்கட்சிகளே தமது உத்தியோக பூர்வ நிலைப்பாட்டை முன்வைத்தன. அவற்றைத் தவிர ஏனைய கட்சிகள் எவையும் உத்தியோகப் பூர்வ நிலைப்பாட்டை முன்வைக்க முன்வரவில்லை.

சமஷ்டி தொடர்பான ஐ.தே.க.வின் கட்டுப்பாடு குறித்து கூட்டணி மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப். பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் வினா எழுப்பின. தமிழர்கள் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புக் கோரிக்கையை கைவிடத்தயாராக இருந்தால், சமஷ்டி அமைப்பு முறை ஒரு பேரம் மட்டுமே என்று ஹமீது பதிலளித்தார்.

தெரிவுக்குழு மீது ஒரு முடிவைத் திணித்து அதன் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு திட்டம் ஒன்று இருந்தது என்பது தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்குத் தெளிவாகியது. இதனை உணர்ந்தே தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகள் அர்த்தபுஷ்டியான கலந்தாலோசனை ஒன்றை நடத்துவதற்காக 4 அம்ச சூத்திரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என தோற்றமளவிலான தயக்கத்துடன் வற்புறுத்தினார்கள்.

அடுத்தடுத்து இரண்டு நாட்கள் காணி மற்றும் சட்டம் ஒழுங்கு பற்றி ஆராயப்பட்டது. இந்த விடயங்களிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட இறுதி முடிவு எட்டப்படவில்லை.

சமஷ்டி பற்றி முன்னர் பேசிய, தற்போது இந்தியப் பாணிபற்றிப் பேசுகின்றவர்களினால் அரச காணிகள் அத்தனையும் மாகாண சபைகளின் பொறுப்பில் விடப்பட வேண்டும் என்ற தமிழ் கட்சிகளின் நியாயபூர்வமான கோரிக்கையை கூட கிரகித்துக் கொள்ள முடியாது போய்விட்டது. அவர்கள்அதனை கூட்டு மொத்தமாக நிராகரித்து விட்டனர்.அதிகாரப்பரவலாக்கல் பற்றி ஆராய தெரிவுக்குழுக் கூட்டம் 1992 டிசம்பர் 11ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் 4 அம்ச யோசனைகளின் முதலாவது பந்தியை ஆராய்வதற்குப் பதிலாக ஸ்ரீநிவாசன் யோசனைகளின் இரண்டாவது பந்தி எதிர்பாராத விதமாக ஆராய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.தீர்வை எதிர்பார்த்தோம் நடந்திருப்பதோ வெறும் கண்துடைப்பு".

ஆக, சிங்களப் பேரினவாத இலங்கை அரசு, ஈழத்தமிழினத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்கத் தயாராக இல்லை; இலங்கையிலிருந்து ஈழத் தமிழினம் ஜனநாயக முறையில் பிரிந்து போவதற்கான வழிமுறையை (வாக்கெடுப்பை) ஏற்கத் தயாராக இல்லை; அரசியல் வழியில் ஈழத்தமிழர் பிரச்சனைக்குத் தீர்வுகாணத் தயாராக இல்லை என்பதையே இம்முயற்சிகள் மீண்டும் ஒரு தடவை நிரூபித்துள்ளன.

இதற்கு மாறாக, ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக ஈழத்தமிழினத்தின் பிரிந்து போகும் உரிமையை மறுத்து, அவ்வுரிமைக்கான இயக்கத்தை நசுக்க முயல்கிறது. இதன் மூலம் ஒரு அடிமைத்தனமான தீர்வுக்கு ஈழத்தமிழர்களை அடிபணிய வைக்க முயல்கிறது! இந்த நோக்கத்தை மூடிமறைக்கவே "அரசியற் தீர்வு" என நாடகமாடுகிறது.

### பிரிவினையை நசுக்க உள்நாட்டு யுத்தம்:

சென்ற ஆண்டு ஜுன் மாதம் பலாலி இராணுவ முகாமில் இராணுவ அதிகாரிகளிடையே உரையாற்றிய உதவிப் பாதுகாப்பு அமைச்சர் ஜோன் அமாதுங்கா அரசின் நோக்கங்களை தெளிவுபடக் கூறியுள்ளார். "விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தம் அரசியல் முனையிலும் இராணுவ முனையிலும் தொடுக்கப்படுகிறது. முதலாவதாக விடுதலைப்புலிகளின் பலத்தை முற்றாக அழித்தொழிக்க அதிக பட்சபலம் பிரயோகிக்கப்படும். இந்த முறையில் அந்த அச்சுறுத்தலை துடைத்தொழித்த பின்னர் பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாண அரசாங்கம் முயற்சி செய்யும்." இக்கொள்கையையே வடக்கு கிழக்கு மாகாணம் முழுமைக்கும் பிரேமதாஸா அரசு கடைப்பிடித்து வந்தது.

கடந்த ஒரு வருடத்தில் மட்டும் மட்டக்களப்பில் 'ஒப்பரேசன் நேசர்', வவுனியாவில் 'வன்னி விக்ரம்', மன்னாரில் 'கிரீன்பெல்ட்', முல்லைத்தீவில் 'சக்பல', தெல்லிப்பழை - பலாலி - தொண்டமனாறு பகுதியில் 'சண்டமாருதம்', மாதகலில் 'சீலயன்', ஆனையிறவில் 'பலவேகய(2)', தெல்லிப்பழையில் 'ஏர்த்குவேக்', மன்னார் - அடம்பன் - நானாட்டான் பகுதிகளில் 'சீக்ரபார', திருகோணமலையில் 'மூன் சயின்', மட்டக்களப்பில் 'ஜயகங்கார', அம்பாறையில் 'தங்கவாள்', வன்னியில் 'கோல்ட்மைன்ட்' என தமிழீழமெங்கும் இனஒடுக்கல் யுத்தத்தைக் கட்டவிழ்த்து விட்டது.

இவ்வாண்டு வரவுசெலவு திட்டத்தில் 12 மில்லியன் ரூபாய்கள் இராணுவச் செலவுக்கு ஒதுக்கியுள்ளது. மக்களிடம் நேரடியாக அறவிடும் பாதுகாப்பு வரியை 3%மாக உயர்த்தியுள்ளது. IMF இடமும், உலக வங்கியிடமும் பிச்சைப்பாத்திரம் ஏந்தி பெருந்தொகைக்கடன் பெற்றுள்ளது.

பிரித்தானிய அரசாங்கம் 20 மில்லியன் டொலர் அந்நிய மூலதனத்தை இலங்கைக்கு ஏற்றமதி செய்ய இலங்கை அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. இதற்குப் பதிலாக இலங்கைக்கு ஆயுத விற்பனை செய்வதற்கு விதித்திருந்த தடையை பிரித்தானிய அரசாங்கம் நீக்கிவிட்டது. இதன்மூலம் இராணுவ வாகனங்களையும் வெடிமருந்துகளையும் பிரித்தானிய அரசிடம் வாங்கவுள்ளது. ஆர்ஜன்டீனாவில் தயாரிக்கப்பட்ட இரு 'புக்காரா' குண்டுவீச்சு விமானங்கள் வாங்கப்பட்டுவிட்டது. ரசிய தயாரிப்பான M18 ஹெலிகொப்டர்கள் வாங்கியுள்ளது. ஹாபின் Y8 விமானத்துக்கு வேண்டிய உதிரிப்பாகங்கள் சீனாவிடம் வாங்க ஏற்பாடு செய்துள்ளது.

அறுபதாயிரம் பேரைக் கொண்ட இராணுவத்தை மேலும் பத்தாயிரத்தால் அதிகரிக்கவுள்ளது. இதில் ஆறாயிரம் பேரைத் திரட்டிக்கொண்டு விட்டது. இவர்களில் மூவாயிரம் பேருக்கு மூன்று மாத கால அவசரப்பயிற்சி அளிக்கப்பட்டு வடக்கு - கிழக்கில் "கடமையாற்றுவதற்காக" நிரந்தர சேவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் மூவாயிரம் பேர் ஏப்ரல் மாதமளவில் வடக்கு-கிழக்கில் "கடமையாற்ற" அனுப்பப்படவுள்ளனர். இராணுவத்துக்குள் கடும் அடக்குமுறைகளைக் கையாள்கிறது. விலகி ஓடிய இராணுவ வீரர்களைப் பிடிக்க பொலிஸ் தேடுதல் வேட்டை நடத்துகிறது. மன்னாரில் காணாமல் போனவர் மாலைதீவில் கைது செய்யப்படுகின்றார்!

குடாநாட்டின் மீதான பொருளாதாரத்தடையை நீக்க மறுக்கிறது. எரிபொருள், உணவு, மருந்து, குழந்தையுணவுகள் கூட தடுக்கப்படுகின்றன. மெழுகு வர்த்தி எடுத்துச்சென்ற மதகுரு தடை முகாமில் உதைபடுகிறார். குடாநாட்டின் மீதான சுற்றிவளைப்பை நிலைநிறுத்த, பூநகரி இராணுவ முகாமை அகற்றி சங்குப்பிட்டி-கேரதீவுப் பாதையை பொதுமக்களின் பாவனைக்குத் திறந்துவிட மறுக்கிறது.

### கிழக்கைத் துண்டாடும் அரசின் திட்டம்:

வடக்கு கிழக்குப் பிரச்சனைக்கு தீர்வுகாண பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் முடிவை எதிர்பார்த்திருப்பதாக நாடகமாடிக்கொண்டு, கிழக்கு மாகா

## சுதந்திரம் நெடுந்தீவில்!!

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நெடுந்தீவில் இலங்கையின் 45வது சுதந்திரதினம் கொண்டாடப்பட்டது. தேசியக்கொடியை ஏற்றிவைத்து இக்கூட்டத்தில் உரையாற்றிய திரு டக்ளஸ் தேவானந்தா கூறியதாவது,

'எங்களுடைய தேசிய ஒருமைப்பாட்டையும் விடுதலையையும் பாதுகாக்க நாங்கள் ஜனாதிபதி பிரேமதாஸா அவர்களின் கரங்களைப் பலப்படுத்த வேண்டும். இவர் சமுதாயத்தின் பல்வேறு பிரிவு மக்களுக்குக் இழைக்கப்பட்டுள்ள அநீதிகளை களைந்தெறிய மாபெரும் முயற்சி எடுத்து வருகின்றார். சிறீலங்காவில் வாழும் தமிழ்க் குடிசனங்கள் இவர் மீது தமது முழு நம்பிக்கையையும் வைக்க வேண்டும்!

திரு. டக்ளஸ் தேவானந்தா ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ணத்தை துண்டாடும் அரசியல், இராணுவ முயற்சிகளை முடுக்கிவிட்டுள்ளார் பிரேமதாஸா.

ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கை அறிக்கை வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கிறது. 'இணைப்பை எதிர்த்து நான் பிரச்சாரம் செய்வேன்' என, முன்பு ஒரு தடவை பிரேமதாஸா கூறியிருந்தார். ஸ்ரீநிவாசன் போன்ற எலும்புத்துண்டுக்கு அலைபவர்களையும், அஸ்ரப் போன்ற UNP அடிவருடிகளையும் பயன்படுத்தி வடக்கு கிழக்கைத் துண்டாடும் அரசியல் பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மாறாக கொழும்புத் தமிழ்க்கட்சிகள் இணைப்பை வலியுறுத்துகின்றனர்.

இந்த விவாதம் நடந்து கொண்டிருக்கிறபோதே கிழக்கு மாகாணத்தில் படை குவிக்கப்படுகிறது. புதிய இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. மட்டக்களப்பில் 'ஜெயகெங்கா' என்ற பெயரில் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகள் தொடங்கிவிட்டன.

மறுபுறம் மாகாணசபைத் தேர்தலுக்கான ஆயத்தங்கள் செய்யப்படுகிறது. "இந்திய மாதிரி" தேர்தல் நடத்துவதற்கு வசதியாக தேர்தல் சட்டம் திருத்தப்படுகிறது. தேர்தல் நடக்கும் மாகாணத்துக்கு வெளியே இருந்தும் அத்தேர்தலில் வாக்களிக்கலாம் என்பது அத்திருத்தமாகும். இது தேர்தல் மோசடிகளுக்கான சட்ட அங்கீகாரமே! இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் மட்டுமோ அல்லது வட கிழக்கு மாகாணங்களிலோ ஓடுகாலித் தமிழ்க் குழுக்களின் மாகாண அரசாங்கத்தை அமைக்க இலங்கை அரசு முயல்கிறது. தமிழ் மக்களுக்குத் துரோகமிழைத்து இந்திய இலங்கை ஆளும் கும்பல்களின் அரவணைப்பில் வாழ்கிற "தமிழ்க் குழுக்களும்" தேர்தற் கூட்டுக்கள் அமைக்கத் தொடங்கி விட்டன.

அண்மையில் "தீவிரவாதப் போக்கை கைவிடுவதாக பிரகடனம் செய்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த புலிகள் முன்வரவேண்டும்" என பிரேமதாஸா அறிவித்தார். இந்த அறிவிப்பு மேற்படி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான யுத்தப் பிரகடனமே ஆகும்.

இறுதியாக 1990 ஆண்டு ஜுன் மாதம் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அரசியல் தீர்வு காண்பதாக சொல்லி மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் அனுபவங்களைத் தொகுத்துப் பார்ப்போமானால்,

அ) பிரேமதாஸா அரசு ஈழத்தமிழினத்தின் அரசியல் சுதந்திரத்தை சுய நிர்ணய உரிமையை அங்கீகரிக்க மறுக்கிறது. ஜனநாயக முறையில் பிரிந்து போவதற்கான வழிமுறையை (வாக்கெடுப்பை) ஏற்கத் தயாராக இல்லை. அரசியல் வழியில் தீர்வு காணத் தயாராக இல்லை.

ஆ) அதற்கு மாறாக ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக பிரிந்து போகும் உரிமைக்கான இயக்கத்தை நசுக்க முயல்கிறது.

இ) இதன் மூலம் இன ஒடுக்கமுறையையும், பாசிஸ ஆட்சிமுறையையும் பாதுகாக்கிற ஒரு அடிமைத்தனமாக தீர்வுக்கு தமிழ் மக்களை அடிபணிய வைக்க முயல்கிறது.

ஆகையால் ஈழத்தமிழினம் அரசியல் சுதந்திரம் பெறும் பொருட்டு தனிநாடு அமைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது, இதனை ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக அடைவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது.

இந்நிலையில் "அரசியல் தீர்வு-யுத்த நிறுத்தம்" என்ற முழக்கங்கள், இதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்ற எண்ணத்தை மக்களுக்கு ஊட்டுகின்றன. விடுதலை யுத்தத்தில் ஊன்றி நிற்பதன் தவிர்க்க இயலாத அவசியத்தை உணர்த்தத் தவறுகின்றன. இதன்மூலம் எதிரியின் நோக்கங்களுக்கு தெரிந்தும், தெரியாமலும் துணை போகின்றன. இதனால் தோல்வியைத் தழுவுகின்றன.

இதற்குப் பதில் 'ஜனநாயகத் தனியரசு - விடுதலை யுத்தம்' என்ற முழக்கங்களே உண்மை நிலைக்குப் பொருந்துபவையாக உள்ளன. ஒடுக்கப்படும் தமிழினத்தின் நலன்களைப் பிரதிபலிப்பவையாக உள்ளன. எதிரிகளைச் சார்ந்திருக்க விரும்பியோ, அல்லது மக்கள் மத்தியிலான முரண்பாடுகளை - விடுதலைப் புலிகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் இடையிலான முரண்பாடு - விடுதலைக்குச் சேதமில்லாத வகையில் கையாளத் தெரியாததாலோ, அல்லது இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தின் தன்மையை சரியாக மதிப்பிடத் தவறியோ மேற்படி முழக்கங்களை எதிர்ப்பதும், முன்னெடுக்கத் தவறுவதும் தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

(5. March. 1993)

## "இந்திய மாதிரி....."

"நமது மாநிலங்கள் நகராட்சிகளா? பல ஆண்டுகளுக்கு முன் நானே அமைச்சராக இருந்திருக்கிறேன், நகராட்சித் தலைவராகக்கூட அல்ல; ஓர் உதவித் தலைவர் என்ற வகையிலேயே அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த அனுபவம் இருந்தது. போலீஸ் சைரன் முன்னால் ஒலிக்க,பின்னால் ஜீப்வர, தேசியக் கொடி காரில் பறக்க ஒரு மிக முக்கியமான பிரமுகர் போகிறார் என்பதை விடவும் அதிகப்படியான விசயம் எதுவுமில்லை அது. உள்ளே உட்கார்ந்திருக்கும் மனிதருக்கு, பூஜ்ஜியமாகிப்போன நகராட்சித் தலைவருக்குள்ளதைவிட கூடுதல் அதிகாரம் எதுவும் இருக்காது.

தொலை தூரத்தில் உள்ள கன்னியாகுமரியில் ஒரு கிணறு வெட்ட வேண்டுமென்றாலும், அந்த அமைச்சர் எல்லாப் பரிவாரங்களுடனும் விமானத்தில் டெல்லிக்கு வந்து, திட்டக் குழுவிடம், கன்னியாகுமரியிலும் கூட கிணறுகள் மனித ஜீவன்களுக்கு இன்றியமையாதவை என்பதை விளக்கியாக வேண்டும்.

உயர் நீதிமன்றங்களுக்கும் உச்சநீதிமன்றங்களுக்கும் நீதிபதிகளை நியமிப்பதில், மாநிலங்களின் குரல் எங்காவது கேட்கிறதா.?"

V.R. கிருஷ்ண ஐயர்
(Popular Jurist- இருமாத இதழ்-Vol. 1No. 1
Jan, Feb- 84 பக்கம்- 21)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# இவர்கள்.....

செல்வன் உ.சேரன்

சில வேளைகளில் இப்படித்தான். இரவு இரண்டு, மூன்று மணிக்கே தூக்கம் முறிந்து விடும். பிறகு கொஞ்ச நேரம் இப்படியும் அப்படியுமாகப் புரள வேண்டியது. எழுந்து சலனமில்லாத நிசிப்போதிலே வெளி முற்றத்துக்கு வந்து கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பது, பிறகு மீண்டும் படுப்பது.

இன்றும் அப்படி ஓர் இரவுதான்! மத்தியானம் சாப் பாட்டுக்குப் பிறகு தூங்கி எழுந்தது - ஒரு குறைப்பிரசவமான தூக்கத்திலிருந்து இவனை எழுப்பிவிட்டிருக்கிறது. பின்னேரம் படித்துவிட்டு வைத்த புத்தகத்தை எடுக்கலாம் என்றால் - இனி ஒரு தரம் அடுப்படிக்குப் போய் - திரண்டிருந்த இருட்டுள் அரைப் பார்வையோடு துழாவி நெருப்புப் பெட்டி, கைவிளக்கு எல்லாவற்றையும எடுத்து...! பிரச் சனையின் சிக்கலை உணர்ந்தவனாய் "ச்சாய் வேண்டாம்! இப்படியே கிடப்பம்" என்று நினைத்தவன் - கீழே விழுந்திருந்த தலையணையை எடுத்தான்.

யன்னலுக்கு வெளியில் வேப்பமரம் சலசலத்தது. அண் ணாந்தபடி இவன் அப்படியே படுத்திருந்தான். அம்மா தூக்கத்தில் முனகுவது அறை முழுவதும் வியாபித்தது. சளார் சளார் என்று இந்தச் சோளகக் காற்று மண்ணை அள்ளி இறைக்கிறது. அறைக்குள்ளும் மண் இறைத்தது. நேற்றைய நிகழ்வுகள் இழைகள் இழைகளென எழுந்து இவன் மனத்தில் வலைபின்ன ஆரம்பித்தன. "திங்கட்கிழமை பேராதனைக்குப் போகவேணும்!" என்று நினைத்துக் கொண்டான். பெரும்பாலும் இந்தமுறை இன்டர்வ்யூ சக்ஸஸ் ஆகத்தான் முடியும். அப்பிடியெண்டால் ரத்தின பாலன்ரை அறையிலை கொஞ்சநாளைக்கு நிக்கலாம்." என்றும் நினைத்தான்.


தூக்கம் இனி வரவே வரமாட்டாது என்று நிச்சயமான வுடன், எழுந்து வெளியே வந்தான். முற்றத்துக்கு அப்பால் தலையுயர்த்திச் சலசலத்தன பனைமரங்கள்.... தலைக்குமேல் மெதுவாக இழைந்தது காற்று... சலனமற்ற இரவு மனதில் இனந்தெரியாத நெருடல் - இவனுக்கு இப்போதும் அந் தக் கதைதான் ஞாபகத்துக்கு வருகிறது - *Hunch Back of Notredame* - மிதந்த வாயுடன் விந்தி விந்தி நடக்கும் களிமோ... அந்த வெள்ளை ஆடு...அமைதியைக் கீறியபடி ஒரு மெஷின் சத்தமிட ஆரம்பித்தது. இந்தப் பக்கங்களில் இதுதான் அதிகாலையை அறிவிப்பதாக அவன் எண்ணினான். நேரம் நாலு மணி இருக்கும். வீட்டுக்குள் அண்ணன் மெஷினை இழுத்து வருவது தெரிந்தது. அண்ணை இறைப்புக்கு ஆயத்தம். இவனும் போகவேணும் என்று நினைத்தவனாய் மெதுவாய் நடந்தான். அமைதியை மீறி மெஷின் இரைந்தபடி அசைந்துகொண்டிருந்தது. இவனது நாலு வருஷப் படிப்புக்குப் பிறகு இவனாகத் தோட்ட வேலைகளில் ஈடுபடுவதில் வீட்டுக்காரர் ஒருவருக்கும் அவ்வளவாக இஷ்டமில்லை. இவனுடைய தாயும், மூத்த அக்காளும் எப்போதும் புறுபுறுத்துக் கொண்டிருப்பதும் இவனுக்குத் தெரியும். இவன் இங்கு வந்து மூன்று மாத மாகிறது. ஒரேமாதிரி வாழ்க்கை - விடிந்தால் - பொழுதுபட்டால் சாப்பாடு, குளிப்பு எல்லாம் போக, படிப்பதுதான். இதுக்கு முன்பு இப்படிப் பயங்கரமாக இவன் படிக்கவில்லை - கம்பஸிலை கூட எப்போதாவது இருந்துவிட்டு நல்ல நாவல் அல்லது கவிதைகள் படிப் பதோடு சரி, இங்கு வந்ததும் என்ன தொழில்-? ஜானகி ராமன், அசோகமித்திரன் என்றும் கேசவதேவ், பஷீர் என்றும் இவனுக்கு அறிமுகமானதும் அத்துப்படியானதும் இந்தக் கொஞ்சக் காலங்களிலேதான் -!

சென்ற கிழமை தொடக்கம் மாலைப்போதுகள் இவனுக்கு மிக அருமையாகக் கழிந்துகொண்டிருந்தன. மாதவன் வந்து கூப்பிடுவான். இரண்டு பேரும் வெய்யில் மேற்கே சரிந்துகொண்டிருக்கிற நேரத்தில் கீரிமலைக்குப் பேவார்கள். நிலவும் கழியும் இரவுப்போதுகளில் கடலை நோக்கியபடி மணிக்கணக்காக... மணிக்கணக்காகக் கதைப்பார்கள். பிறகு ஒரு தேநீர் குடித்தால் மிகவும் திருப்தியாக இருக் கும். இப்படியான சூழ்நிலைகள் தரும் ரம்மியங்களில்.. வாழ்வில், தான் இழந்துபோன சில அர்த்தங்கள் ஏதோ புரிவது போலவும் புரியாதது போலவும் இருக்கும், இவனுக்கு.

2

மேற்கு நோக்கி யன்னல்கள் திறந்திருந்த இவனது அறையில், இவன் படுத்திருக்கும் கட்டிலில் சரியாக மூன்று மணிக்கு வெய்யில் பிடிக்க ஆரம்பிக்கும். எப்படி யும் மூன்றரை மணிக்குள் வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்துவிடலாம். அதுவரையும் எவ்வளவு சந்தோஷமான நித்திரை என்று இவன் அடிக்கடி நினைத்துக்கொளவதுண்டு. கம்பஸிலை, அக்பர் ஹோலில் இருக்கிறபோதுதான் இப்படி நித்திரை கொள்வதாக ஞாபகம். மற்றப்படி அங்கே படிப்பதற்கே நேரம் சரியாகப் போய்விடும்.

இவன் எழுந்து கிணற்றடிக்குப் போனான். "தம்பி ஒருக்கால் - கொண்ணன் வந்து கூப்பிட்டவனடா... தேத் தண்ணியைக் குடிச்சுப்போட்டுப் போ ராசா...!" அம்மாவின் குரல் அடுப்படியிலிருந்து கிணற்றடிவரை நிறைந்தது. முகம் துடைத்தபடி அறைக்குள் வந்து ரேடியோவைப் போட்டான். வாசலில் குரல் கேட்டது. "மாதவனோ?"



என்று நினைத்தபடி திரும்பினான்.

மாதவன்தான் சைக்கிளில் சாய்ந்தபடி நின்றிருந்தான். இதழ் விரிய இவன் முறுவலித்தான். அந்த அர்த்தத்தைப் புரிந்தவனாய் "ஐயரிட்டைப் போவமா?" என்றான் மாத வன்.

"அதுக்கென்ன! அண்டைக்கு வாங்கின புத்தகங்களைக் குடுக்கலாம். இண்டைக்கும் ஒரு நாலு புத்தகம் வேண் டினால் இரண்டு மூண்டு நாளைக்கு - ஒரு மாதிரிக்காணும்..." சொல்லிக்கொண்டே சட்டையைப் போட்டுக்கொண்டான்.

"சரி போவமே -!" மாதவன் கேட்டபடி பெடலை உந்தினான். ஒழுங்கையில் இறங்கியபோது நாயொன்று ஊளையிட்டபடி ஓடிற்று. சற்று மூடம் போட்டிருந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெதுவாக நகர்ந்த கருமேகங்கள் வான் முற்றும் சூழ ஆரம்பித்தன.

"மழை பெய்யும் போலை கிடக்கு..." என்று சொல்லியபடியே இவர்களின் பதிலுக்குக் காத்திராமல் வைக்கோல் கட்டுடன் ஒருவன் இவர்களைக் கடந்து போனான்.

"பள்ளி கொண்டபுரம் எப்பிடி?" மாதவன் கேட்டான். இவன் உடனே "அருமை" என்றான் "தலைமுறைகளில் பாக்க இது பெற்றர் எண்டு நான் நினைக்கிறேன் - தலைமுறைகளிலை கடைசிச் சில பக்கம் - சினிமா மாதிரி முடிஞ்சுபோச்சு ஐசே -! ஆனா இது பரவாயில்லை. அந்த உரையாடல் சோக்கா அமைஞ்சு போச்சு -!" இவனுடைய லயிப்பு - பள்ளிக்கொண்டபுரம் - என்கிற நாவலிலேதான் என்பது மாதவனுக்கு புரிந்தது -

"எண்டாலும் தலைமுறைகளிலை வாற திரவியம் மாதிரி ஒரு பாத்திரம் உண்மையிலை நான் இதுக்கு முந்தி இப்படிக் காணேல்லை. அநதப் பொடிப்பிள்ளை புத்தகக் கட்டும் கையுமா நடந்துபோற மாதிரி அடிக்கடி எனக்கு ஞாபகம் வருது -!" மாதவன் சொன்னான். அதிலும் உண்மை இருக்கிறமாதிரி இவனுக்குப் பட்டது.

3

ஐயர் வீட்டடியில் ஒரு நாய் துரத்த ஆரம்பித்தது. இத்தோடு மூன்றாவதோ நாலாவது தடவையாக அந்த நாய் இவர்களைத் துரத்துவதாக இவன் எண்ணிக் கொண்டான். சடாரென "பிரேக்" போட்டதில் ஏற்பட்ட சத்தத்தில் நாய் திரும்பி ஓடிற்று. இந்த அமளியில் ஐயரின் குரல் கேட்டது. இவனைத்தான் முதல் கண்டார் "ஹலோ சண்மு -" என்று சிரித்தார். பிறகு மாதவனையும் கண்டு "ஐசே-என்ன இரண்டுபேரும் திடீரெண்டு-" என்றபடி இவர்களையும் அழைத்து உள் நகர்ந்தார். கதிரையில் அமர்ந்ததும் ஐயர் மெதுவாக அடுப்படிப் பக்கம் திரும்பி - "இஞ்சேரும் -" என்று குரல் கொடுத்தார்.

பிறகு இவர்கள் கதைத்தார்கள் - இரண்டு, மூன்று மணித்தியாலங்கள் சிரிப்பும் - கதையுமாய் இவர்கள்... அது எவ்வளவு இனிமையானது என்பதும் இவர்கள் பிரிந்து போனபின்னர் தனித்தனியே இவர்களுக்கு உறுத்த ஆரம்பிக்கும் - இன்னும், வெறுமை சூழ்ந்து - மனம் அலைபாய்ந்த நேரங்களில் இந்த இனிய நேரங்களின் நினைவு மெல்ல வருடிச் செல்லும்.

'போவமா?' என்று, எழுந்து, வெளியில் வந்து நின்று ஒரு அரை மணித்தியாலம் கதைப்பார்கள்! மீண்டும் மெது மெதுவாய் நடந்து வந்து கேற்றடியில் இன்னும் கொஞ்ச நேரம். கடைசியாக இவன் அம்பனைக்கு வந்தபோது எட்டரை மணியிருக்கும். நாளைக்கு யாழ்ப்பாணம் போகவேணும் என்று நினைத்தபடி டைனமோவைப் போட்டான். நாளைக்கு யாழ்ப்பாணத்தாலை வந்து ஒரு நித்திரை அடிச்சாத்தான் பின்னேரம் தெம்பாயிருக்கும். பின்னேரம் சிலவேளை மாதவன் வருவான். வந்தால் - ஒருக்கா கீரிமலைப்பக்கம் போகலாம்... இல்லாட்டி... என்ன செய்வதென்று இவனுக்குத் தெரியவில்லை.

இனி - இவன்மட்டும்... இவன்மட்டுந்தான். வீட்டில் ஒரு மூலையில் முணுக் முணுக்கென்று கைவிளக்கு ஒளி உமிழ... புத்தகம், நித்திரை. "என்ன சவம் பிடிச்ச வாழ்க்கை!" இவனுக்கு அடிவயிற்றிலிருந்து ஏதோ புறப்பட்டு வருகிறமாதிரி இருந்தது. "4 வருஷம் படிச்சுக் கிழிச்சு எடுத்த பி.ஏ. ஒணேர்ஸ் இப்ப என்ன செய்யிது -"

இவன் ஒரு இன்டெலக்சுவலாக மாறிப் போய்விட்டதில் நஷ்டம் இவனுக்குத்தான்.

"இதென்ன...? ஏதோ பெரிய படிப்புப் படிக்கிறன் எண்டு போனவர் படிச்சுப்போட்டு வந்து வீட்டிலை புத்தகத்தோடை இருக்கிறார்." என்ற அக்காவும், அண்ணையும் சாடைமாடையாகக் குசுகுசுப்பது இவனுக்குத் தெரியாததல்ல. ஊர்சனம் 'இதென்ன இந்தப் பெடியன் வேலை வெட்டி இல்லாமல் இப்பிடி இருக்குது?" என்று ஆதங்கப்படும். ஒரு சின்ன வேலை என்றாலும் காற்சட்டை போடுவதானால் அவர்களுக்குப் போதும். இப்போது இவனுடைய வீட்டிலும் சாதகக் கட்டுகள் அடிபட ஆரம்பித்துவிட்டிருக்கிறது. "சீ - எங்கையெண்டாலும் போகவேணும். அந்த சீமென்ற் கோப்பரேஷன் வேலையை எண்டாலும் தொடர்ந்து பார்த்திருக்கலாம்-!" இப்படி நினைப்பதற்காக அவன் வெட்கப்பட்டான். அந்த வேலையை உதறி எறிந்துவிட்டுத் திரும்பவும்போது இப்படி யோசிப்பேன் என்று இவன் நினைத்தேயிருக்கவில்லை. அவ்வளவு. தூரம் வெறுத்து ஒதுக்கி விட்டுத்தான் வந்தான். என்றாலும் இப்போது"

இவன் அம்மாவுக்கு மட்டும் ஒரு ஆறுதல், "பெடியன் எங்கடேளாடைதான்" என்று.

எப்படியும் இந்தமுறை கம்பஸிலை இந்த வேலை கிடைக்கும் என்று நம்பினான். பிறகு பார்ப்போம் மிச்சத்தை என்று எண்ணினான்.

*******

கைவிளக்கை அணைத்து விட்டு சரிந்தபோது நித்திரை இப்போது வராது என்று இவனுக்குத் தெரிந்தது. பின்னிலவுக் காலம் என்றதால் நிலவு தலை நீட்டியிருந்தது. தென்னோலைக் கீற்றின் நிழல்கள் சுவரில் அசைந்தன. கால்களுக்கடியில் தலையணை நசிய மறுபுறம் திரும்பிப் படுத்துக்கொண்டான்.

யாழ்ப்பாணத்தில் இவன் திரும்பிய போது இன்டர்வ்யூ லெட்டர் வந்திருந்தது. "இண்டைக்கு மெயிலில் போகலாம். பின்னேரம் மாதவன் வாறனெண்டவன்-" என்று. நினைத்தபடி துவாயை எடுத்துக் கொண்டு கிணற்றடிக்குப் போனான்.

திரும்பிவந்து சூட்கேசை எடுத்து உடுப்புகளை மடித்து வைத்து அடுக்க ஆரம்பித்தான்.

"தம்பி - உனக்கு ஏதோ கடுதாசி வந்ததடா -" என்றாள் அம்மா. "ஓமணை - பார்ததனான்!" இவன் பிறஷையும், பற்பசையையும் எடுத்து வைத்தான். அம்மா மெதுவாக நகர்ந்து அப்பால் போய் விட்டாள். அவளுக்கு இது ஒன்றும் புதிதல்ல. ஐந்து வருட காலமாக அடிக்கடி இப்படித்தான் இவன் வருவதும் போவதுமாக இருந்ததால் அவள் இதைப் பெரிது படுத்துவதில்லை. முட்டை மட்டும் பொரித்து இவனுக்குச் சாப்பாடு கட்டி வைத்துவிட்டுப் போய் அமர்ந்துவிடுவாள். இவன் "போட்டுவாறன்!" எண்டு சொன்னால் மெதுவாகத் தலையாட்டுவாள். இவன் தலை மறைந்த பிறகு சேலைத் தலைப்பால் கண்களை ஒற்றிக்கொண்டவாறு மீண்டும் அடுப்படிக்குள் போய்விடுவாள்.

நாலு மணிக்கு வாசலில் மாதவன் குரல் கொடுத்தான் - இவனது தோற்றத்தைக் கண்டவுடன் - "என்ன பயணமோ -" என்றான். இவன் தலையசைத்தபடி உள்ளே போய்ச் சூட்கேஸை எடுத்துக் கொண்டு வந்தான். உள்ளேபோய் அம்மாவிடம் சொல்லிக் கொண்டான்.

"6-20க்குத்தானே மெயில். ஒருக்கா ஐயரிட்டைப் போனம் எண்ணடால் இந்தப் புத்தகங்களைக் குடுத்துவிடலாம். இனித திரும்பி எப்ப வருவன் எண்டு சொல்ல முடியாது -" மாதவன் ஓமென்ற மாதிரித் தலையசைத்தான். இவர்கள் 'பார் லேனா"ல் திரும்பி ஐயர் வீடு போனார்கள். ஐயரையும் அழைத்துக்கொண்டு ஸ்ரேஷனுக்கு வந்தார்கள்.

"இண்டைக்கு நல்ல சனம். உமக்கு கோணர் சீற் கிடைக்கிறது கஷ்டம் -" என்ற ஐயர் சொல்லிக்கொண்டே இவனிடமிருந்து சூட்கேசை வாங்கிக் கொண்டார். நல்ல சனம்தான் என்று இவனும் இணைந்தான்.

ஓலமிட்டபடி வந்த வண்டியில் ஏறி யன்னலூடாக எட்டிப் பார்த்தான். ஐயர் மெதுவாக இவன் கையைப் பிடித்துக் குலுக்கினார். மாதவன் மெதுவாகச் சிரித்தான். இவனும் சிரித்தபடி "அப்ப வரட்டே சந்திப்பம்தானே!" என்றான்.எதிர்திசையில் மெதுவாக நகர்ந்தது உலகம்-.

நன்றி: 'மகாஜனன்' மகாஜனக்கல்லூரி ஆண்டிதழ். (1976)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐக்கிய நாடுகள் சபைக்கு விடுதலைப்புலிகள் மனு: ஆபத்தான பாதை

"தமிழ்த் தலைவர்களில் ஒருவரான சதாசிவம் கிருஸ்ணகுமாரும் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களான ஒன்பது பேரும் இந்து மகா சமுத்திரத்தில் மரணமடைவதற்கு இந்திய அரசாங்கம் காரணமாக இருந்தது". இக்குற்றத்தை விசாரிக்க "ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்துக்கு அமைய ஐக்கிய நாடுகள் சபை, விசாரணை மன்றமாகச் செயற்படக்கூடிய விசேட குழு ஒன்றை அமைக்குமாறு" தமிழீழ மக்களின் சார்பில் விடுதலைப்புலிகள் அமைப்பு ஐக்கிய நாடுகள் சபையைக் கோரியுள்ளது.

வளைகுடா யுத்தம், ரசிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி ஆகிய இரு நிகழ்ச்சிகளுக்குப் பின்னர் சர்வதேசிய அரசியற் சூழ்நிலைமை மாறிவிட்டது. இதற்கு முன் உலகைப் பங்கு போட்டுக்கொள்ள போட்டியிடும் இரு ஏகாதிபத்திய வல்லரசுகளாக அமெரிக்காவும், ரசியாவும் இருந்தன. இவற்றின் தலைமையில் அரசியல், பொருளாதார, இராணுவக்கூட்டணிகள் இருந்தன. இவ்வாறு உலகம் இரு ஏகாதிபத்திய முகாமாக பிளவுண்டிருந்தது. இம்முகாம்களுக்கிடையே எழும் பிணக்குகளின் மையமாக ஐ.நா.சபை விளங்கியது. உறுப்பு நாடுகளின் பொருளாதார வலிமை, அதற்கமையக் கிடைக்கும் வாக்குப்பலம் ஐ.நா.சபையின் தீர்மானங்களை தீர்மானிப்பதாய் இருந்தது.

இன்று நிலைமை மாறிவிட்டது. உலக மேலாதிக்கத்திற்காகப் போட்டியிட்டுக் கொண்டிருந்த இரு மேல்நிலை வல்லரசுகளின் தலைமையிலான இரு ஏகாதிபத்திய கூட்டணிகளில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்தின் அணி வீழ்ச்சி அடைந்து விட்டது. இன்று சர்வதேச அரசியல் அரங்கில் பிரதான சக்திகளின் சமநிலையில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் மேலாதிக்கத்தை ஜேர்மன், பிரான்ஸ், மற்றும் ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய அரசுகள் ஏற்க மறுக்கின்றன. ஏகாதிபத்திய கூட்டணிகள் புதிதாக உருவாகும் சூழ்நிலைமையையும் உலகம் எதிர்கொண்டிருக்கிறது. ஆகையால் இன்று உலகம் மாறும் நிலையிலுள்ள ஒரு கட்டத்தைக் கடந்து கொண்ருக்கிறது.

இக்காலப்பகுதியின் குணாம்சங்களில் ஒன்று, அமெரிக்காவின் தலைமையில் ஏகாதிபத்திய நாடுகள் ஐ.நா.சபையை ஏகபோக முதலாளித்துவத்தின் அரசியல் அடக்குமுறைக் கருவியாகப் பயன்படுத்துவதாகும். ஈராக்கிலும், யூக்கோஸ்லாவியாவிலும், சோமாலியாவிலும் இதனையே காண்கிறோம். இன்று அமெரிக்காவுக்கும் ஐ.நா.சபைக்கும் இடையேயான உறவு, 'ஐ.நா.சபை வரும் முன்னால் - அமெரிக்கப்படை வரும் பின்னால்' என்பதாக உள்ளது.

மறுபுறம் வளைகுடா யுத்தத்தில் இருந்து இன்றுவரை உலகின் மீது தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதன் ஒரு பகுதியாக இந்தியாவை தனது ஆதிக்கத்துக்கு உட்படுத்த அமெரிக்கா எடுத்துவரும் முயற்சிகளுக்கெதிராக இந்திய ஆளும்வர்க்கம் தனது சுண்டு விரலைத் தானும் அசைக்கவில்லை. மாறாக ஈராக் யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்கப் போர் விமானங்களுக்கு சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்பியது, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமெரிக்கக் கடற்படைகளுக்கு இடமளித்துள்ளது. IMF -உலக வங்கியின் ஆணைக்கு கட்டுப்பட்டுள்ளது. இவ்வாறு அமெரிக்க ஆதிக்கத்துக்கு அடிபணிந்து நிர்வாணமாக நிற்கிறது.

தெற்கு ஆசியாவில் இந்தியாவின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று கர்ணாஜி அறக்கட்டளையைச் சேர்ந்த அமெரிக்க அறிஞர்கள் வற்புறுத்துகின்றார்கள். முன்நிபந்தனை விதிக்காமல் தெற்கு ஆசியாவில் இந்தியாவுக்கு முதன்மை அளிக்கக் கோருகிறார்கள். இந்தியாவையும் சீனாவையும் சமமாக நடத்த வேண்டும், பாகிஸ்தானுடனான இராணுவ உதவி ஒப்பந்தத்தை ரத்துச் செய்ய வேண்டும், இந்தியாவுக்கான கடனின் அளவை அதிகரிக்க வேண்டும் எனக் கோருகிறார்கள்.

இந்த "தென்னாசியாவில் இந்தியாவின் முக்கியத்துவம்" என்பது என்ன? இப்பிராந்தியத்தின் ஏகாதிபத்திய ஏஜென்டாக இருந்து, பிராந்திய நாடுகளின் விடுதலைக்கும் ஜனநாயகத்துக்குமான இயக்கங்களை நசுக்கி தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவது தானே. இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், "இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே வளர்ந்து வரும் இராணுவ உறவு தென்னாசியாவின் பதற்ற நிலைக்கு காரணமான சக்திகள் என அமெரிக்கா கருதுகிறவற்றை அகற்ற உதவும். இதன் மூலம் பிராந்தியத்தின் ஏனைய நாடுகள் நன்மையடையும்." எனக் கூறியிருப்பதும், காஸ்மீர் விவகாரத்தில் ரசியா உட்பட தனது கூட்டணி நாடுகள் தலையிடல் கூடாது என அமெரிக்கா ஆணையிட்டிருப்பதும் இதையே காட்டுகின்றன.

எனவே, இன்றைய சர்வதேசியச் சூழ்நிலையில், உலக மேலாதிக்கத்துக்கான போட்டியில் அமெரிக்கா தனது ஏகபோகத்தை - "புதிய உலக ஒடுக்குமுறையின் கருவியாக ஐ.நா.சபை இருப்பதையும், தென்னாசிய நாடுகள் மீதான நவீன காலனியாக்கத்துக்கு இந்திய ஆளும் வர்க்கத்தை காவலாளியாக கருதுவதையும் காண்கிறோம்.

இச்சூழ்நிலையில், ஏகாதிபத்திய மற்றும் விஸ்தரிப்புவாத நலன்கள் காரணமாக, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒழித்துக்கட்டக் கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசு, ஈழத்தமிழர்களுக்கு இழைக்கும் அநீதிகளுக்கும், விடுதலைப் புலிகள் மீது தொடுக்கும் தாக்குதல்களுக்கும் ஐ.நா.சபையிடம் இருந்து நீதி கிடைக்கும் என எதிர்பார்க்க முடியுமா? இது ஐ.நா.சபை மீது தமிழ் மக்களுக்கு தவறான நம்பிக்கையை ஏற்படுத்துவது ஆகாதா? 'இந்திய மத்தியஸ்த்தை' நம்பி தமிழ் மக்கள் பட்ட பாடு போதாதா? இப்போது ஐ.நா. மத்தியஸ்த்தம் பற்றிப் பேசி இன்னொரு தடவை இரத்தத்தால் விலைகொடுக்கப் போகிறோமா?

"தமிழீழ மக்கள் தமது முறைப்பாடுகளை எடுத்துக்கூற ஐ.நா.சபையைத் தவிர வேறு ஸ்தாபனம் எதுவும் இல்லை" என்கிறார்கள் விடுதலைப்புலிகள். இது எதிரிகளுக்கிடையேயான முரண்பாட்டை கணக்கில் எடுத்துக் கொண்டு போராடுவதற்குப் பதிலாக அவர்களைச் சார்ந்து நின்று போராடுவது என்பதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் "... வேறு ஸ்தாபனம் எதுவும் இல்லை" என்பது உலகெங்கும் தமது விடுதலைக்காகப் போராடிக் கொண்டிருக்கும் ஒடுக்கப்படுகிற மக்களையும், அவர்களுக்கு தலைமை தாங்கும் ஸ்தாபனங்களையும் நிராகரிக்கிறது. இணைத்துப் பார்த்தால், விடுதலைப் போராட்டத்துக்கு நேரடியாக உதவும் சக்தியாக எதிரிகளுக்கிடையேயான முரண்பாடு மறைமுகமாக மட்டுமே உதவ முடியும். அவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமே தவிர அவற்றைச் சார்ந்து நின்று போராடி விடுதலையை வென்றெடுக்க முடியாது. விடுதலைப்புலிகள் அமைப்பு இதுவரையிலும் எதிரிகளுக்குப் பணிந்து தமிழீழ இலட்சியத்தை விட்டுக் கொடுத்து விடவில்லை என்றாலும் கூட அவர்கள் கடைப்

(தொடர்ச்சி 21ஆம் பக்கம் பார்க்க)




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிளிண்டனின் வெற்றியால் அமெரிக்காவின் அரசியல் பொருளாதார இராணுவ நிலைமைகள் மாற்றம்பெறுமா?

- கார்த்திக்



நடந்து முடிந்த அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட்ட பல்வேறு வேட்பாளர்களில் குடியரசுக் கட்சியின் வேட்பாளரும் முன்னால் அதிபருமான ஜார்ஜ்புஷ் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பில் கிளிண்டன், கோடீஸ்வர சுயேட்சை வேட்பாளர் ரோஸ் பெரோ ஆகிய மூவருக்கும் இடையில் தான் உண்மையில் போட்டி நிலவியது.

இவர்களில் முன்னால் அதிபர் புஷ், ஈராக் மீதான யுத்தத்தில் அமெரிக்கா பெற்ற வெற்றியையும். ரஷ்ய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் ஆட்சிக் கால சாதனைகளாக முன் வைத்து, அமெரிக்கா தொடர்ந்து உலகின் தலைமைப் பாத்திரத்தை வகிக்க தன்னையே மீண்டும் அதிபராக தேர்வு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் பிரச்சாரம் செய்தார்.

சுயேட்சை வேட்பாளர் ரோஸ் பெரோவோ அமெரிக்காவின் பொருளாதார நெருக்கடிகளை சுட்டிக்காட்டி அதற்காக வரிகளை உயர்த்தி, சிக்கனத்தை கடைபிடித்து உற்பத்தியாளர்களுக்கு பெரும் சலுகைகளை வழங்கி அவர்களை ஊக்குவிப்பதன் மூலம் நெருக்கடியை தீர்க்கப் போவதாகவும் அதற்காக பட்ஜெட்டில் ஏற்படும் பற்றாக்குறையை சமாளிக்க மக்களை தியாகங்களை (கடும் வரிச்சுமைகளை) ஏற்கும்படி செய்யப் போவதாகவும் கூறி தனக்கு வாக்களிக்கக் கோரினார்.

ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் பில் கிளிண்டனோ முன்னால் அதிபர் புஷ்ஷின் மைய பிரச்சாரமாக இருந்த சர்வதேச பிரச்சனைகளுக்கு மாறாக அமெரிக்காவின் உள்நாட்டு அரசியல் பொருளாதார நெருக்கடிகளையும், தொழில் மந்தம், வேலையின்மை ஆகியவற்றை முதன்மைப்படுத்தி அவற்றைத் தீர்ப்பதற்கு தன்னுடைய அரசியல் பொருளாதாரக் கொள்கை மூலமாகவே முடியும் என்றும் அதற்காக தனக்கு வாக்களிக்கும்படியும் பிரச்சாரம் செய்தார்.

அமெரிக்காவில் நிலவும் கடுமையான அரசியல் பொருளாதார நெருக்கடி, தொழில் மந்தம், வேலையின்மை ஆகியவற்றின் ஆழத்தை மக்கள் உணர்ந்ததால் புஷ் தனது சர்வதேச சாதனை எனும் பெயரில் கிளப்பிவிட்ட அமெரிக்க தேசிய வெறிக்கு இரையாகாமல் நாட்டின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஏகாதிபத்திய வாதிகளில் மற்றொரு பிரிவினரான பில் கிளிண்டனை அதிபராக தேர்வு செய்துள்ளனர்.

### பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கிளிண்டனின் வழிமுறைகள்

ரீகன் முதல் புஷ் வரை பின்பற்றிய பொருளாதாரக் கொள்கையாகிய 1) சுதந்திர பொருளாதாரம் 2) சுதந்திர வணிகம் 3) உற்பத்தி மற்றும் முதலீட்டில் அரசு தலையிடாமை ஆகியவற்றிற்கு மாறாக கிளிண்டன் தனது கொள்கையாக 1) கலப்புப் பொருளாதாரம் 2) உற்பத்தி மற்றும் முதலீட்டில் அரசு பங்கேற்பது 3) உற்பத்தியாளர்களுக்கு சலுகைகள் வழங்குதல் 4) இதற்காக ஏற்படும் பற்றாக்குறை பட்ஜெட்டை சமாளிக்க இராணுவ செலவை குறைத்தல் பணக்காரர்களின் மீது வரியை அதிகரித்தல், 5) உள்நாட்டில் முதலீடு செய்யும்படி உற்பத்தியாளர்களை நிர்ப்பந்தித்தல் 6) இதன் மூலம் பெருமளவில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், இதன் மூலம் மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தி உள்நாட்டு சந்தையை விரிவுபடுத்துதல் 7) தொழில் துறையை நவீன மயமாக்கி ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பெருக்குதல் இதன் மூலம் தொழில் மந்தம், அரசியல் பொருளாதார நெருக்கடிகளை தீர்த்தல் ஆகியவற்றை தனது வழிமுறையாக அறிவித்துள்ளார்.

### கிளிண்டனின் அயலுறவுக் கொள்கைகள்

அயலுறவுக் கொள்கையை பொறுத்த வரை இதுவரை பின்பற்றப்பட்ட கொள்கையாகிய 1) பிறநாடுகளில் மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் 2) உலகின் சுற்றுச் சூழலை பாதுகாத்தல் எனும் பெயரில் ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்ளுதல். 3) பிற நாடுகள் பின்பற்றும் சந்தை கொள்கையை (இறக்குமதிக்கான தடையை, எதிர்த்தல் ஆகியவற்றிற்கு மாறாக எதையும் கிளிண்டன் முன் வைக்கவில்லை.

மாறாக இக்கொள்கைகளை நிபந்தனையாகக் கொண்டே பிற நாடுகளுக்கு உதவிக் கடன்கள் வழங்க வேண்டும் என்று கூறுவதுடன், மாணவர்களின் போராட்டத்தை ஏற்காத சீனாவுக்கு கடன் வழங்குவதில் இக் கொள்கைகள் கடைபிடிக்கப்படவில்லை என்று புஷ்ஷை கிளிண்டன் குறை கூறினார்.

### புஷ்ஷின் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கையின் தோல்வியும், முதலீட்டில் அரசுத்தலையீட்டின் தேவையும்

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் உலக வங்கி மூலம் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளில் நிர்ப்பந்தப்படுத்தி செயற்படுத்தும் சுதந்திரப் பொருளாதாரக் கொள்கை அமெரிக்க மக்களாலேயே தோற்கடிக்கப்பட்டு விட்டதைத்தான் புஷ்ஷின் தோல்வி வெளிப்படுத்துகிறது. ஏகாதிபத்யவாதிகளில் ஒரு பிரிவினரின் கொள்கை தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. மற்றொரு பிரிவினரான கிளிண்டன் இதற்கு மாற்றாக கலப்புப் பொருளாதாரத்தை முன் வைக்கின்றார்.

ஏகாதிபத்தியத்தின் நெருக்கடி தவிர்க்க முடியாமல் முதலீட்டில் அரசு தலையீட்டைக் கோருகிறது. ஏனெனில் சுதந்திர போட்டி என்ற வரலாற்றுக் கட்டம் முடிவடைந்தே ஏகபோகங்கள் தோன்றியது. இப்பொழுதைய போட்டி என்பது ஏகபோகங்களுக்கு இடையிலானதே தவிர, அனைத்து முதலாளித்துவ வாதிகளுக்கும் இடையிலானது அல்ல.

உற்பத்தி சாதனங்களின் வளர்ச்சியின் காரணமாக ஒருபுறம் உற்பத்தி சமூக மயமாகிவிட்டது. மறுபுறம், உற்பத்தி உடமைகள் சிறு கும்பலுடையதாகிவிட்டது. மேலும் மேலும் சிறுகும்பலிடம் அனைத்தும் குவிதலானது பிரச்சனையை தீர்க்க முடியாமல் போகிறது. எனவே ஏகபோக கும்பல்

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எனது நிலம்

சேரன்

சிறகு வலை விரித்த பரவைக் கடல்
மேலே, மூச் செறியும் காற்று.
கடல் நடுவில்,
கலையும் தலைமயிரை
விரல்களாலழுத்தி நிமிர்கையிலெல்லாம்
கரை தெரிகிறது
பனை மரமும், இடையிடையே ஓடுகளும்......

அலையும், 'எஞ்ஜின்' இரையும் பொழுது
சிதறும் துளியும்...
ஒன்றரை மணிநேரம் எப்படி முடிந்ததாம்?....

பிறகு,
மணல் நிமிர்ந்த வெளி
அதனுள் புதைந்தன பனைகள்,
ஒவ்வொன்றும் ஓராள் உயரமெனக்
கன்னி மணல் மீது தலை நீட்டும்.
மணலோ,
கண்ணாடி விதையிட்டுச்
சூரியன் போய்க் குடியிருந்த
பொன்னின் துகள்...
அதன் கீழ்
இரண்டாயிரம் ஆண்டுகள்
முன்பாக, என் முன்னோர்
நடந்த நிலப்பரப்பு.

ஒரு காலடி, ஆனால்
ஓராயிரம் ஆண்டு
எம்வேர் நீண்டுள்ளது
துயிலாது, இந்த அலைகரையில் நின்று
விண்மீன் சிதறிக் கடலுள் விழுகிறதைப்
பார்த்திரங்கிய,
அல்லது
தொடுவான் வெளி பிளந்து
கரையேறும் நாவாய்க்குக்
காத்திருந்த பெண்ணின்
வெறும் மார்பில் புரண்ட மணி ஒன்றில்,
பின் மாலை, அந்திப் பொழுது புடமிட்ட
தென்னோலை காற்றாடும் வெளியின்
மண்மூடிய சுவடுகளில்,
என் முன்னோர்
விட்டுப் போயுள்ளார்கள்
எனக்கொரு செய்தி.

நூறு நூறாயிரம் தோள்களின் மீது
ஏறி நின்று
எனது நிலம் என உரத்துச் சொல்கிறேன்
ஏழு சமுத்திர வெளிகளைத் தாண்டி
அதன்மேல் எழுகிற அலைகளை மீறி
அதனைக் கொண்டு போய்
எங்கும் ஒலிக்கிறது காற்று.....

'எனது நிலம்
எனது நிலம் -'

(1981)

நன்றி: இரண்டாவது சூரிய உதயம்

# உன் மண்ணும் என் மண்ணும்

சிவசேகரம்

என் மண் என்மண்ணென்று
எப்போதும் நீ சொல்வாய்
கோடேறி வழக்குரைப்பாய்
மண்ணுக்கும் நீருக்கும் வேலி
மதிற்சுவர் எழுப்பி
வராமல் நீ மறிப்பாய்

இப்போதோ
இது நம் மண் என்கின்றாய்
'எழுக' என ஆர்க்கின்றாய்

நன்று, ஒரு சிறு கேள்வி
நீ கூறுகும் 'நம்மண்' இது
ஆண்டோய்ந்த பரம்பரையார்
மீண்டொருக்கால் ஆளவர
வேண்டி நமை வேள்வியிலே
ஆடாகப் பலியிடவும்
அன்னியருக் கெல்லாமே
அடமானம் வைத்திருந்து
அவர் தயவில் ஆள்வதற்கு

ஆசையுறும் மண்ணாமோ?
இல்லையெனில்
விடுவிக்கப் படைகொணர்ந்த
'ராட்சகரின்' காலடியின்
விடுபடர்க்கு மறுபடியும்
வெகுங் டெழுந்த காம்போஜம்
ஆப்கானிஸ்தான் போலொன்றா?
எல் சல்வடோர் போன்றோ?
பறிபோன பலஸ்தீன மண் போன்றோ?

மாறாக
சியோனிசத்தின் இஸ்ரேலோ
ஆபிரிக்கத் தென்முனையில்
வெள்ளை நிறவெறி உரிமை
கொண்டாடும் மண்போன்றோ?
அடியடியாய் முடியாண்டார்
நீண்ட நெடு வரலாற்றில்
குடுமிப் பிடிச் சண்டைகளில்
குருதியினால் சேறான
செம்மண்ணோ, எம்மண்ணோ?

நீ கூறும் மண் அதனை
உழுபவனின் மண் ணென்றால்
அவனுக்கே சேரட்டும்
முன்னாலே நிற்கின்ற
ஆண்டைகளின் பங்கென்ன?

காம்போஜம்: கம்போடியா

நன்றி: நதிக்கரை மூங்கில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எனது நிலம்'93

குந்தவி

பார்வைக்கும் எட்டாது
நீல ஒளி தெறிக்க
நீண்டிருக்கும் சமுத்திரங்கள்
எங்கோ ஒரு தொலைவில்

எதையோ குறிவைத்து
எந்திரங்கள் நிமிர்ந்து நிற்கும்
கொள்கலன்கள் கவிழும்
குவலயமே அதிரும்.

இந்தப் பெருமிதங்கள் உண்டா
எங்கள் பரவைக் கடலுக்கு?
நீள் விசும்பில் இப்போது
நிலவா நீந்துகிறது?
எமன் உலவித் தீயுமிழும்
வாசலிலே வாழ்வொழியும் நமது கதை
யாரறிவார்?

உயிர் பிடுங்கும் நம்தேசத்தில்
உன் தாடி மயிர் பிடுங்கி
என் சொன்னாய் TVயில்?
என்ன பெரிய அறிவென்ற நினைப்போ?
எங்கு பெற்றாய்?

வளம்படைத்த நாடுகள்
பணம் படைத்த மனிதர்கள்
சுகங் கொடுக்க வந்தார்
நிலம் எதற்கு இனிமேல்?

ஒரு தடம் புரண்டாய்!

இரண்டாயிரம் ஆண்டுகள்
பின்னாலே சென்றாய்
உனது பரம்பரை போர் புரிகையில்
எலும்புக் கூடாய் ஊர்வலம் போனாய்

வாழ்வுக்குப் பட்டம்
வயிற்றுக்குச் சோறு
விடுதலைக்குச் சேறு
தித்திக்கும் தத்துவங்கள் தெவிட்டத் தெவிட்ட
திரைகடலோடி நீ தேடிய
திரவியங்கள்!

ஆம்,
உனது வேர் நீண்டுள்ளது
வடலி வளரும் நம் தேசத்திலிருந்து
வத்திக்கான் வரையும்
உனதுவேர் நீண்டுள்ளது.

சுண்ணாம்புச் சுவர் நொருங்கும்
சுவையான உணவுண்ணும்
சுகம் நொருங்கும்
முன்னாளில் கண்டவுயிர்
இந்நாளில் பிணமாகும்
இடுப்பு வலியெடுத்த
ஒரு தாயின் சிசு சாகும்
தடுக்கத் தவறி விடின்
சரித்திரமே தலைமாறும்

புலையர்கள் தேசம் ஆள
பிணங்களாய் மக்கள் வீழ
தேசமே சுடலையாக
தேம்பியழுங் குழந்தை
திடங் கொண்டு சேதி சொல்லும்

'வீர சுதந்திரம்!
வீர சுதந்திரம்!!'

(1993)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

தனது நலனுக்கு ஏற்றபடி தனது கட்டுப்பாட்டின் கீழான அரசின் மூலமாக அரசு முதலாளித்துவ முறையைக் கொண்டுவருகிறது. மேலும் உலக சந்தைக்கான போட்டியில் தனது போட்டியாளர்களை வீழ்த்துவதற்கான ஒவ்வொரு ஏகாதிபத்ய வாதிகளும் தத்தமது நாடுகளில் சிறப்பு வரி சலுகைகள், மானியங்கள், பொருள் காப்பீட்டுத் தொகை ஆகியவை பெறவும் ஏகாதிபத்யக் கட்டத்தில் அரசுத் தலையீடு பயன்படுத்தப்படுகிறது. மறுபுறம் மூன்றாம் உலக நாடுகளில் உற்பத்தியாளர்களை முற்றாக வீழ்த்துவதற்காக அரசுத்தலையீடாக் கொள்கைகளையும், தனது சந்தையை விரிவுபடுத்த சதந்திர போட்டியையும் உலக வங்கி மூலம் வலியுறுத்துகின்றன.

மேலும் உலக சந்தையில் அமெரிக்காவின் ஆதிக்கம் நிலவிய காலத்தில் சுதந்திர போட்டி மற்றும் ஏற்றுமதியை நோக்கமாகக் கொண்ட சந்தைப் பொருளாதாரம் பற்றி அமெரிக்காவால் பிறநாடுகளுக்கு போதிக்க முடிந்தது.

இப்பொழுது நிலவும் உலகப் பொது நெருக்கடி மற்றும் சந்தைக்கான போட்டிச் சூழலில் சந்தைப் பொருளாதாரம் மற்றும் சுதந்திரப் போட்டி பற்றி பேச முடியவில்லை. மாறாக உள்நாட்டில் சமூக நலத்திட்டம் வேலை வாய்ப்பு ஆகியவற்றின் மூலம் உள்நாட்டில் செயற்கையான சந்தையை உருவாக்க அரசுத் தலையீடு தேவைப்படுகிறது.

எனவே அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் மற்றொரு பிரிவைச் சேர்ந்த கிளிண்டன் கலப்புப் பொருளாதாரத்தை தனது கொள்கையாக முன் வைத்துள்ளார்.


**கிளிண்டனின் கொள்கைகள் அமெரிக்காவின் நெருக்கடியைத் தீர்க்குமா?**

அரசு பங்கேற்கும் பொருளாதாரக் கொள்கையின் மூலம் வேலை வாய்ப்புகளை உருவாக்கி, உள்நாட்டு மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்துவதும் அதன்மூலம் உற்பத்தியைப் பெருக்கி தொழில் மந்தத்தையும், பொருளாதார நெருக்கடிகளையும் தீர்க்கப் போவதாக கிளிண்டன் அறிவித்துள்ள பொருளாதாரக் கொள்கையால் அமெரிக்காவின் நெருக்கடிகள் தீரப் போவதில்லை. ஏனெனில் அமெரிக்கப் பொருளாதாரம் ஏகாதிபத்திய பொருளாதாரமாகும். அதாவது மூலதன ஏற்றுமதி, சரக்கு ஏற்றுமதி மேலாதிக்கம் ஆகியவை சார்ந்ததாகும். அதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியே அமெரிக்காவில் உள்நாட்டு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. எனவே கிளிண்டன் திட்டமிடுவதைப் போல அமெரிக்காவுக்குள் இந்த நெருக்கடியைத் தீர்த்துவிட முடியாது.

முதலாவதாக அமெரிக்கா ரஷ்ய சமூக ஏகாதிபத்தியத்துடன் நடத்திய உலக மேலாதிக்கத்துக்கான பனிப் போரின் கால கட்டத்தில் தனது தொழில்துறையை முற்றிலும் இராணுவ மயமாக்கப்பட்ட தொழில் துறையாக மாற்றியமைத்துவிட்டது பனிப்போரின் காலத்தில் இலாபகரமானதாக இருந்த இராணுவத் தளவாடத் தொழிற்சாலைகள் இப்பொழுது ரஷ்ய முகாமின் வீழ்ச்சிக்குப்பின் உற்பத்தித் தேக்கத்திற்கு உள்ளாகி அமெரிக்காவில் பெரும் தொழில் மந்தத்தை உருவாக்கியுள்ளது. அமெரிக்கா நடத்திய ஈராக் மீதான வளைகுடா யுத்தம் தற்காலிகத் தீர்வையே தந்தது. இந்நெருக்கடியிலிருந்து முற்றிலும் மீள்வதென்பது முடியாது.

தொழில் உற்பத்தியை பொறுத்தவரை அமெரிக்கா தனது போட்டியாளர்களான ஜப்பான் மற்றும் ஜெர்மனைவிட தொழில் நுணுக்கத்தில் பின்தங்கியுள்ளது. அமெரிக்கா தனது தொழிநுட்ப திறனை இராணுவத் தளவாடத்திற்கானதாக (நட்சத்திர போருக்கானதாக) முற்றிலும் மாற்றியமைத்ததே இதற்குக் காரணம். தொழில் நுட்ப விஷயத்தில் தனது போட்டியாளர்களின் அளவிற்கு அமெரிக்கா வளரவேண்டியுள்ளதால் உலக சந்தையில் அமெரிக்கப் பொருட்கள் பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கிறது. இதற்காக அமெரிக்கத் தொழில் துறையை நவீன மயமாக்கும் திட்டத்தை செயல்படுத்தப் போவதாக கிளிண்டன் அறிவித்துள்ளார். தொழில்துறை நவீன மயமாக்கல் தவிர்க்க முடியாமல் ஆட்குறைப்பை உருவாக்கி மேலும் வேலையின்மையை பெருக்குமேயன்றி வேலையின்மை பிரச்சனையை தீர்க்க உதவாது

> ## சிறிமா வாழ்த்து
>
> அமெரிக்காவின் புதிய ஜனாதிபதியாக கிளின்டன் தெரிவு செய்யப்பட்டிருப்பது குறித்து அவருக்கு எதிர்க்கட்சி தலைவி திருமதி சிறிமா பண்டாரநாயகா வாழ்த்துச் செய்தி அனுப்பி வைத்திருக்கிறார்.
>
> "அமெரிக்க ஜனாதிபதியாக நீங்கள் தெரிவாகியிருப்பது குறித்து உங்களுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் பாராட்டுக்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜனநாயகத்தின் மீதும், மனித உரிமைகள் மீதும் பற்றுறுதி கொண்ட உங்களது நிர்வாகத் திடமிருந்து மூன்றாம் உலக மக்கள் ஒளிமயமான ஒரு ஒத்துழைப்பு யுகத்தை எதிர்பார்க்க முடியும் என நாம் நம்புகின்றோம்".
>
> (வீரகேசரி 7.11.1992)



மேலும் அயல்நாட்டு வணிகத்தை பொறுத்த வரை அமெரிக்காவுக்கு சாதகமானதாக இருக்கப் போவதில்லை.

ஏனெனில் அயல்நாட்டு வணிகத்தை பொறுத்தவரை முதலாளிய உலகத்தின் மொத்த அயல் வணிகத்தில் ஏறத்தாழ 70% வளர்ச்சியடைந்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில்தான் நடைபெறுகிறது. வளர்ச்சிகுன்றிய மூன்றாம் உலக நாடுகளோ நவீன உற்பத்தி பொருட்களில் 30% மட்டுமே உட்கொள்ளும் அளவிற்கு திறன் குறைந்ததாக இருக்கினறன. முதலாளித்துவ உலகமே ஒரு பொது நெருக்கடியில் சிக்கித் தவிப்பதால் இந்நாடுகள் அனைத்தும் தத்தமது சந்தையைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கத்துடன் சந்தை பாதுகாப்புக் கொள்கையை அதாவது பிறநாட்டுப் பொருள்களின் இறக்குமதியை கட்டுப்படுத்தும் கொள்கையைக் கடைபிடிக்கின்றன. எனவே அயல் வணிகம் கிளிண்டன் திட்டமிடும் அளவிற்கு இருக்காது.

வேலையின்மையைத் தீர்க்க ஆண்டுதோறும் 5000 கோடி டாலர்களை அமெரிக்க அரசாங்கம் கட்டுமானத் துறைகளில் முதலீடு செய்து பல லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கும் துண்டு பட்ஜெட்டை சமாளிக்க இராணுவ செலவினங்கள் மற்றும் யுத்தத் தயாரிப்புக்கான செலவினங்களை கணிசமாக குறைக்கப் போவதாகவும் கிளிண்டன் அறிவித்துள்ளார். இராணுவ செலவுகளை ஓரளவிற்கு மேல் குறைக்க கிளிண்டனால் முடியாது. ஏனெனில் அமெரிக்கா பொருளாதார ஆதிக்கத்தில் பின்னடைவை சந்தித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், இராணுவ மேலாண்மையையும் இழந்துவிட அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் ஒருபோதும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.


மேலும் வேலைவாய்ப்பை பெருக்கும் நோக்கில்

உள்நாட்டில் முதலீடு செய்யும்படி தொழிலதிபர்களை நிர்ப்பந்திக்கப் போவதாக கிளிண்டன் அறிவித்துள்ளதும் சாத்திய மற்றதே. அமெரிக்காவில் லாபகரமான தொழில் முதலீட்டுக்கான வாய்ப்பு வரம்புகள் ஏற்கனவே முற்றுப்பெற்று விட்டது. இனி புதிய முதலீடுகள் அமெரிக்காவின் சமூக நலனுக்கானதாக இருக்குமேயன்றி மூலதனத்தின் நலனுக்கு உதவாது. எனவே கிளிண்டன் தரப்போவதாகக் கூறிக் கொள்ளும் நிர்ப்பந்தத்தை ஏற்றுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு உள்நாட்டில் எவரும் முதலீடு செய்யப்போவதில்லை. மாறாக லாபத்தைத் தேடி வாய்ப்புள்ள நாடுகளில் தான் முதலீடு செய்வார்கள். மெக்சிகோ போன்ற நாடுகளில் மனித உழைப்பின் விலையானது ஒப்பீட்டளவில் அமெரிக்காவில் இருப்பதைவிட மூன்று அல்லது நான்கு மடங்குகள் குறைவாக உள்ளது. எனவே அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் மெக்சிகோ போன்ற மூன்றாம் உலக நாடுகளில் தங்களின் முதலீட்டை அதிகரித்துள்ளனர்.

அமெரிக்க மக்களின் கடும் உழைப்பாலும் ரத்தத்தாலும் உருவாக்கப்பட்ட மூலதனம் இன்று அமெரிக்க சமூகத்தின் நெருக்கடியை தீர்க்க உதவப் போவதில்லை ஏனெனில் ஏகாதிபத்தியவாதிகளின் நோக்கம் அதீத லாபமேயன்றி தேசிய நலன்கள் அல்ல. தோழர் லெனினது வார்த்தையில் சொல்வதெனில் தேசிய நலனுக்காக ஏகாதிபத்திய வாதிகள் முதலீடு செய்யமாட்டார்கள். அப்படி செய்தால் அவர்கள் ஏகாதிபத்திய வாதிகளாக இருக்க முடியாது. எனவே புதிய வேலை வாய்ப்புகளை கிளிண்டனால் உருவாக்க முடியாது. தேர்தல் அறிக்கையில் கூறியபடி அமெரிக்காவில் வேலையின்மையையும், வறுமையையும் ஒழிக்கவும் முடியாது.

எனவே கிளிண்டனின் கலப்புப் பொருளாதாரமும் தோல்வியையே தழுவும்.

**அமெரிக்காவின் அரசியல் இராணுவ யுத்தத் தந்திரம் இனி எத்தகையதாக இருக்கும்?**

அமெரிக்காவின் அரசியல் இராணுவ யுத்தத்தந்திரத்தை பொறுத்தவரை புஷ்ஷின் ஆட்சிக் காலத்தில் பின்பற்றிய "புதிய உலக ஒழுங்கமைப்பு" (அதாவது அமெரிக்காவின் தலைமையை ஏற்கும்படி உலகை ஒழுங்கமைத்தல்) என்ற நிலையிலிருந்து கிளிண்டன் மாறுபடப்போவதில்லை. ஏனெனில் கிளிண்டனே குறிப்பிட்டபடி சர்வதேச விஷயத்தில் அமெரிக்காவின் (அமெரிக்க ஏகாதிபத்தியத்தின்) நலன்களை பாதுகாப்பதில் புஷ்ஷுக்கும் கிளிண்டனுக்கும் வேறுபாடு இருக்காது. ரஷ்யாவுடன் கெடுபிடிப்போர் இருந்த காலத்தில் ஐரோப்பாவில் ரஷ்யாவை சுற்றி வளைத்து அடக்குவது பிற நாடுகளில் ரஷ்ய ராணுவத் தலையீடுகளுக்கு போட்டியாக செயல்படுதல் என்ற நிலையிலிருந்து தனது ராணுவ நிலைகளை மாற்றி உலகளவில் தோன்றும் கலகப்பகுதிகளில் அதாவது ஏகாதிபத்திய எதிர்ப்புக் கிளர்ச்சி நடக்கும் நாடுகளில் அவற்றைக் குவிப்பது என்பதே அமெரிக்காவின் தற்போதைய ராணுவ யுத்த தந்திரமாகும். இன்றைய உடனடி சூழலில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான அணிசேர்க்கை திடப்படாததால் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான முரண்பாட்டிற்காக அல்லாமல் காலனிய நாடுகளை நிலை நிறுத்திக்கொள்வதற்காக தனது ராணுவத்தை பயன்படுத்துவதையே அமெரிக்கா தனது ராணுவ யுத்த தந்திரமாக வகுத்துக்கொண்டுள்ளது. இதற்காக "ஒரு துருவம்" (அதாவது அமெரிக்கத் தலைமையிலான ஒரே ஏகாதிபத்திய அணியின் கீழ் அடக்கப்பட்ட உலகம்) மற்றும் கலகப் பகுதிகளை ஒடுக்குதல் என்பதை முன்வைத்து, பிற ஏகாதிபத்தியங்களையும் ஏற்கும்படி வலியுறுத்துகிறது.

ரஷ்ய முகாமின் வீழ்ச்சிக்குப்பிறகு தனது தலைமையின் கீழான நேட்டோ நாடுகளுடன் உலகநாடுகள் அனைத்தையும் ஒழுங்கமைத்துக்கொள்ளும் "ஒருதுருவ" முயற்சியில் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் வெற்றிபெறப் போவதில்லை.

ரஷ்ய முகாமின் வீழ்ச்சிக்குப்பின் உலகளவில் எதிரெதிர் அரசியல் கூட்டணிகள் திடப்படாத நிலை தொடருகிறது. முன்னால் எதிரிகளில் (ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள்) சில அமெரிக்காவுக்கு நட்பு நாடுகளாகவும் முன்னால் நட்பு நாடுகளில் சில (ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ் போன்றவை) முரண்பாடு கொண்டவைகளாகவும் மாறிவருகின்றன. ஈராக் மீதான யுத்தம் போன்ற காலனிகளை தக்க வைத்துக் கொள்ளும் விஷயத்தில் தற்காலிக அரசியல் ராணுவக் கூட்டுக்களை அமெரிக்காவால் உருவாக்க முடிந்தது. எனினும் யுத்த தந்திர ரீதியிலான நீண்ட கால கூட்டணியை அமெரிக்காவால் உருவாக்க முடியவில்லை. உலகளவில் இராணுவக் கூட்டுக்களில் திடமின்மையும், ஆயுத பயன்பாட்டு விவகாரங்களில் திடமின்மையும் நிலவுகிறது.

இந்நிலையில் தனது புதிய நண்பர்களான ரஷ்ய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடன் புதிய அரசியல் கூட்டணியை உருவாக்குவதன் மூலம் அரசியல் மற்றும் ராணுவக் கூட்டுகளில் திடப்படுத்தலை உருவாக்கி தனது யுத்த தந்திரத்தை (ஒரு துருவத்தை) நிறைவேற்ற அமெரிக்கா முயற்சிக்கிறது. அதற்காக ஆயுத விஷயத்தில் ஆயுதக் குறைப்பையும், அணு ஆயுதக் கட்டுப்பாட்டையும் பிற நாடுகளுக்கு போதித்துக்கொண்டே ராணுவத்துறையில் தனது ஏகபோகத்தைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சிக்கிறது. இதன் மூலம் பழைய முறையில் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மீது தனது தலைமையை

## அமெ.ஜனாதிபதியாக தெரிவான கிளின்டனுக்கு ஜனாதிபதி வாழ்த்து

அமெரிக்க ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் பில் கிளிண்டனுக்கு ஜனாதிபதி ஆர்.பிரேமதாச வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் பெற்ற அமோக வெற்றியைப் பற்றி நான் அறிந்து கொண்டேன்.

ஐக்கிய அமெரிக்க அரசுகளுடன் இலங்கை பேணி வருகின்ற இருதரப்பு உறவுகளை வளர்த்துக் கொள்வதற்கும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் நாங்கள் அதிமுக்கியத்துவம் அளித்து வந்துள்ளோம்.

ஐக்கிய அமெரிக்காவின் பெருநன்மையயக்கும் பொருளாதார மற்றும் ஏனைய உதவிகளை நாங்கள் தொடர்ந்தும் பெற்று வந்துள்ளோம்.

இலங்கை ஜனநாயகப் பாரம்பரியங்களை இடையறாது பேணிவருகின்ற நாடு என்பது உங்களுக்குத் தெரியும். அண்மைக்காலத்தில் எமது மக்கள் அனைவரினதும் உழைப்புச் சக்தியினைத் திரட்டும் பொருட்டு எமது பொருளாதாரத்தைத் தாராளமயப்படுத்தி உள்ளோம். இந்தத் தாராளமயப்படுத்துகையின் காரணமாக பெரிய முதலீட்டாளர்களுக்கும் சிறிய உற்பத்தியாளர்களுக்குமிடையிலான சிறந்ததோர் உற்பத்திப் பங்காண்மை ஒன்று உருவாகியிருக்கிறது.

எனவே, உங்கள் தேர்தல் பிரசார இயக்கத்தின் போது அமெரிக்க மக்களை வளமான வாழ்வினை நோக்கி எடுத்துச் செல்லும் இதமான பொருளாதார சூழலை அமெரிக்க நாட்டில் ஏற்படுத்துவதற்கு நீங்கள் அளித்த வாக்குறுதியை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம்.

ஐக்கிய அமெரிக்க அரசுகளின் ஜனாதிபதிப் பதவியை நீங்கள் வகிக்கும் காலத்தில் உங்கள் நாட்டுடன் எமது இருபக்க உறவுகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு உறுதியான நம்பிக்கையுடன் நான் எதிர்பார்க்கிறேன்.

(வீரகேசரி 7.11.1992)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உறுதிப்படுத்திக் கொள்ள முயற்சிக் கிறது.

ஆனால் இதை ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் குறிப்பாக ஜெர்மன் பிரான்ஸ் ஆகியவை ஏற்றுக் கொள்ளாமல் ஐரோப்பாவின் சந்தைக் காப்பு மற்றும் ஐரோப்பாவின் சுயேட்சையான பாதுகாப்பு குறித்து வலியுறுத்துகின்றன. அமெரிக்கத் தலைமையை ஏற்றுக்கொள்வதற்குப்பதிலாக கூட்டுத் தலைமையிலான உலக ஒழுங்கமைப்பை இவை முன் வைக்கின்றன. எனவே அமெரிக்கத் தலைமையிலான புதிய உலகம் என்பது சாத்தியப்படப் போவதில்லை. மாறாக ஏகாதிபத்திய நாடுகளுக்கிடையிலான முரண்பாடுகள் கிளிண்டனின் ஆட்சியில் கூர்மையடையும்.


அமெரிக்கத் தலைமையை ஏற்பதில் ஏகாதிபத்திய வாதிகளுக்குள் முரண்பாடுகள் இருந்தாலும் காலனிய நாடுகளை நிலை நிறுத்தும் விஷயத்தில் ஒன்றுபட்டே இருக்கின்றனர். எனவே கிளிண்டனின் ஆட்சி நவகாலனிய நாடுகளை நிலைநிறுத்துவதற்காக மிகவும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் கொண்டதாய்தான் இருக்கும்.

**மூன்றாம் உலக நாடுகளுடனான அமெரிக்காவின் உறவு நிலையில் கிளிண்டனால் மாற்றம் நிகழுமா?**

அமெரிக்கா இதுவரை பின்பற்றிய அயலுறவுக் கொள்கையாகிய 1. பிற நாடுகளில் மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமையை பாதுகாத்தல். 2. சுற்றுச் சூழலை பாதுகாத்தல் - என்னும் பெயரில் மூன்றாம் உலக நாடுகளில் தலையீடு செய்தல். 3. பிற நாடுகள் கடைபிடிக்கும் சந்தைக்காப்புக் கொள்கையை எதிர்த்தல் மற்றும் சுதந்திர சந்தையை வலியுறுத்தல்.

ஆகியவற்றிடையே தொடர்ந்து பின்பற்றப்போவதாக கிளிண்டன் அறிவித்துள்ளார்.

பிறநாடுகளில் மனித உரிமை மற்றும் ஜனநாயக உரிமையை பாதுகாத்தல் என்பது மூன்றாம் உலக நாடுகளில் அமெரிக்கா தலையீடு செய்வதை நோக்கமாக கொண்டது ஆகும். ஈராக் மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு குவைத் மற்றும் குர்து இனமக்களின் ஜனநாயகப் பாதுகாப்பு பற்றி பேசியதையும் இந்தியா போன்ற மூன்றாம் உலக நாடுகளுக்கு கடன் வழங்கும் நிபந்தனையாக ஒருபுறம் சுற்றச் சூழல் பாதுகாப்பை வலியுறுத்துவதையும் மறுபுறம் இந்நாடுகளில் தான் விரும்பும் இடத்தில் விரும்பியபடி தொழில் தொடங்குவதற்கு தடையாய் இருந்த லைசென்ஸ் கட்டுப்பாட்டு முறையை ரத்து செய்ய உலக வங்கி மூலம் ஏற்கச் செய்து உலகின் சுற்றுச்சூழலை சீரழிப்பதனையும் கவனிக்க வேண்டும்.



**அமெரிக்காவின் ஆக்கிரமிப்புக்கான இரட்டை வழிமுறைகள்**

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அயலுறவுக் கொள்கையானது மூன்றாம் உலக நாடுகளில் ஆக்கிரமிப்புத் தன்மை கொண்ட தலையீடுகள் செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் இரட்டை வழிமுறைகளை பின்பற்றுகின்றனர்.

முதலாவதானது மூன்றாம் உலக நாடுகளில் தனது அரசியல் இராணுவ நோக்கங்களுக்கு ஏற்றவகையில் மக்கள் மத்தியில் கருத்தியல் தளம் அமைத்து இணக்கமான ஒத்துழைப்பைக் கொடுப்பதற்காக, பேராசிரியர்கள், மக்கள் தொடர்புப் பணியாளர்கள் 'மூளை வங்கிகள்' (சுப்பிரமணியம்சாமி போன்றோர்) போன்றவர்களைக் கொண்ட தனது "அரசியல் விபச்சாரிகளைக்" கொண்டு, வலைப்பின்னல் போன்ற அமைப்புகளை உருவாக்குவது ஆகும்.

இவ்வாறு உருவாக்கப்பட்ட தனது அரசியல் விபச்சாரிகளை கொண்ட அமைப்புகள் மூலம் தனது கருத்துக்களை பிரச்சாரம் செய்ய பத்திரிகைகள் நடத்துதல், மாநாடுகள், கருத்தரங்குகள் நடத்துதல் என இன்ன பிற வெகுஜன பிரச்சார வடிவங்களை மேற்கொள்கிறது. இந்த அரசியல் விபச்சாரிகள் காலனிய அரைக்காலனிய நாடுகளில் இயல்பாகவே நிலவுகின்ற ஜனநாயக மற்ற தன்மைக்கு எதிராக ஜனநாயகப் பிரச்சனையை எழுப்புவதாக நடிக்கின்றனர். ஜனநாயகம் பற்றி இவர்கள் கூறும் வரையறையாவது வெறும் அரசாங்கக் கட்டுமானத்தை ஜனநாயகபடுத்துதல் (அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற ஆட்சிமுறை போன்றவை) என்ற வர்க்க சார்பற்ற ஜனநாயகமே.

இதற்கு அப்பால் சமுகப் பொருளாதாரக் கட்டுமானத்தை ஜனநாயகப் படுத்துவதற்காகப் போராடுகின்ற உண்மையான ஜனநாயக வாதிகளையும், புரட்சியாளர்களையும் எதிர்ப்பதும் அவர்களின் இயக்கங்களை பல்வேறு விதங்களில் சீர்குலைப்பதுமே இத்தகைய அரசியல் விபச்சாரிகளின் முக்கிய பணியாகும். இவர்களை நிர்வகிக்கவும், நிதிஉதவி செய்யவும் அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் அரசியல் கட்சிகளாகிய குடியரசுக்கட்சி, ஜனநாயகக் கட்சி ஆகியவையும் அமெரிக்க வர்த்தக சபையும், தொழிற்சங்கங்களும், பல நிறுவனங்களை உருவாக்கி செயற்படுத்தி வருகின்றன.

ஆக்கிரமிப்புக்கான இரண்டாவது வழியானது மூன்றாம் உலக நாடுகளில், ரகசிய ராணுவ நடவடிக்கைகள் மூலம் தனக்கு எதிரான ஆட்சியாளர்களை ஒழித்துக்கட்டி பொம்மை ஆட்சியை நிறுவுவது, நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்குவது ஆகியவை முதல் நேரடியான பகிரங்க ஆக்கிரமிப்பு யுத்தத்தை நடத்துவது வரையானது ஆகும்.


இத்தகைய இராணுவ நடவடிக்கைகளுக்காக பத்து லட்சத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள் அயல் நாடுகளில் பணியாற்றி வருகின்றனர். அமெரிக்காவானது தனது ராணுவத்தை ஐம்பது நாடுகளில் நிறுத்தியோ அல்லது நிறுத்துவதற்கான ஒப்பந்த உரிமை பெற்றதாகவோ இருக்கிறது. இந்த இரண்டாம் வழியை அமெரிக்க ஏகாதிபத்தியம் செயற்படுத்துதல் என்பதானது தனது 'அரசியல் விபச்சாரிகள் மூலம்' முதலாம் வழியை செயற்படுத்துவதில் கிடைக்கும் வெற்றியைப் பொறுத்து அமைகிறது.

மேற்கூறிய அமெரிக்காவின் தலையீட்டுக் கொள்கையில் புஷ்ஷின் அணுகுமுறையைவிட கிளிண்டனின் அணுகுமுறை தீவிரமானதாகவும், அக்கிரமிப்புத் தன்மை வாய்ந்ததாகவும் இருக்குமேயன்றி, சதாம் உசேன் சந்தோசப்படுவதைப் போல் மென்மையானதாக இருக்கப் போவதில்லை.

**அமெரிக்க இந்திய உறவுகள் இனி மேம்பாடடையுமா?**

இந்தியாவுடனான அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உறவுகள் மேலே குறிப்பிட்ட படி பிற மூன்றாம் உலக நாடுகளுடனான உறவைப் போன்றதாகவே அடிப்படையில் இருக்கும். அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகள் இந்தியாவின் மூலப் பொருட்கள்,

(29ஆம் பக்கம் பார்க்க)






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்து கவிஞர் அறிமுகம்

## வ.ஐ.ச.ஜெயபாலன்



சமகால ஈழத்தமிழ்க் கவிஞர்களுள் அதிகம் எழுதுபவர்களுள் ஜெயபாலன் ஒருவர். மூன்று கவிதைத் தொகுதிகளும் ஒரு சுயசரிதைப் பாங்கான நெடுங்கவிதை நூலும் இதுவரை வந்துள்ளன. நெடுந்தீவில் 1946ல் பிறந்த ஜெயபாலன் யாழ் பல்கலைக்கழகப் பட்டதாரியும் சமூகவியல் ஆய்வாளருமாவர். அவரது கவிதை வீச்சு மிகவும் அகலமானது. படிமங்களும் ஓசை நயமும் அவரது கவிதையின் முத்திரைகள் எனலாம். இளம் கவிஞர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்திய கவிதைகளுள் ஜெயபாலனுடையவை முக்கியமானவை. ஆயினும் ஜெயபாலனுடைய கவிதையின் சிறப்பம்சங்களை அனேகர் கிரகித்துக் கொண்டதாகத் தெரியவில்லை. இங்கு தரப்பட்டுள்ள அவருடைய கவிதைகளின் தெரிவு முயற்சி சிரமமான காரியமாக இருந்தது. நீளங்கருதிச் சில கவிதைகளை ஒதுக்கினோம். அடிக்கடி மறுபிரசுரமான இலையுதிர்கால நினைவுகள், நம்பிக்கை போன்ற கவிதைகளையும் ஒதுக்கினோம். அவரது கவிதை எழுத்துக்குரிய 25 வருடங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் வெவ்வேறு காலங்கட்குரியனவாக ஐந்து கவிதைகளைத் தெரிவுசெய்துள்ளோம். அவரது நூல்களின் முன்னுரைகளை அவரே எழுதியுள்ளார். அவரது கவிதைகள் பற்றிய கனதியான மதிப்பீடு எதுவும் கைவசமில்லாததால் அவர் கவிதை பற்றிச் சொல்லும் சில வரிகளுடன் அவரது ஐந்து கவிதைகளை உங்கள் முன் வைக்கிறோம்.

*****

"தமிழ் மொழியிலிருந்து தமிழ்க் கவிதையின் ஆளுமை குறைந்துவிட்டதைக்கண்கூடாகப் பார்க்கிறேன். உரைநடை முதன்மையாவதை உணர்கிறேன்" என்று விவாதித்த பாலகுமாரன் "என் தலைமுறையில் சரியான கவிஞன் இல்லாததும் காரணம்" என்று குறிப்பிட்டார்.

ஈழத்தில் முகிழ்த்துவரும் தேசியக் கலை இலக்கிய வடிவங்களுள் ஈழத்துக் கவிதைகளின் முன்னோடிப் பாத்திரம் பற்றி அவருக்கு எடுத்துச் சொன்னேன். நமது வாழ்வோடு கவிதைகள் ஒட்டி உறவாடுகின்றன. சொல், உருவம், உள்ளடக்கம் என்பவை தொடர்பாக ஒரு ஆரோக்கியமான குழந்தையைப் போலவே நமது மடிகளில் கவிதை வளர்கிறது. இருந்தபோதும் கவிதையின் நெருக்கடி பற்றிப் பலர் அடிக்கடி குறிப்பிடுகிறபொழுது, காட்டுக் கொடிகளைப் போலக் கவலை என்னைப் பற்றிப் படர்கிறது.

கவிதையின் நெருக்கடி பற்றிப் பேசுகின்ற பலரும் தமிழகக்கவிதைகள், ஈழத்துக் கவிதைகள் எனப் பகுத்தே பார்க்கிறார்கள். குறைந்தபட்சம் இந்த நெருக்கடிக்கு ஈழத்துக் கவிதைககள் தாக்குப் பிடிக்கிறதாகவே அவர்களுள் பலர் கருதுகின்றார்கள். இதைவிட ஈழத்துக் கவிதைகளின் வாழ்வு அம்சத்தையும், அந்நியப்படாத தன்மையையும், நேர்மையையும், தெளிவையும் பற்றி இளம் விமர்சகர் நாகார்ஜுனனிலிருந்து கவிஞர்-இன்குலாப் வரை பலர் பேசக் கேட்டிருக்கிறேன். குங்குமம் இதழில் எழுத்தாளர் சுஜாதாவும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார்.

இதன் அர்த்தம் ஈழத்துக் கவிதைகள் யாவையுமே தரமானவையோ கவித்துவமுள்ளவையோ என்பது அல்ல. கோவையில் கவிஞர் புவியரசுவைச் சந்தித்துப் பேசியபொழுது மேற்கண்ட விடயங்களை ஒப்புக்கொண்ட அவர் பெரும்பாலான ஈழத்துக் கவிதைகள் நீர்த்துப் போயிருக்கிறதாகக் குறிப்பிட்டார். கவிதையை யாவருக்கும் புரிகிற கலையாக்குகிற அவசியமான முயற்சியில் ஈடுபடுகிறபோது, சிலசமயம் கவித்துவத்தைக் கோட்டைவிட்டு விடுவது அல்லது நீர்த்துப்போவது நேர்ந்து விடுகிறது. கவிதை தனக்கு இயல்பான "பண்"ணை இழந்திருக்கிறபோது இத்துன்பம் அதிகரித்து விடுகிறது.

தமிழ்க் கவிதையின் சமகால நெருக்கடி, தமிழ்க்கலை இலக்கியங்களின் சமகால நெருக்கடியின் ஓர் அம்சம் மட்டுமே. உரைநடை இயல்பாகவே சமகால வாழ்வின் தொனியைப் பெற்றிருக்கிறதில், மண் மணக்கிறதில், மரபுகளின் ஆளுமையில் வேரூன்றி நிற்கிறதில் நல்ல உரைநடை இலக்கியங்களைப் பொறுத்து இந்த நெருக்கடி தெரியாமல் போய்விடுகிறது. கலைஞனின் அந்நியப்பட்ட தன்மை, சமூகப் பொறுப்பின்மை, உலகையும் வாழ்வையும் பற்றிய அவனது பார்வை பற்றிய கோளாறுகள், உள்ளடக்கம் பற்றிய பிணி அவனது படைப்புகளைத் தொற்றி நிற்கிறது. மரபுகளை ஒட்டவே அறுத்தெறிந்து விட்டு நாதமில்லாத வசனங்களைப் பற்றிக்கொண்டு உயிர் பெறுகிற ஆகாயத்தாமரைக் கவிதைகள் பல மக்களிடமிருந்து அந்நியப்படுவதற்கு-நான் அந்நியப்படுகிறேன் நீ பந்தயம் பிடி என அடம்பிடித்து நிற்பதற்கு நாம் என்ன செய்வது? மண்ணிலிருந்தும் மரபுகளிலிருந்தும் அவற்றை மீறி எழுந்து, செழித்துப் பரந்துபடுகிற கவிதைகளோடு மக்களுக்கு என்றுமே சம்மதமுண்டு.

### புதிய பாலஸ்தீனம்

காய்ந்த பாலை மணல் வெளியில்
கனிகின்றன
நேர வெடி குண்டுகள்.
காலம்
மெல்ல மெல்லக் கழியும்.

யோர்தான் நதிப் படுகையில்
காற்றும் சுடுமணலும் புரளும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாணற் புதர்களிடை
மீன்கொத்திப் பறவைகள்
நம்பிக்கையுடன் பாடும்.
கந்தல் கூடாரங்களை
புயல் அலைக்கும் போதெல்லாம்
சம்மட்டிகள்
உறுதியுடன் தொடர்ந்தொலிக்கும்.
முளைக்கட்டைகள்
மேலும் மேலும் மண்ணுக்குள் ஊடுருவும்.

யூத பாலஸ்தீன
உழைப்பவர்கள் சகவாழ்வின்
புதியகொடி
திராட்சைப் குலைகளைப்போல்
எங்கும் சிரிக்கும்.

நாளை மலரவுள்ள லீலிகளின் மறைவில்
இரைதேடும்,
காட்டுப்புறாக்கள் பாடும்:
"கானல் நீர் லீலிப் புதர்களையும்
தங்க ஆறுகள் வரலாறுகளையும்
அடித்து அள்ளிச் செல்வதில்லை."

*(1971)*

## வேலிகள் போட்ட எங்கள் கிராமம்

கோடை நாட்களில் புடமிடப்பட்ட
புவிமுற்றத்தின் நாலா புறத்தும்
புதிய ஒளியும் புதிய ஓசையும்.

காந்தர்வ லோக எல்லையின் கீழே
வான்முடி முதலாய் மணிஅடி வரைக்கும்
பறவைகள் இன்னிசை பயிலும்;
நறுமணம் தோய்ந்த முந்தானைகளைப்
பாதைகள்தோறும் நழுவவிட்டு
வண்டோடி மலர்கள் சிரிக்கும்;
வானே ஆயினும் மண்ணே ஆயினும்
கடலே ஆயினும் சித்திரை நாட்களில்
ஆத்மாவுக்குப் புத்துணர் வாகும்.

எங்கள் ஊரில் புழுக்கம் தீர
பழைய கணக்கு எட்டின் தூசி
முகங்களில் படிந்த பெரிய மனிதர்கள்
ஆலமரத்தின் கீழே கூடுவர்.

தாங்கள் போட்ட கிடுகு வேலியின்
உயரம் பற்றியும்
அந்த வேலியின் பின்னே நரைகளைச்சூடும்
தங்கள் பெண்களின் கற்பைப் பற்றியும்,
அவர்களுக்காக,
மலை முகடுகளில் தங்க மலர்களைத்
தாங்கள் தேடும் சாதனை பற்றியும்
எத்தனை பெருமை பேசிக்கொள்ளுவர்!

சமையலறையின் வேலியைப் பிரித்தால்
சமவெளி எங்கும் குறிஞ்சி மலர்கள்.

*(1977)*

## மீன்பாடும் தேன்நாடு

வங்கக்கடலுக்கோ வெண்பட்டு மணல்விரிப்பு
மலையகத்து அருவிகட்கோ பச்சை வயல்விரிப்பு
பாடும்மீன் தாலாட்டும் பௌர்ணமி நிலாவுக்கு
ஓயிலாக முகம் பார்க்க ஒய்யாரமாய்த் தூங்க
மட்டு நகரில் வாவியிலே நீர்விரிப்பு.
எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லாம் அனுபவிக்க
சொந்தங்கள் இங்கே துயரம் சுமக்கிறது.

காலமெல்லாம் இங்கே
கணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
தெம்மாங்கு பாட திசைகாணும் தாய் எருமை.
திசைதோறும் புற்கள் முலைதொட்ட பூமியிலே
கன்றை நினைந்து கழிந்தபால் கோலமிடும்.

காடெல்லாம் முல்லை கமழும் வசந்தத்தில்
வயல்புறங்கள் தோறும் வட்டக்களரி எழும்.
வட்டக்களரியிலே வடமோடிக் கூத்தாடும்
இளவட்டக் கண்கள்.

தென்றல் வந்து மச்சியின் தாவணியை இழுக்கதிலே
தடுமாறும் கால்கள் தாளம் பிசகாது.

குதிரையிலே தாவி கொதிப்போடு இளவரசன்
போருக்குப் போவான்
கொடும்பகையில் வென்றிடுவான்.
எட்டாக வட்டமிட்டு இறுமாப்பாய்த் தலைநிமிர்ந்து
செட்டாகப் பாடி செழிப்பார்கள் போர்வீரர்
அண்ணாவி தட்டும் மத்தளத்தின்
தாளத்தின் சொற்படிக்கு
எல்லாமே வட்டக் களரியிலே மட்டும்தான்,
படிக்கட்டில்
பொல்லாவறுமை பசியோடு இவனுடைய
கைகோர்த்துச் செல்லக் காத்திருக்கும் வேதனைகள்;

போடியாரின் மாளிகையில் போரடித்த நெல்குவித்து
நாடோடிப்பாடல் மகிழ்ந்து பசி மறக்கும்.
ஊரின்புறத்தே ஒருநாள் நடக்கின்றேன் –

எல்லைப்புற வயலும் எழுவான் கடற்கரையும்
செல்வங்கள் எல்லாம் சொத்தாய்ப் பிறர்கொள்ள
பொட்டல்வெளியில்
கணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
சிண்டைப்பிடித்துக் கிடக்கின்றார், என் சொல்வேன்!

*1982*

ஈழத்தின் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் தூண்டிவிடப்பட்ட மோதல்கள் தந்த துயருடன் எழுதியது.

## இரத்தம் எழுதிய கவிதை

மே பதினைந்தில்
இந்துமா கடலில்
வானம் அதிர ஓலமிட்டது
புயல் தீண்டிய கருங்கடலல்ல.
என்னரும் தீவின் மக்கள் அறிவீர்!
அன்று என் கரைகளில் சிவப்பாய்ச் சுடர்ந்தது
மேதினத் தன்றென் தோழர்கள் கட்டிய
தோரணங்களும் கொடிகளுமல்ல.
உருண்ட நம் தலைகள் சிந்திய குருதி!

கண்கள் அகன்று பிதுங்கிய முகங்களில்
கடித்துக் கிடந்த நாவுகள் தோறும்
இரத்தம் எழுதிய கவிதையைச் சொல்வேன்.

போர்த்துக்கீசரை எதிர்த்து வீழ்ந்த என்
முதாதையரின் கிராமியப் பாடலில்
முன்னரும் இதுபோற் கவிதைகள் கேட்டுளேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொதித்து எழுந்த நம் இளைஞரைப்போல
வெண்மணல் போர்த்த முருகைக் கற்களில்
தலைவிரித்தாடின கறுத்த பனைகள்.
நெடுந்தீவின்
பசும்புல் வெளியெலாம்
காட்டுக் குதிரைகள் கனைத்தன.
உப்புக் கழிகளில்
புலம் பெயர்ந்துறையும்
சர்வதேசப் பறவைகள் அரற்றின.

பருத்தித்தோட்ட வெளிகளை எரித்து
குதிரைகளுக்காய்ப் புல்வெளி விரித்த
டச்சுக் கொடுங்கோல் அஞ்ச எழுந்த என்
முன்னோர் இசைத்த போர்ப்பாடல்களை
அன்று மீண்டுமென் கரைகளிற் கேட்டேன்.

மௌனித்து நிற்பதேன் உலகம்?

முகமிழந்த என்னரும் மக்கள்
தம் மூதாதையரின் முகங்களைப் பெறுக!
பாண்டவர் தம்முள் பொருதிக் கிடக்கிறார்.
குருசேத்திரத்து மக்களே எழுக!

1985

(நெடுந்தீவில் பயணிகள் படகினைத் தாக்கி இலங்கைக் கடற்படையினர் நாற்பதுக்கும் அதிகமானவரைக் கொன்றதால் எழுந்த கண்ணீர் கவிதை.

நிகழ்ச்சி: மே 15, 1985)

## வெய்யில் நாள்

நெடுநாளின் பின்
கார்ல் யோன் சாலையின் மேலே சூரியன்.
அந்தத் தென்னமரிக்கத் தெருப்பாடகனின்
புல்லாங்குழலில் புதியதோர் சோகம்.

தபாற் பெட்டிபோல
பார்க்கும் பொழுதெல்லாம் ஓரிடத்திருப்பினும்
மனிதன் அல்லவா?
அவனது இசைப்பில்
நேற்றொரு பாவம்
இன்றொரு பாவம்.
அவனது ஆத்மா இக்கணப் பொழுதில்
கார்ல் யோன் தெருவில்
சுற்றியிருக்கும் ரசிகர் மத்தியிலா
அல்லது *'மச்சுபிச்சு' மாநகர்ப் புறத்திலா
சஞ்சரிக்கிறது?

முன்னொரு காலம்
பீரங்கிக் குழல்களை முழக்கியபடிக்கு
ஸ்பானியார்கள் வருகிற வரைக்கும்
அன்டிஸ் மலைகளில் அவனது முன்னோர்
இசைத்த காதற் பாடல்களா இவை?

முன்னர் அவனது புல்லாங்குழல் ஒரு
மூங்கில் புதிராய் இருந்தபொழுது
கூடுகட்டிப் பறவைகள் பாடிய
தாலாட்டுகளா இவை?
யாரோ அறிவர்.

குளிர்காலத்தில் சூரியன் சுடர்ந்த
எந்தவோர் நாளையும் போலவே இன்றும்
கார்ல்யோன் சாலையில்
நோர்வீஜியர்கள் ஆறாய்ப் பெருகினர்.
உணவு விடுதிகளும் மதுச்சாலைகளும்
நிரம்பி வழிந்தன.
தெருப்பாடகர்கட்கு நாணயங்கள் வீசப்பட்டன.
ஈக்களைத் தொலைக்க ஓடித்திரிகிற
குதிரையைப்போல
நாட்டேக்கத்தைத் தொலைப்பதற்காக
கார்ல்யோன் சாலையில் நானும் அலைகிறேன்.

*மச்சுப்பிச்சு - தென்னமரிக்கப் பழங்குடியினரின் அழிந்துபோன நகரம்.

## ஐக்கிய நாடுகள் சபைக்கு..

(12ஆம் பக்க தொடர்ச்சி)

பிடிக்கும் மேற்கண்ட பாதை அந்த இலட்சியத்தை அடைவதற்குப் பொருத்தமற்றதாக-எதிரானதாக இருக்கிறது .ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் எங்கும் தேசிய விடுதலைப் போராட்டங்கள் நீறு பூத்த நெருப்பாக இருக்கின்றன. இந்நாட்டு அரசுகளின் ஜனநாயக மறுப்பு மற்றும் எதேச்சாதிகாரத்தன்மை காரணமாகவும், உலகை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக ஏகாதிபத்திய நாடுகள் பின்பற்றும் தந்திரங்கள் காரணமாகவும் இப்பிராந்திய நாடுகளில் போராட்டங்கள் மென்மேலும் தீவிரமடையும்.

ஏகாதிபத்திய ஒடுக்குமுறையையும், உள்நாட்டுக் கொடுங்கோன்மையையும் சுட்டெரிக்கும் வல்லமை ஒடுக்கப்படும் தேசங்களின் மக்களுக்கே உண்டு. ஈழத்தமிழ்மக்கள் தமது "முறையீடுகளை" இந்த மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.தமது நட்புறவை இவர்களோடு வளர்த்துக் கொள்ள வேண்டும். தமது நம்பிக்கையை தம்மீதும் இம் மக்கள் மீதும் வைக்க வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையிடம் அல்ல.

ஈழத்தமிழினத்தின் தேவை வெறும் பிரிவினை அல்ல. அவர்களுக்குத் தேவை விடுதலைபெற்ற மக்கள் குடியரசு. இதை அடைவது ஏகாதிபத்தியங்களை எதிர்த்த போராட்டத்தில்தான் அடங்கியுள்ளது.

### லண்டன் தமிழா (5)

சேருகிற செந்தமிழர் சங்கம்
தேருவதோ வெள்ளையரை அங்கும்
சீமாட்டி கைகளிலே
பூமாலை வைத்திடவோ
போரிடுவார் பார்த்திட அசிங்கம்.

-சிவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# A.J MINI MARKET

**இந்திய-இலங்கை உணவுப்பொருட்களின் விற்பனையாளர்**
**தென்கிழக்கு இலண்டனில் முதலாவதாக நிறுவப்பட்ட**
**தமிழர் உணவுத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் நிறுவனம்.**

மாமிச உணவுவகைகள், கடலுணவுப் பொருட்கள், CD, VIDEO, AUDIO
இலங்கை இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
இவற்றுடன் இப்போது **OFF LICENCE** இணைக்கப்பட்டுள்ளது.

## A.J MINI MARKET

30 LOAMPIT HILL LEWISHAM LONDON SE13 7SW
TEL: 081 691 9981



# RAJA & CO.

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

338 Hoe Street
Walthamstow
London E17 9PX

Telephone
081-503 6311

Fax 081-503 7523

With Compliments



# K.R.S. ORIENTAL STORES

*இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உணவுப்பொருட்கள் *அனைத்து கடலுணவுப்பொருட்கள் *அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் *அனைத்து பாடல்கள் நிறைந்த AUDIO, CD. *அனைத்து பத்திரிகைகள் சஞ்சிகைகள் *அனைத்து KITCHEN உபகரணங்கள் *மற்றும் அனைத்து தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.

## K.R.S. ORIENTAL STORES

**தரமான உற்பத்திகளை சிறந்த விலையில் பல விதமான தெரிவில்**
**வாடிக்கையாளர்களின் திருப்திக்காக அளிப்பதே எமது சேவையின் நோக்கம்**
**சந்தர்ப்பத்தை நழுவவிடாது விஜயம் செய்யுங்கள்**

## K.R.S. ORIENTAL STORES

**33 LEE HIGH ROAD, LEWISHAM SE13 5NS**
**TEL: 081 - 297 9432 FAX: 081 - 297 9453**

* NOTE: Public Car Park Facilities Available Next To Us.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# தமிழ் ஈழத் தேசியவாதம்: ராஜசேகரத்துக்கு ஒரு சுருக்கமான பதில்

**சி.சிவசேகரம்**

ராஜசேகரம் எடுத்த எடுப்பிலேயே என் கட்டுரையில் நான் சொல்லாததைச் சொன்னதாகக் கூறிவிடுகிறார். தமிழர் வாழ்வதற்குத் தமிழ் ஈழமே வழி எனும் கருத்தை இலங்கையிலும் உலகம் பூராவிலும் உள்ள தமிழர்கள் உணர்ந்துள்ளதாக நான் எங்கே சொன்னேன்? ராஜசேகரம் கட்டுரையைவாசித்து விட்டுத்தான் எழுதினாரா அல்லது...?

தமிழ் ஈழம் பற்றிய வரலாற்றுப் புரட்டை விளக்கினேன். ராஜசேகரமும் மறுக்கவில்லை. ஆனால் மற்றப் பிரிவினைவாதிகள் பேசும் 'வரலாறு' பற்றி ராஜசேகரம் அறியமாட்டாரா? அறிந்தவர்கட்கு என் விளக்கத்தின் அவசியம் விளங்கும்.

முஸ்லிம்கள் 1956இல் தமிழர்களுடன் இணைந்து மொழியுரிமைக்காக செயற்பட்டார்கள். 1961 சத்தியாக்கிரகத்தில் குறைந்த அளவு உற்சாகத்துடன் பங்குகொண்டார்கள். மொழி உரிமைக்காகப் போராடிய அவர்கள் தாம் ஒரு தனி தேசிய சிறுபான்மை இனம் என்பதை 1956க்கு முன்பிருந்தே வலியுறுத்தி வந்துள்ளனர். (அவர்கள் தம்மைச் 'சோனகர்', *Moors* என்றே அழைக்கின்றனர்). தமிழரசுக் கட்சியின் முக்கிய முஸ்லிம் தலைவர் ஒருவர் முஸ்லிம்கட்கு இஸ்லாமிஸ்தான் என்று தனியான சமஷ்டி (*federation*) வேண்டும் என்ற கருத்தை தலைவர் செல்வநாயகத்திடம் வலியுறுத்தியதாகவும் அதை அவர் ஏற்றுக் கொண்டாரென்றும் பகிரங்கமாகவே சொன்னது மறுக்கப்படவில்லை. முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் தங்களது உரிமைக்கட்காக நீண்டகாலமாகவே தொடர்ந்து சிங்கள பிற்போக்கு இனவெறியர்களை எதிர்த்து வந்துள்ளனர். அவர்கள் தங்களது உரிமைக்கட்காக நீண்டகாலமாகவே தொடர்ந்து சிங்கள பிற்போக்கு இனவெறியர்களை எதிர்த்து வந்துள்ளனர். அவர்கள் தங்களது உரிமைகட்காகப் போராடுவது ஒரு விஷயம், ஈழம், பிரிவினை என்னும் கருத்துக்களை ஆதரிப்பது அதற்குச் சம்பந்தமற்ற இன்னொரு விஷயம். மலையக மக்களில் மிகப்பெரும் பகுதியினர் வடக்கிலும் கிழக்கிலும் குடியேறுவதில் அக்கறையே அற்று இருக்கப் பழைய வரலாறு மட்டும் காரணம் அல்ல. 1974-75இல் பசி, பட்டினி காரணமாக வடக்கே புலம் பெயர்ந்தவர்கள் சிலர் பெற்ற'வரவேற்பும்' ஒரு காரணம். இன்று வடக்கே போவோருக்கு இராணுவமும் பொலிஸும் சிரமம் தருகிறதும் உண்மை. ஆனால் மலையகத்தில் உள்ள வேலைவாய்ப்புக்களையே அவர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அவர்களது 'தாயகம்' மலைநாடுதான். அது போக, முஸ்லிம்களும் மலையகத் தமிழரும் பிரிவினையை ஆதரிப்பது உண்மை என்றால் ஆதாரங்களைக் காட்டுவது அசாத்தியமான காரியம் அல்லவே!

வடக்கிலும் கிழக்கிலும் இருந்து சிங்களப் பிரதேசங்கட்கு மீண்டும் போனோர் பொருளாதாரக் காரணங்களையிட்டே போனார்கள் என்று வைத்துக் கொண்டாலும் (இது முற்றிலும் சரியல்ல. வடகொழும்பு, மாத்தளை போன்ற பல பகுதிகளில் நிரந்தர அடிப்படையில் குடியேறிய தமிழர்கள் நிறையப்பேர் உள்ளனர்). அது நான் கூறிய யதார்த்த நிலையையே பிரதிபலிக்கிறது. அவர்கள் "சொந்தமண்ணை' வெறுத்ததாக நான் சொல்லவில்லை. அவர்களும் செய்யவில்லை.

கிழக்கின் அரசியலே வேறு 1952இல் வடக்கில் தமிழரசுக்கட்சி (ஒரு தொகுதிபோக) படுதோல்வி கண்டபோது, திருகோணமலையில் போட்டியிட்ட தமிழரசுக்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றார். ஆனால் கிழக்கு மாகாண எம்.பி.க்கள் 1960 தொடங்கி இன்று வரை இலகுவாக ஆளுங்கட்சிக்குத் தாவி விடுவதோடு பிரச்சினையின்றித் தங்கள் ஊரில் உலாவ முடிகிறது. வடக்கில் இது சாத்தியமே இல்லை. 1977இல் அமைச்சர் தேவநாயகம் ஆளுங் கட்சி சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் வெற்றி பெற்றார். அதே மாவட்டத்திலிருந்து கூட்டணி எம்.பி.க்கள் இருவர் ஆளும் கட்சிக்குத் தாவினர். இன்றும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள் கிழக்கில் நடக்கும் குத்து வெட்டுகள் ஊரறிந்தவை. அங்கு கூட்டணி வெற்றிபெற மூல காரணம் அரசாங்கங்களது தொடர்ச்சியான இனவாதப் போக்கு எனலாம்.

அரசியல்வாதிகள் இஷ்டப்படி மக்களைத் திருப்ப முடியாது என்கிறார் ராஜசேகரம். சிங்கள இனவாதிகளும் தமிழ் இனவாதிகளும் திட்டமிட்டே ஜனங்களைத் திசை திருப்பினர் என்கிறேன் நான். (அடொல்ப் என்று யாரோ இருந்ததாக ஞாபகம்).

இலங்கையில் பிரிவினை அப்படியே அசாத்தியம் என்று நான் சொல்லமாட்டேன். ஆனால் இன்றைய சூழலில் இந்தியா, அமெரிக்கா அல்லது ரஷ்யா தலையிடாமல் பிரிவினை சாத்தியமில்லை. இஸ்ரேல் மூலம் அரபுநாடுகட்கு சோஷலிஸம் வரும் என்று ஸ்டாலின் கூட நம்பினார். இந்த ஏழை உலகுக்கு ஒரு இஸ்ரேல் போதாதா?

கட்டுரை இறுதியில் அவர் எனக்குச் சூட்ட முனைந்த புகழாரங்கட்கு நன்றி. கவனமாகச் சேமித்து வைத்தால் அதிககாலம் கடக்குமுன் தனக்கே சூட்டிக் கொள்ளலாம்.

(படிகள் 14 1982)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிவசேகரத்தின் பிரிவினை எதிர்ப்பு வாதம் குறித்து....

**அ.கௌரிகாந்தன்**

*1982ம் ஆண்டின் 12ம் மாத "படிகள்" இதழில் திரு. சிவசேகரம் அவர்கள் "தமிழ் ஈழத் தேசியவாதம் குறித்து" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையைப் பற்றியோர் மதிப்பீட்டை இத்தலைப்பில் முன் வைக்கின்றேன்.*

இக்கட்டுரை உப தலையங்கம் இடப்படாத பகுதியாக பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியையும் முடிந்தளவு தனித்தனியாக எடுத்து ஆராய்வோம்.

முதலாவது பகுதி முன்னுரையைப் போல உள்ளது. ஈழத் தேசிய வாதத்தின் வரலாறும் அடிப்படையும் என்பது பற்றியும், சில பிரிவினை வாதிகளினது முற்போக்குத் தோற்றம் பற்றியும் கூறப் போவதாக பகர்கின்றது.

இங்கு ஈழத் தமிழ் தேசிய வாதம் என்று எதனைக் குறிப்பிடுகின்றார்? எதற்காக தமிழ் தேசிய வாதம் என்று குறிப்பிடவில்லை. தமிழ் மொழியை பொதுவானதாக கொண்டிருந்தாலும் கூட தனித்தனியான தேசிய இனங்களாக கருத தகுதியுடைய இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் (இந்திய வம்சாவழித் தமிழர் என உத்தியோக பூர்வமாக அழைக்கப்படுவர்) இஸ்லாமியர் ஆகிய மூன்று மக்கட் பிரிவினரும் தத்தமக்கென்று தனியாக தேசிய வாதத்தையும், தேசிய வரலாற்றையும் கொண்டிருப்பதனால் தான் தமிழ் தேசிய வாதம் என்ற பதத்தை தவிர்த்தாரா? அப்படியொன்றும் ஆழமாக பார்த்ததாகத் தெரியவில்லை. "தமிழ் பேசும் மக்கள் எனப்படும் 3 மில்லியன் (30 லட்சம்) பேரின் சார்பில் தமிழ் ஈழம் கேட்கப்படுவதாக சொல்லப்படுகின்றது. இந்த தேசிய இனத்தின் ஒருமைப்பாட்டை இனிப் பார்ப்போம்" என்றவற்றையும் கட்டுரையின் முழுமையையும் நோக்கும் போது இவர் "ஈழத் தமிழ் தேசிய வாதம்" என்பதற்கு பிரிவினைக் கோரிக்கையின் வரலாறும், அடிப்படையும் பற்றி வெளிக்கொணர்வதே இவர் நோக்கமாகும்.

ஈழம் என்பது இலங்கையின் மிக தொன்மைக் கால பெயர்களில் ஒன்றாகும். ஈழத் தமிழ் தேசிய வாதம்




என்பது இலங்கைத் தமிழ் தேசிய வாதமேயாகும். அதாவது வட, கீழ் மாகாணத்தை இலங்கையின் பாரம்பரிய பிரதேசமாகக் கொண்ட மிக தொன்மைக் கால வரலாறு உடைய தமிழர்களின் தேசியவாதமாகும். சிவசேகரம் நிச்சயமாய இந்த அர்த்தத்தில் "ஈழத் தேசிய வாதம்" என்ற பதத்தை பிரயோகித்திருக்கவில்லை. ஈழத் தமிழர் அல்லது இலங்கைத் தமிழரை தனித் தேசிய இனமாகவே அங்கீகரிக்கத் தயங்கும் இவரா இவ்விதம் அர்த்தப்படுத்துவார். தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமான முறையில் இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாக செயல்பட்டு வந்திருப்பது மறுக்க முடியாத விடயமாகும். ஆனால் தமிழ் ஈழத் தேசிய வாதம் தோன்றியிருப்பது முன் கூறியிருப்பது போல 1971க்குப் பிறகுதான்", தமிழ் தேசிய மக்களின் பிரச்சனைகள் பற்றி பேசுவோர்" என்று கூறும் இவர் எந்த இடத்திலும் தேசிய இனம் என்ற பதத்தை பாவிப்பதை மிகக் கவனமாகத் தவிர்த்துள்ளார். சில இடங்களில் இப்பதத்தைக் கிண்டலாக பயன்படுத்தியுள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் முழுவதையும் ஒரு தேசிய இனமாகவோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களாகவோ ஏற்பதற்குத் தயாராய் இல்லை. இது தான் இவரின் மார்க்ஸிஸம் - லெனினிஸம்.

பிரிவினைக் கோரிக்கையின் வரலாறும் அடிப்படையும் பற்றி ஆராயும்போது, ஈழத் தமிழ் தேசிய வாதத்தின் ஒரு கட்டமே தனி நாட்டுக்கோரிக்கை என்பதை புரிந்து கொள்ள முடியும். "பிரிவினை வாதத்திற்கு காரணம் ஆழமான தேசிய உணர்வல்ல. சில அன்றாட பிரச்சினைகள் தான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்" என்று சிவசேகரம் கூறுவது முற்றிலும் தவறானது. இலங்கையில் இன்று பிரிவினையை எதிர்ப்பது தான் மார்க்கிஸ்ட் லெனிஸ்ட்களின் ஒரே கடமை என சபதமெடுத்துள்ள சிவசேகரம் வரலாற்றையே மூடி மறைக்கிறார்.

ஈழத் தமிழ் தேசியவாதத்தின் (மலையகத் தமிழ் தேசிய வாதத்தினதோ, இலங்கை இஸ்லாமிய தேசிய வாதத்தினதோ அல்ல) வரலாறு பற்றி பார்க்கும் முன்பாக இது தொடர்பாக சிவசேகரம் எழுப்பின இன்னுமோர் பிரச்சனையை அவதானிக்க வேண்டும். இவரின் முதலாவது தவறு இத்தேசிய வாதங்களைப் பிரித்துப் பார்க்காமல் "தமிழ் தேசியவாதம்" என்று முழுமையாக எடுத்துக் கொண்டதாகும். பிரிவினைக் கோரிக்கை ஈழத் தமிழ் தேசிய இனத்தின் கோரிக்கையே தவிர ஏனைய இரு தமிழ் பேசும் மக்கள் பிரிவினரினதும் கோரிக்கையேயல்ல, அவர்கள் அதை ஏற்கவும் இல்லை. அது தமிழ்பேசும் மக்கள் முழுமையினதும் கோரிக்கையல்ல. தமிழ் ஈழம் கோரும் "தமிழர் விடுதலைக் கூட்டணி" இதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ளவில்லை. என்றாலும் கூட அவர்களின் நடவடிக்கைகள், வேலைத்திட்டங்கள் இதை வெளிப்படுத்துகின்றன. இலங்கையின் ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மூன்றினதும் தாய்மொழி தமிழாக இருப்பதனாலும், மொழி ரீதியான அடக்குமுறை இருப்பதனாலும், இம்மூன்றும் தேசிய இன அடக்கு முறைக்கு முகங்கொடுப்பதனாலும் இம்மூன்று தேசிய இனங்களுக்கிடையில் ஐக்கியம் ஏற்படுவதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இம்மூன்றும் சாத்தியமான முறைகளில் தமக்கென்று பொதுவான முன்னணி அமைத்துக்கொள்வதும் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக குரல் கொடுப்பதும் இயற்கையேயாகும். இந்நிலைமை இலங்கையில் இன்னும் அமைப்பு ரீதியான ஒரு முன்னணி என்றளவுக்கு வளரவில்லை. மூன்றும் தத்தமது தேசிய இனப் பிரச்சனைகளை வெவ்வேறு வழிகளில் தத்தமது சொந்த முயற்சியில் தத்தமது நிலமைக்கு ஒப்ப தீர்க்க முற்படும் அதே வேளையில் இவர்கள் மத்தியில் ஐக்கியமும் உருவாகி வருகின்றது. தனக்கென்று தனியான தரை மார்க்க தொடர்புபட்ட பாரம்பரிய பிரதேசமும் (அதுவும் கூட ஒரு புறம் மாத்திரமே பிரதான பகுதியுடன் தரையால் தொடர்புபட்டுள்ளது.) வேறு சாதகமான நிலைமைகளும் இருப்பதனால் ஈழத்தமிழ் தேசிய இனம் மாத்திரமே கூடியளவு தனது தனித்துவத்தை அரசியல் ரீதியில் நாட்டுவதற்காக தனி நாடு என்ற கோரிக்கை முன்வைத்துள்ளது. அத்தேசிய இனம் தனக்கு உதவியாக "தமிழ் மக்கள்" என்ற கோதாவில் ஏனைய இரு தேசிய இனங்களையும் தன்னுடன் இணையுமாறும் பொதுவான ஒரு முடிவுக்கு அல்லது கூட்டுக்கு வருமாறும் கேட்பது எவ்விதத்தில் தவறானது? அவர்கள் அதை ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம். தத்தமக்கென்று தனித் தனியான முடிவுகளை வைக்கும் அதே வேளையில் ஈழத் தமிழ் தேசிய இனத்தின் முடிவை ஆதரிக்கலாம். தமது நிலைமைக்கு ஒப்ப அதற்கு ஆதரவு கூட வழங்கலாம். (இன்று அந்நிலைமை உருவாகி வருகின்றது). இது வரவேற்கப்படவும் வளர்த்தெடுக்கப்படவும் வேண்டும். ஆனால் வளர்ச்சி பெற்ற ஒரு ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துமானால், அவர்களின் நலன்களை தமது நலனுக்கு கீழ்ப்படுத்துமானால், அது எதிர்க்கப்பட வேண்டியதொன்றாகும். ஈழத் தமிழ் தேசிய வாதத்திடம் இவ்விதமான போக்கு உள்ளதை மறுக்க முடியாது. இப்போக்கு நிச்சயமாக எதிர்க்கப்படவேண்டும். அழிக்கப்பட வேண்டும். இதன் அர்த்தம் தனி நாட்டு கோரிக்கையை எதிர்க்க வேண்டும் என்பது அல்ல. ஆனால் சிவசேகரம் தனிநாட்டுக்கோரிக்கையை முழுமுச்சாக எதிர்ப்பார். ஏன் எனில் மூன்று மக்கட் பிரிவினரும் தத்தமது சொந்த தேசிய இன வரம்புகளைக் கடந்து, அல்லது உடைத்தெறிந்து தமிழ் பேசும் மக்கள் என்ற முறையில் ஐக்கியப்பட்டு ஒன்றாகி பிரிவினைக் கேட்டால்தானாம் அது மார்க்ஸீய - லெனினிஸத்திற்கு ஏற்புடையதாக இருக்கும். மாக்ஸிஸம் - லெனினிஸத்தில் ஏன் தான் இவருக்கு இவ்வளவு ஆத்திரமோ தெரியவில்லை.

இவரின் மார்க்ஸிஸ்ட் - லெனினிஸ்ட் அணுகு முறையின் மிகப் பிற்போக்கானதாக கருதப்படும் தமிழர் விடுதலைக் கூட்டணியால் புரிந்து கொண்டதாய் காட்டியதைக் கூட இவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் 77ம் ஆண்டு பொதுத் தேர்தல் விஞ்ஞாபனத்தில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஒரு சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சமதர்ம ஈழ அரசை நிறுவுதற்குத் தமிழ் தேசிய இனத்தின் ஆணையை தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நிற்கிறது. "முஸ்லீம்கள் முழுவரினதும் பாரம்பரிய பிரதேசம் வட - கீழ் மாகாணம் அல்ல. ஒரு பகுதியினர் வடகீழ் மாகாணத்தை மிக நீண்ட கால குடியிருப்பு பிரதேசமாக கொண்டுள்ளனர் என்பதுதான் உண்மை. அதே போல் மலையகத் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசமும் வட - கீழ் மாகாணம் அல்ல - ஆசிரியர்.




"1 தமிழ் ஈழ அரசில் கீழ்க் கண்டோர் குடியுரிமை பெறுவர்.

1 அ) தமிழகத்தின் நிலப்பரப்பில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் யாவரும்.

1 ஆ) தமிழ் ஈழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப்பாகத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்கள்.

1 இ) தமிழ் ஈழக் குடியுரிமையை நாடும் உலகில் எப்பாகத்திலும் வசிக்கும் இலங்கை வம்சாவழித் தமிழ் பேசும் மக்கள்.

2) .... குறிப்பாக தமிழ் ஈழத்தின் அங்கமான முஸ்லீம்கள் சுயநிர்ணய உரிமையுள்ள ஒரு சுயாட்சி மாகாணமாகத் தாம் பெரும்பாலாக வாழும் பிரதேசத்தில் அமர்த்தப்படுவர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கின்றது.

3) தமிழ் ஈழத்தின் தமிழ் மக்கள் பெரும்பாலாக வாழும் பகுதியில் முஸ்லீம் மக்களையோ முஸ்லீம் மக்கள் பெரும்பாலாக வாழும் பகுதிகளில் தமிழ் மக்களையோ குடியேற்றுவதன் மூலம் பெரும்பான்மையினரைச் சிறுபான்மை இனமாக்கும் எம்த்திட்டத்திற்கும் இடம் அளிக்கப்பட மாட்டாதென்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கின்றது.

4) தமிழ், ஈழ ஆட்சி மொழியாக இருக்கும் அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் வாழக்கூடிய சிங்கள மக்கள் தம் மொழியில் கல்வி கற்க, அரசுடன் கருமமாற்ற உள்ள உரிமை பாதுகாக்கப்படும். அதே போன்று சிங்கள அரசின் கீழ் வாழக்கூடிய தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமைகளுக்கும் அவ்வரசிடம் உத்தரவாதம் நாடப்படும்.

தமிழ் ஈழம் இலங்கையின் தமிழ் பேசும் மக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முழுமையினது கோரிக்கையோ முழுமையினருக்கான கோரிக்கையோ அல்ல என்பதையும் தமிழ் பேசும் மக்கள் முழுமையும் வட-கீழ் மாகாணம் வர வேண்டும் என்று கட்டாயப்படுத்தவோ இல்லை என்பதையும் இப்பகுதிகள் எடுத்துக் காட்டுகிறதல்லவா.

வட - கீழ் மாகாண தமிழ் பேசும் மக்கள் மத்தியில் ஒன்றுபாடு இல்லை என்பதையும் ஆகையினால் தமிழ் ஈழம் சாத்தியம் இல்லை என்றும் தவறானது என்றும் சொல்ல வருகிறார். நல்லது அதைச் சற்று அவதானிப்போம். வட-கீழ் மாகாணத்தை தமது பாரம்பரிய பிரதேசமாகக் கொண்ட தமிழ் தேசிய இனம் மத்தியில் ஒருமுகப்பாடு போதியளவு இல்லை என்பதுவும் பேதங்கள் உண்டு என்பதுவும் உண்மை தான். பேதங்கள் இல்லாமல் ஒரு முகப்பாடு இருந்திருக்குமானால்தான் அதை விசேடமானதாக கொள்ள வேண்டும். 20ம் நூற்றாண்டின் மிக முற்பகுதியுடன் தான் இலங்கைத் தீவில் தேசிய இனங்களின் உருவாக்கம் தெளிவான நிகழ்ச்சியாகவும், பொதுவான நிகழ்ச்சியாகவும் ஆகியது. ஆனால் அன்றில் இருந்து இன்று வரை (இலங்கையின் முதலாளித்துவ தோற்றத்திலிருந்து இன்று வரை) இலங்கை காலனியாகவும் அதன் பின்னர் நவகாலனியாகவும் இருந்து வருகிறபடியால் இலங்கையின் தேசிய இனங்கள் இன்னமும் சுதந்திரமானதும், முழுமையானதுமான வளர்ச்சியை எய்தாமல் உள்ளன. (தேசிய இனங்களாக இன்னமும் பரிணமிக்கவில்லை என்று நான் கூறவில்லை. 20ம்நூற்றாண்டின் முற்பகுதியிலேயே இப் பரிணமிப்பு நடைபெற்று விட்டது). சிங்கள தேசிய இனம், மத்தியில் காலனியக் காலத்தில் ஏற்பட்ட மேல் நாட்டு சிங்களவர், கரையோர சிங்களவர் என்ற பேதம் இன்னமும் மறையவில்லை. நாடு பூராவும் உள்ள முஸ்லீம்கள் மத்தியில் இன்னமும் போதியளவு ஒருமைப்பாடு தோன்றவில்லை. இதே நிலைதான் இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் நிலவுகின்றது. நவ-காலனிய ஆதிக்கத்திலிருந்து விடுபடும் வரை (அரசியல், பொருளாதார சுதந்திரம் வேறுபாடுகளை சுட்டிக்காட்டி அத்தேசிய இனம் போராடத் தகுதி அற்றது. அல்லது அதன் போராட்டம் சாத்திய மற்றது என்று கூறுவது மாக்ஸிஸம் - லெனினிஸமா....? அல்லது அவ்வேறுபாடுகளுக்கு காரணமான காலனிய ஆதிக்கவாதிகளினதும், ஏகாதிபத்தியவாதிகளினதும் பெருந் தேசிய அகங்காரவாதிகளினதும் ஆக்கிரமிப்பு நியாயமா.....?

தேசிய இனங்கள் முழுமையான வளர்ச்சியை நோக்கி போராட்டத்தின் ஊடாக படிப்படியாகத்தான் முன்னேறி வரும் என்பது மாத்திரமல்ல. இவ்வளர்ச்சி சகல பிரதேசங்களிலும் வேகமுடையதாகவும் கூட இருக்காது. பல் வேறு சுதந்திரமான புறநிலைக் காரணங்களால் இவ்வளர்ச்சி பிரதேச வாரியாக ஏற்றத் தாழ்வுகள் உள்ளதாகவே இருக்கும். இவற்றில் சில நிலவும் வர்க்க உறவுகளுக்கும் அப்பாற்பட்டது. சோசலிச சமூக அமைப்புக்கூட உடனடியாக இவ் ஏற்றத் தாழ்வுகளை இல்லாமல் செய்ய மாட்டாது. (சங்காயும், தாச்சாயும், தாச்சிங்கும் சீனாவில் ஏன் பிரபல்யமானது?) இலங்கைத் தமிழ் தேசிய இனத்தின் வரலாற்றைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் ஏனைய பிரதேசங்களிலும் விட வளர்ச்சியடைந்திருக்கிறது? இதனால் இப்பிரதேசம் தேசிய விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமான போராட்டத்தில் முன்னணி வகிக்கின்றது. (ஏனைய தமிழ்ப் பிரதேசங்களுடன் ஒப்புநோக்கில் தான்) அது தவறா...? வளர்ச்சியடைந்த பிரதேசம் ஏனைய பிரதேசங்களின் மேல் ஆதிக்கம் செலுத்துவதுதான் தவறானது. சிவசேகரத்தைப் பொறுத்த வரையில் தனிமனிதனின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பால் நின்று செயற்படும் தவிர்க்க முடியாத நியதியாக இருக்கும் சமச்சீரற்ற வளர்ச்சியை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் 'சுத்த சமத்துவம்' பேசுகின்றார். மார்க்ஸிஸ - லெனினிஸத்தின் கழுத்தை நெரிக்கின்றார்.

ஈழத்தமிழ் தேசிய வாதம் (இலங்கைத் தமிழ் தேசியவாதம்) எவ்விதம் தமிழ் என்றளவுக்கு பரிணாமம் அடைந்தது என்பதை இனி அவதானிப்போம்.




பெறும் வரை) இந்நிலைமை மாறப்போவதில்லை. தத்தமது அரசியல் பொருளாதார சுதந்திரத்திற்கான போராட்டத்தின் (கூட்டானதோ, தனித்தனியானதாகவோ) ஊடாக மாத்திரமோ தேசிய இனங்கள் முழுமையான வளர்ச்சியை நோக்கி முன்னேறும். இது தான் இலங்கையில் நடைபெறும் நிகழ்ச்சியாகும். குறிப்பிட்ட தேசிய இனத்தைச் சார்ந்த மக்கள் மத்தியில் உள்ள பிரதேச

1. இந்நாட்டில் (இலங்கை) மாணவர்களுக்கு தாய்மொழி மூலம் கல்வியூட்டப்படவேண்டும் என்ற பிரச்சனையை 1867இல் யாழ்ப்பாணத்து இளைஞர் சங்கம் 'மோகன்' ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தது. பிரிட்டிஷ் காலனியாக இருந்த இலங்கையில் ஆங்கிலமே போதனா மொழியாக இருந்தது.

2. டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் அமைப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ராஜ்ய சபைக்கு பூரண ஆட்சி அதிகாரங்களை வழங் காமையை எதிர்த்து 1931 தேர்தல் யாழ்ப்பாணத்தில் பகிஷ்கரிக்கப்பட்டது. யாழ் இளைஞர் சங்கமே இதற்கு தலைமை தாங்கியது. இத் தேர்தல் யாழ்ப்பாணத்தில் மட் டுமே பகிஷ்கரிக்கப்பட்டது.

3. 1932 ஏப்பிரல் புத்தாண்டு தினத்தில் முதன்முறையாக பிரித்தானிய தேசியக்கொடிக்குப் பதிலாக இலங்கை தேசியக்கொடி யாழ்ப்பாண முற்றவெளியில் யாழ் இளை ஞர் சங்கத்தால் ஏற்றப்பட்டது.

4. 1938இல் நிர்வாக சபையில் சிங்களவர்கள் மாத்திரம் இடம் பெற்றமையினால் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு இயங்கிய தமிழ் காங்கிரஸ் கட்சி "ஐம்பதுக்கு ஐம்பது" என்ற கோரிக்கையை முன் வைத்தது. (நிர்வாக சபையில் தமிழர்களுக்கும், சிங்களவருக்கும் சமஆசனம் - இங்கு தமிழர்கள் என்பது தமிழ் பேசும் மக்கள் என்பதையே குறித்தது).

5. 1948இல் இலங்கை சுதந்திரம் அடைந்தது. சுதந்திர அரசுக்கான யாப்பு 1947இல் தயாரிக்கப்பட்டது. இவ் வியாப்பில் 29வது ஷரத்து பின்வருமாறு கூறுகின்றது.

இந்த 29(2) இந்தச் சட்டங்கள் எதுவும்:

அ) எந்த மதத்தைக் கடைப்பிடிப்பதைக் கட்டுப்படுத்தவும், தடை செய்யவும் கூடாது.

ஆ) ஏனைய சமூகங்களையோ மதங்களையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படாத கட்டுப்பாடுகளையும் ஏதாவது ஒரு சமூகத்தையோ மதத்தையோ சார்ந்தவர்கள் உட்படுத்தப்படக்கூடாது.

இ) ஏனைய சமூகங்கட்கோ, மதங்கட்கோ வழங்கப்படாத முன்னுரிமைகளையும், சிறப்புரிமைகளையும் ஏதும் ஒரு மதத்திற்கோ சமூகத்திற்கோ வழங்கக்கூடாது.

ஆனால் 1927ல் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் யாப்பு 29 - '2' வாசகத்தை இல்லாமல் ஆக்கியது.

6) 1948ல் இலங்கையில் உள்ள "இத்திய வம்சாவழித் தமிழரின்" வாக்குரிமை பறிக்கப்பட்டு, அவர்கள் நாடற்ற பிரஜைகள் ஆக்கப்பட்டார்கள். இதனைக் கண்டிக்க வேண் டும் என்பதற்காகவும், வேறு காரணங்களுக்காகவும் புதிய அரசியல் கட்சி (தமிழ் அரசு கட்சி) வட கீழ் மாகாணத் தில் ஆரம்பிக்கப்பட்டது. யாழ்ப்பாணமே பிரதான பங்கு வகித்தது. ஐக்கிய இலங்கையின் கீழான சமஷ்டி ஆட்சி கோரப்பட்டது.

7) 1956ல் சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாகும் என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இதை எதிர்த்து அரசாங்கத்துக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. (கோடீஸ்வரன் வழக்கு). இச்சட்ட விதிகள் செல்லுபடி யாகாது என தீர்ப்பும் வழங்கப்பட்டது. பல்வேறு தந்தி ரங்கள் புரிந்தும் இத்தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டது. 1972 புதிய அரசியல் யாப்பை ஆக்குவதன் மூலம் இத்தீர்ப்பும் வழக்கும் பூரணமாக இரத்தாகியது.

8) 1957ல் இலங்கைப் பிரதமருக்கும் தமிழ் அரசுக் கட்சித் தலைவர் திரு செல்வநாயகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது. (பண்டா - செல்வா ஒப்பந்தம்) இவ் ஒப்பந்தம் மொழி, தமிழ்ப் பிரதேசத் திற்குள்ளான குடியேற்றத் திட்டங்கள், தமிழ்ப் பிரதேச நிர்வாகங்களுக்கு விசேட அதிகாரம் கொண்ட மாவட்ட சபை ஆகிய பிரச்சனைகளுக்கு தீர்வு கண்டது. ஆனால் இது எதிர்க்கட்சியினதும், சிங்கள மக்களினதும் எதிர்ப்பின் காரணத்தால் கிழித்தெறியப்பட்டது.

9) 1958ல் நாடு முழுவதும் தமிழருக்கு எதிரான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. பல்லாயிரக்கணக் கானோர் அகதிகளானார்கள். நூற்றுக்கணக்கானோர் உயிர் இழந்தார்கள்.

10) 1960ல் 'நீதிமன்ற மொழி' சட்ட மூலத்தின் மூலம் நீதிமன்றங்களிலும் சிங்களம் மாத்திரமே சட்டமானது.

11) 1961ல் அரசகரும மொழி நடைமுறையை எதிர்த்து வடகீழ் மாகாணங்களிலும், கொழும்பிலும் சத்தியாக்கிரகமும், சட்ட மறுப்பும், தமிழ் மக்களால் நடாத்தப்பட்டது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நிலவியது.

12) 1965ல் மீண்டும் சில சலுகைகளுடன் ஒப்பந்தம் ஒன்று எழுதப்பட்டது. பிரதமர் டட்லியும், தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வாவும் கைச்சாத்திட்டார்கள்.இதே ஆண்டு இது கிழித்தெறியப்பட்டது.

13) 1966ல் டட்லியின் அரசாங்கம் கொண்டுவந்த தமிழ் மொழி விசேட சட்டத்தை எதிர்க் கட்சிகள் எதிர்த்து கல கம் செய்ததால் அது கைவிடப்பட்டது. இடதுசாரிகட்சிகளும் இதில் பங்கு பற்றின என்பதை மறுக்க முடியாது.

14) 1972ல் முன்பு கூறப்பட்ட புதிய யாப்பு உருவாக்கப் பட்டது. பௌத்த மதம் அரச மதமாகியது.

15) 1974ல் தமிழ் ஈழக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

16) 1977ல் இக்கோரிக்கை வட கீழ் மாகாண பெரும் பான்மை தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதுதான் தமிழ் ஈழக் கோரிக்கை தோன்றியதற்குக் காரணம், ஆழமான தேசிய உணர்வல்ல, அன்றாட பிரச்சனைகள்தான்...." என்று சிவசேகரம் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?

தமிழ் ஈழக் கோரிக்கை நியாயபூர்வமானதா, இல்லையா என்பதுவும், அது இன்றைய நிலையில் நடைமுறைச் சாத்தியமா....? இல்லையா...?? என்பதை ஆராய்வதுவும் இரு வேறுபட்ட பிரச்சனைகள். நான் இங்கு சாத் தியமா...? இல்லையா...?? என்பதை ஆராயப் புகவில்லை. இக்கோரிக்கை ஈழத் தமிழ் தேசிய இனத்தின் பெரும் பான்மையோரின் ஆழமான உணர்வுகளுடன் சம்பந்தப்பட்ட ஒரு உயிர்த்துடிப்புள்ள அவர்களின் நிகழ்கால அன்றாட வாழ்க்கையுடன் தொடர்புள்ள, கடந்தகால நீண்ட வர லாற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள ஒன்று என்பதைக் கூறுவதே எனது நோக்கமாகும். சிவசேகரம் கூறியது போல இது பிரச்சார அளவில் மாத்திரம் வலுவடைந்த ஒரு கோரிக்கை அல்ல.

வரலாற்றின் போக்கைப் புரிந்து கொள்ளச் சிவசேகரம் தவறியிருந்தால் அவரைச் சிறிது மன்னிக்கலாம். ஆனால் நிகழ்கால வரலாற்றைத் திரித்துக் கூறினால் அவரை மன்னிக்க முடியாது. தமிழ் மக்களது உரிமைகளை ஆத ரிக்கும் அதேசமயம் பிரிவினையை உறுதியாக எதிர்க்கும் மார்க்ஸிய இயக்கங்கள் நாட்டில் இருக்கவே செய்கின்றன... இது இவரின் கூற்று. (இங்கு இவர் உரிமை என்று குறிப் பிடுவது சுய நிர்ணய உரிமையல்ல. வெறுமனே உரிமையை....???) இவ்விதமான விளக்கத்தைத் தயவுசெய்து வெளிப்படையாகக் கூறமுடியுமா...? இல்லாத ஒன்றை இருப்பதாக ஏன் காட்ட வேண்டும்? (அரசுக்கும், மக் களுக்கும் இலங்கையின் அரசியல் இயக்கத்துக்கும் இர கசியமாக ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களிடம் இருந்து ஒதுங்கிய நிலையில் இவ்வியக்கங்கள் இருந்தால் அவற்றைக் கூறவேண்டாம், அவற்றின் தூய்மையைக் கெடுக்க வேண்டாம்) இலங்கையின் புரட்சிகர இயக்கத்தை வளராமல் தடுக்கும் அக நிலைக் காரணிகளில் சிவசேகரத்தின் தமிழ் ஈழ தேசிய வாதம் குறித்த கண்ணோட்டம் ஒன்று என்று கூறலாம்.

சில பிரிவினை வாதிகளினது முற்போக்குத் தன்மை பற்றி இவர் என்ன கூறியிருக்கிறார் என்பதை இனி அவ தானிப்போம்.

தொடரும்....

**லண்டன் தமிழா! (4)**

கற்றறியார் காவியம் படைத்தார்
விற்றிடதோர் வைபவமும் வைத்தார்
நக்கீரனார் வந்தார்
நல்லசுவை தீயென்றார்
நெற்றிவிழி சுட்டிடுமுன் நகர்ந்தார்.

சிவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


SPS

SRI PRAGAS STORES

# SRI PRAGAS STORES

எங்களிடம் இலங்கை இந்தியா சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
பனாறிஸ் பட்டுச்சேலை, காஞ்சிபுரம் சேலை மைசூர் சில்க் சேலை, பட்டுவேட்டி சால்வை
மற்றும் சிறுவர் சிறுமியரின் சிங்கப்பூர் உடுப்புகள் எவர் சில்வர்பாத்திரங்கள்,
மரக்கறிவகைகள்,மீன் வகைகள்,அரிசி,அரிசிமா,மிளகாய்த்தூள்,இடியப்பம்
மற்றும் சகலவிதமான உணவுப் பொருட்களும் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ்,இந்தி,மலையாளப் படங்கள் C.D& ஒடியோ,வீடியோ கசட்டுகள்
யாவற்றையும் ஒரே இடத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள
நாட வேண்டிய ஒரே ஒரு புதிய ஸ்தாபனம்

**SRI PRAGAS STORES**
**54 LADYWELL ROAD LONDON SE13 7UZ**
**TEL: 081- 314 5542**

FOR ALL YOUR LEGAL NEEDS

# SRI KANTH & CO.

SOLICITORS

**N.BALAKRISHNAN L.L.B**
**S.SRIKANTHALINGAM B.A**

ASSISTANT

MRS.KAMALIKA RATNAYAKE

# SRI KANTH & CO.

1ST FLOOR
604,HIGH ROAD WEMBLEY MIDDX HAO 2AF
**TEL: 081-795 0648 FAX: 081-795 0649**
**MOBILE: 0831 195979**

www.tamilarangam.net

### சித்திரலேகாவின் "பெண் விடுதலை"

அப்புறமாக சித்ரலேகா கட்டுரை - பேட்டி ஒன்றைப் பிரசுரித்துள்ளீர்கள். சித்ரலேகா 'பெண்களுக்கு வாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன' என்று சுற்றிச்சுற்றி 'கலை இலக்கிய, அறிவுத்துறை வட்டாரங்களில் தமக்கு சரியாசனம் வழங்கப்படவில்லை' என்ற கருத்தையே கூறு கிறார். 'ஒரு தரப்படுத்தல், ஒரு கோட்டா முறை' மூலம் தமக்கு இடம் தரப்பட வேண்டும் என்ற குரலாகவே இது ஒலிக்கிறது.

இவர் சொல்வது போல கலை இலக்கியத்துறையை ஆணாதிக்கம் நிலைநிறுத்தப்பட்ட ஒரு துறையாக பார்க்க முடியவில்லை. கலை இலக்கியம் சமூக விழிப்புணர்வுடன் சம்பந்தப்பட்டது. இங்கு சமூக இழிவுகள் வலுப்பெற முடிவதில்லை. இங்கு ஒருவர் தமது ஆத்மார்ந்த விழிப்புணர்வின் வீச்சு, வலிமை, கலையுணர்வின் ஆழத்தை பொறுத்து கௌரவம் பெறுவது இயல்பு தகுதியற்றவர் மதிப்பும் பெறார். இங்கு பெண்ணிலை வாதம் பேசுவது அயோக்கியத்தனம். சித்ரலேகா தமிழிலக்கிய விமர்சக விக்கிரமாக ஏற்கப்படவில்லை என்றால் அவரது ஆற்றலின்மையே காரணம்.

அவர் பெண் என்பதால் ஒதுக்கப்படுகின்றார் என்றால் அது பொய். ஈழத் தமிழிலக்கியத்தில் முதல் வரிசைக் கவிஞர்களில் ஒருவராக சிலகாலம் ஊர்வசி எண்ணப்பட்டார்- அவரது ஆற்றலே அதற்குக் காரணம்.

கோகிலாவையும் ராஜேஸ்வரியையும் கலையுணர்வுடைய எவரும் எழுத்தாளர்களாக ஏற்கமாட்டார். இதற்கு பெண்ணிலைவாத காரணங்களை விடவும் இலக்கியக் காரணங்களைத்தேடுவதுதான் சரியானது. தமிழிலும் இந்திய மொழிகளிலும் தமது கலைத்தரத்தின் காரணமாகவே பெருமதிப்பு பெற்றிருக்கும் பெண் எழுத்தாளர்கள்அநேகம்.

இந்த உண்மையைக் காண மறுப்பது-ராஜம் கிருஷ்ணன் பெற்றுள்ள அங்கீகாரத்தை காண விரும்பாது தட்டிக் கழிப்பதற்கும் காரணமான அதே ஆய்வு நேர்மையீனம் காரணமாகவே! (தாம் அடையத் துடிக்கும் பதவி அந்தஸ்து நலன்களுக்கு விரோதமாக உள்ள உண்மைகளை ஒதுக்குவதும் நிராகரிப்பதும் இயற்கையான ஒரு போக்கேயாகும்.)

பெண்ணிலைவாதம் பேசும் சித்ரலேகா இலக்கிய, அறிவுத்துறை வட்டாரங்களுக்கு வெளியே உள்ள பெண்கள் பற்றி சிரத்தை கொள்கிறாரில்லை. இதுதான் குட்டி முதலாளித்துவ அறிவு ஜிவிக்கூட்டத்தினராகிய அவரது வர்க்கக் குணாம்சத்தின் அசலான வெளிப்பாடுபோலும்.

இன்று பெண்கள் 'சமுகத்திலிருந்து அந்நியமாக்கப்பட்டிருப்பது, ஆண்களைவிட தாழ்ந்த மதிப்புடையவர்களாகக் கொள்ளப்படுவது' ஆகிய இரு சமூக நிலைமைகளையும் இவற்றிலிருந்து தோன்றும் பல பிரச்சனைகளையும் எதிர்கொள்கிறார்கள். புதிய சமுகத்தை உருவாக்க பொருளியல் அரசியல் விடுதலையோடு கூடவே இச்சமூக பண்பாட்டு வாழ்வு நிலைகளிலும் மாறுதல்கள் அடையப்பட வேண்டும். இவற்றுக்கான முயற்சிகளில்தான் பெண்விடுதலைப் போராட்டங்களின் பாத்திரம் உள்ளது. இந்த முயற்சிகள் ஆளும் வர்க்க, மேற்குடிப் பெண்களை இயல்பாகவே விலக்கி விடுவதாகும். இப்போராட்டத்திற்கு ஆளும் வர்க்க மேற்குடி நலன்களை பிரதிபலிக்கும் பெண்ணிலைவாதச் சித்தாத்தங்களுடன் கணக்குத் தீர்த்துக் கொள்வது இன்றியமையாததாக உள்ளது. இத்துறையில் தமிழ்ச் சமுகத்தின் மாக்சியர்கள ஈடுபடவேண்டும். அதுவரை இவர்களின் குறிப்புக்களும், அதற்குக் களமமைக்கும் உங்களைப் போன்ற இழிச்ச வாயர்களின் அசட்டு நடவடிக்கைகளும் தொடரும்.

- செ.ஈஸ்வரன்
16 July 1992

### கிளிண்டனின் வெற்றி...

(18ஆம் பக்க தொடர்ச்சி)

குறைந்த விலையிலான மனித உழைப்பு ஆகியவற்றை கொள்ளையிடுவதிலும், 20 கோடி நடுத்தர வர்க்கத்தைக் கொண்ட பரந்த சந்தையை அனுபவிப்பதிலும் தமது ஏகபோகத்தை நிறுவவே விரும்புகின்றனர்.

இதற்காக இந்தியாவை அணு ஆயுத பரவல் தடைக்கான ஒப்பந்தத்தில் சேரும்படி அமெரிக்கா வலியுறுத்துகிறது. மேலும் அமெரிக்க இந்திய புதிய இராணுவக் கூட்டை ஏற்படுத்தி தென்கிழக்கு ஆசியாவில் தனது அடிகளாக இந்தியாவை மாற்றவும், அமெரிக்கத் தலைமையின் கீழான புதிய உலக ஒழுங்கமைப்பை ஏற்றுக் கொள்ளும்படி செய்யவும் முயற்சிக்கிறது.

தரகு முதலாளித்துவ தலைமை யிலான இந்திய ஆட்சியாளர்களோ ஒரே ஏகாதிபத்தியத்தின் சார்பு நாடாக அல்லாமல் பல ஏகாதிபத்தியங்கள் போட்டியிடும் களமாக இந்தியா இருப்பதையே விரும்புகின்றனர். போட் டியிடும் ஏகாதிபத்தியங்களுக்கு இடை யிலான முரண்பாட்டை பயன்படுத்தி பேரம் பேசும் ஆற்றலைப் பெற்றிருப் பதையே இவர்கள் மேன்மைமிக்க சுதந்திரம் என பறைசாற்றுகின்றனர்.

இந்தியாவில் தனது ஏகபோக ஆதிக்கத்திற்கான அமெரிக்காவின் முயற்சிகள், இந்தியாவில் போட்டியிடும் பிற ஏகாதிபத்தியங்களுக்கும் அமெரிக் காவுக்கான முரண்பாட்டையும் ஏகாதி பத்தியங்களுக்கும் இந்திய மக்களுக்கு மான முரண்பாட்டையும் மேலும் ஆழப்படுத்தும்.

**தொகுத்துக் கூறுவோமெனில்:**

1. கிளிண்டனால் தனது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டபடி அமெரிக் காவில் தொழில் மந்தம், பொருளா தாரப் பின்னடைவு, வேலையின்மை, மக்களின் வாழ்நிலை வறுமை ஆகியவற் றைத் தீர்க்க முடியாது. இதனால் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கும் அமெரிக்க மக்களுக்குமான முரண்பாடு மேலும் வளரும்.

2. உலகளவில் அமெரிக்கத் தலைமையிலான புதிய உலக ஒழுங்க மைப்பை நிறுவுவது என்ற அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின்நோக்கமும் ஈடேறாது. மாறாக ஏகாதிபத்தியங் களுக்கு இடையில் நெருக்கடிகளும், முரண்பாடுகளும் ஆழப்படும். அதன் விளைவாக புதிய அரசியல் இராணுவக் கூட்டணிகளும் போட்டியும் வலுப் பெறும்.

3. அடுத்ததாக, இந்தியா உள் ளிட்ட மூன்றாம் உலக நாடுகளுடனான அமெரிக்க உறவுகள் முன்பிருந்ததைவிட ஆக்கிரமிப்புத் தன்மை மிக்கதாக இருக்கும். இது தவிர்க்க முடியாமல் ஏகாதிபத்தியங்களுக்கும், காலனிய நாட்டு மக்களுக்குமான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும்.

இவையனைத்தும் இன்றைய சகாப் தம் புரட்சிகர வர்க்கப், போராட்டங் களுக்கானதாக அல்லாமல் வெறும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் இன உரிமை போன்ற வர்க்க சார்பற்ற, ஜனநாயகப் போராட்டத்திற்கானதே என்று நமது நாட்டிலுள்ள ஏகாதிபத் தியத்தின் "அரசியல் விபச்சாரிகள்" கூறுவதற்கு மாறாக தேசிய விடுதலை, ஜனநாயகம் மற்றும் சோஷலிஷசத்திற் கான புரட்சிப் போராட்டங்களை உந்தித்தள்ளுவதாய் இன்றைய உலகின் புறநிலை யதார்த்தம் இருப்பதையே நமக்கு மீண்டும் அறிவுறுத்துகிறது.

இத்தகைய சூழலில் கிளிண்டனின் ஆக்கிரமிப்பு முயற்சிகளை எதிர்த்துக் கிளம்பப் போகும் பிற காலனிய நாட்டு மக்களின் புரட்சிப் போராட் டங்களுடன் இணைந்து போராட நாமும் தயாராகிக் கொள்ள வேண்டும்.

நன்றி 'சமரன்' ஜன,பெப். 93.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புகலிடங்களும் தோல்விகளும் பற்றி

மரியா பூஜெனியா ப்ராவோ



*இல்லை. 'சேனா'வின் கஷ்ட காலங்களோ*
*சிருஷ்டிக்கப்பட்ட யுத்த ஆலோசனைச் சபைகளின்*
*கடுமையான திடீர் விசாரணைகளோ இல்லை.*
*இல்லை. என் தோளிற் தாக்கிய குருட்டுத் துவக்கோ*
*விசாரணையின் பயங்கரக் கரும் முகமூடியோ*
*விளையாட்டரங்கங்களின் கருக்கலான நரகமோ*
*அவற்றின் அச்சுறுத்தும் கர்ச்சனைகளோ*
*என்னைத் தோற்கடிக்கவில்லை.*

*இல்லை. நம்மை வாழ்வினின்று துண்டாடும்*
*யன்னலின் இரும்புச் சட்டங்களோ*
*நம் வீட்டின் மீதான கண்காணிப்போ*
*களவான அடியெடுப்போ*
*பசியின் ஆழமான வாய்க்குட் சறுக்கியமையோ இல்லை.*

*இல்லை. என்னைத் தோற்கடித்தது என்னுடையதல்லாத வீதி,*
*அவசரமாக ஏற்பாடு செய்த வகுப்பிற் கற்ற இரவல் மொழி.*
*என்னைத் தோற்கடித்தது என்னுடையதல்லதான*
*தனிமையான நிச்சயமற்ற நெட்டாங்கு எண்:*
*கிறீனிச்* (Greenwich)
*பூஜ்ய நெட்டாங்கு,*
*வெறுமைக்கு அருகே.*

*என்னைத் தோற்கடித்தது அந்நிய மழையும்*
*சொற்களின் மறப்பும்*
*தடுமாறும் ஞாபகமும்*
*தூரத்து நண்பர்களும்*
*நான் காத்திருந்து*
*வராத கடிதங்களை நனைத்த*
*நம்மிடையிலான கொடிய சமூத்திரமும்.*

*என்னைத் தோற்கடித்தது தினந்தினமும்*
*'ஜெனிங்ஹம் வீதி'யில் ஏங்குவதும்*
*எலி.:பன்ற் அன் காஸில்' இல்*
*மூடுபனிக் கீழ் மனம் உழைவதும்*
*'லண்டன் பிரிஜ்'மீது விம்மி அழுவதும்.*
*நான் கடுமையான காலண்டரினால்*
*படிப்படியாகத் தோற்கடிக்கப் பட்டேன்;*
*மண்டே-திங்களுக்கும் ட்யூஸ்டே-செவ்வாய்க்கும்*
*இடையே ஒரு அந்நியனாய்ச் சுருங்கினேன்*

*என்னைத் தோற்கடித்தது*
*உன் மென்மை இல்லாது போனதுதான்,*
*என் நாடே.*

*(தமிழில்: மணி)*